# ஞானசம்பந்தம்

மலர் 14 ] ஜயயாண்டு பங்குனித்திங்கள் 10—4—55 [ இதழ் 5

தருமபுர ஆதீனப் பல்கலைக் கல்லூரியில்



குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ அடிகளார் அவர்கள் தலைமையில்
திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் சொற்பொழிவு

# உட்பொருள்


| எண். | | பக்கம். |
|---|---|---|
| 1. | புறத்துள் ஒரு பாட்டின் பொருள் ... | i-iv |
| 2. | திருவடி ... | 1 |
| 3. | அங்கமாலை ... | 8 |
| 4. | அறுமுகன் ஆடல் ... | 13 |
| 5. | பெரியபுராண விரிவுரை ... | 19 |
| 6. | பூலோக விமர்சனம் ... | 23 |
| 7. | திருசிய காவியப் பிரிவுகள் ... | 27 |
| 8. | பிறைநாறுஞ் சீறடி எம்பேதாய் ... | 31 |
| 9. | கலித்தொகையில் நாடகம் எப்படி? ... | 34 |
| 10. | தமிழ்ச் செய்யுட்களில் எழுத்திலக்கணம் ... | 38 |
| 11. | தூண்டு கோல்! ... | 42 |
| 12. | பிள்ளையார் சுழி ... | 48 |
| 13. | அன்னையினும் தயவுடையாய்! ... | 53 |
| 14. | தமிழர் திருமண முறைகள் ... | 58 |
| 15. | தருமை ஒரு திருக்கோயில் ... | 62 |
| 16. | மாசில் வீணை ... | 65 |
| 17. | அறுபத்துமூவர் வரலாறு ... | 71 |
| 18. | வருங்காலம் ... | 76 |
| 19. | ஆதீனத்திலும் ஆதீன தேவஸ்தானங்களிலும் | 80 |
| 20. | மதிப்புரை | 52, 57, 64, 92 |


---

கடிதம்: வணக்கம்!

திருநின்றியூர் ஸ்ரீ லக்ஷ்மிபுரீசுவர சுவாமிகோயிலில் 7உ அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது தெரிந்தது. பத்திரிகை கிடைத்தது. நன்றி.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் இத்தகைய திருத்தொண்டுகளை இடையீடின்றிச் செய்து வருவது தமிழ்நாட்டின் பாக்யம்.

அன்பன்,

கி. வா. ஜகந்நாதன்.

ஆசிரியர், கலைமகள், சென்னை.

305

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 14 } ஜயயாண்டு பங்குனிமாதம் 10—4—55 { இதழ் 5

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## புறத்துள் ஒரு பாட்டின் பொருள்

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு என்னும் பகுப்புடைய பண்டைய தமிழ் நூல்களைப் பலரும் அறிவர். எட்டுத்தொகையுள் அகம் புறம் என்று இரண்டு அடங்குதலும் பலர் அறிந்ததே. அகம் - அகநானூறு. புறம் - புறநானூறு. அப்புறப்பாடல் நானூறும் (அகம் அல்லாத) புறப்பொருளை உணர்த்துவன. அவற்றுள் ஒன்று இங்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன் காரணத்தை அறிவதும் நலம் பயக்கும்.

இவ்யாண்டு, தருமைப் பல்கலைக் கல்லூரியில் கற்றுப், புலவர் தேர்விற்குச் செல்லும் மாணுக்கர் எல்லோரும் தம் நன்றியறிதற் கூட்டத்தில், ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்களுக்குத் தம்தம் நன்றியறிதல் விளங்கப் பேசினர். அப்போது, திரு. சொக்கலிங்கம் எனப் பெயரிய மாணுக்கர்

'எந்தை வாழி ஆதனுங்க' என்ற (175) புறப்பாடலைச் சொல்லி, அதன் கருத்தொடு பொருத்தி, தமது நன்றியைப் புலப்படுத்தினர். அதற்குப் பழையவுரையில் உள்ள பொருள் கோளின் அமைதியை 1952 இல் கற்ற மாணக்கர்க்கு விளக்கியது நினைவில் வந்தது. அதை இதில் வெளியிட்டால், தமிழர் பலர் அறிதலும் தமது கருத்தை அறிவித்தலும் கூடும்.

> "[1]எந்தை வாழி ஆதனுங்க[2]என்
> நெஞ்சம் திறப்போர் நிற்காண் குவரே
> [3]நின்னியான் மறப்பின் [4]மறக்குங் காலை
> [5]என்னுயிர் யாக்கையிற் பிரியும் பொழுதும்
> [6]என்னியான் மறப்பின் மறக்குவென் "

என்பது அப்பாடலின் முற்பகுதி. பிற்பகுதி ஆதனுங்கனது சிறப்புணர்த்துவது.

"[1]என்னுடைய இறைவ! வாழ்வாயாக; ஆதனுங்க! ([2]யான் ஒன்றைச் சொல்ல நினைப்பின், நினது புகழல்லது சொல்லாமையான்.) எனது நெஞ்சை வெளிப்படுத்திக் காண லுறுவோர் (ஆங்கு) நின்னைக் காணுநிற்பர்; [3]**நின்னை (யுடைய) யான்** (நின்னை) **மறப்பின்** [4]மறக்கும் காலமாவது (சொல்லக் கேட்பாயாக;) [5]என்னுடைய உயிரானது என்னுடம்பை விட்டு நீங்கும் காலத்தும் [6]**என்னை யான் மறக்கும் காலம் உண்டாயின்,** (அப்பொழுது) மறப்பே (னல்லது மறவே)ன்."

இது பழையவுரை எனப்படுவது. இதில் ஐந்து அடிகள் உள்ளன. மூன்ருவது அடியை நான்காவது ஐந்தாவது அடிகளொடு இயைத்துப் பொருள் கொள்ளப்பட்டமை இவ்வுரையில் வெளிப்படுகின்றது. வருவித்துக் கொண்டவற்றை இருதலைப் பிறைக்குள் காட்டியுள்ளேன். 'நின்னியான்' (நின்+யான்,) 'என்னியான்' (என்+யான்) இரண்டும் தொடர்நிலையால் ஒரு தன்மையன. இடையில் உள்ள இகரம் வருமொழி முதலாகிய யகரம் பற்றியது. களிறு+யாது=களிறியாது என்றதிலுள்ள இகரமே இது. அது குற்றிகரம். இது முற்றிகரம். யகரத்தின் ஒலித்

தொடக்கம் இகரம். அதனால், யகரமொழி முதலில் இகரம் இயையும். இயக்கன், இயமன் முதலிய சொற்களையும் இ - ஈ - எ - ஏ - யா என்னும் மோனை யெழுத்துக்களின் இயைபையும் அறிவார்க்கு இது தெளிவாகும். ' நின்யான் ', ' என்யான் ' என்பவற்றில், ' நின் ' என்பது ' நீ ' என்றதன் திரிபு. ' யான் ' என்பது பெயர்ச்சொல். நின்னையான், என்னையான் என்று இரண்டாவது விரித்தலே ஏற்றது. இப்பழையவுரையிலும் ' என்யான் ' என்றதற்கு ' என்னை யான் ' என்றே பொருளுரைத்திருத்தல் காண்க. ' நின்யான் ' என்றதற்கு உரைத்தது பொருந்தாது. ' நின்யான் மறப்பின் ' என்பதற்கு நின்னையான் மறப்பின் என்றே பொருள் கொள்ளல் வேண்டும். நின்னையுடைய யான் என்றால், ' மறப்பின் ' என்றதற்கு நின்னை என்று மீண்டும் வருவித்தல் வேண்டும். அது மிகையாகும்.

மூன்றாவதடியைப் பின்னடிகளோடு சேர்த்துப் பொருள் கொள்ளவே, 'மறக்குங்காலை' 'பிரியும் பொழுது' என்பவற்றுள் முதலாவதை எழுவாயாக்கவும் அதற்கு ஏற்பச் 'சொல்லக்கேட்பாயாக' என்பதை வருவிக்கவும் வேண்டினார் அவ்வுரையாசிரியர்.

'மறப்பின்' என்ற ஈரிடத்தும். ஒரேவகையில் பொருள் எழுதிலர். 'யான் ஒன்றைச் சொல்ல நினைப்பின்' என்று வருவித்தல் வேண்டாதது.

எந்தை வாழி ஆதனுங்க; நின்னை யான் மறப்பின், மறக்கும் (அக்)காலை(யில்) என் நெஞ்சம் திறப்போர் (அந்நெஞ்சினுள்) நின்னைக்காண்குவர் என்று முதல் மூன்றடிகளையும் ஒருதொடராக்கியும்; என் உயிர் யாக்கையின் நீங்கும் பொழுதிலும் என்னையான் மறப்பின், மறப்பேன் என்று பின் ஒன்றேமுக்காலடியையும் ஒருதொடராக்கியும் பொருளுரைப்பதே ஆசிரியர் ஆத்திரையனார் உள்ளக் கிடையாகும்.

முதலாவது தொடரினது கருத்து:- யான் மறந்தாலும் என் நெஞ்சம் மறவாது. யான் மறக்கும் காலத்தில் என் நெஞ்சினை வெளிப்படுத்திக் காண வல்லவர் அது செய்து நின்னைக் காண்பர்.

இரண்டாவது தொடரினது கருத்து:- என்னை யான் மறப்பது பேரின்ப நிலையில் அன்றி வேறு எப்பொழுதும் இல்லை. அதனால் என்னை மறப்பது என்றும் இல்லை. யான் இவ்வுடலின் நீங்கும் (இறக்கும்) பொழுதும் என்னைமறத்தல் இல்லை. என்னை யான் மறவாமையால், உன்னை மறத்தலும் இல்லை.

'நற்றவா உனைநான் மறக்கினும் சொல்லும்நா நமச்சி வாயவே' என்பது போன்றது முதலாவது. யான்வேறு நீவேறு அல்ல. யானே நீ. நீயே யான் என்னும்படி ஒருமை யுற்றதால், என்னை மறத்தல் என்றும் இல்லை. அதனால் உன்னை மறத்தலும் இல்லை என்பது இரண்டாவது.

இதனால், உணரக்கிடப்பது, முதல் மூன்றடியும் ஒரு தொடர். அடுத்த ஒன்றே முக்காலடியும் மற்றொரு தொடர். முதலாவது தொடரில், 'காண்குவர்' என்பது பயனிலை இரண்டாவது தொடரில் 'மறக்குவென்' என்பது பயனிலை, 'நின்னியான் மறப்பின் 'மறக்கும் காலை' என்றது முன்னதற் குரியது. 'என்னுயிர் ... பிரியும் பொழுதும் என்னியான் மறப்பின்' என்றது பின்னதற்குரியது.

திறப்போர் காண்குவர், யான் மறக்குவென் என்ற இருவேறு தொடர்ப்பொருளும் தனித்தனி மறப்பின்' என் றும் 'மறக்குங்காலை' 'பிரியும் பொழுதும்' என்றும் இரு முறைவரும் சொற்பொருள்களைக் கொண்டன. யான் நின்னை மறப்பின் என்றதாலும், என்னை மறப்பின் என்றதாலும், மறவாவுறுதியைத் தோற்றி நின்றார். நெஞ்சிலுள்ள மறவா நிலையை யான் உணர்வதன்றிப் பிறர் உணரார் என்பது விளங்க, 'திறப்போர் காண்குவர்' என்றார். 'நின்னை மறப் பின் காண்குவர் எனவே மறவாமையின், வீணே திறந்த தம் செயலுக்கு இரங்குவர் என்றதாம், உடம்பிலுள்ள காலத்தில், என் நெஞ்சைத்திறந்து காணவல்லார் காணலாம், உடம்பின் நீங்கிய காலத்தில், என்னைக்காண வல்லார் யார்? அதனால், மறவாமையை யானும் என்நெஞ்சும் அன்றிப் பிறர் அறியார் என்றவாறும்.

309



# திருவடி

தருமபுர ஆதீனப் புலவர், சித்தாந்த ரத்நாகரம்,

திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்

திருவடியென்று கேளாதவர் சைவ வைணவ சமயத்தவருள் எவரும் இரார். வேறு சமயத்தவருள்ளும் பலர் கேட்டிருப்பர், நீதி நூல்களுட் சிறந்த திருக்குறளிலும் முதலதிகாரத்தில் 'அடியும்அடிசேர்தலும் உணர்த்தப்பட்டுள்ளன'. 'இறைவனடி' சேர்தலே வீடுபேறு என்று திருவள்ளுவரும் குறித்துள்ளார். நிலமிசை நீடுவாழ்தலென்று பேரின்ப வாழ்வும் குறிக்கப் பட்டது. நிலமிசை - மிசைநிலம் - மீதானம் என்று பேரின்ப வீட்டைக் குறித்தல் பெரியோர் வழக்கம்.

அவ்வீட்டில் உயிர்கள் அடிசேர்தல் என்றால் அவ்வடி எவ்வடி என்னும் ஆராய்ச்சி இன்றியமையாததாகும். அது பற்றி இதில் சுருக்கமாக எழுத விருப்பம் எழுந்தது. இவ்விருப் பமும் அத்திருவடியால் உண்டானதே.

'சிவன் அருவுருவும் அல்லன் சித்தினோடு அசித்தும் அல்லன்' என்று (சித்தியார் 90.) உள்ளதால், இறைவன் அருவம், உருவம், அருவுருவம் மூன்றும் கடந்தவன், அவன் மும்மலமும் நீங்கிய உயிரறிவில் தங்கிநின்று உணர்த்தும் முதன்மையுடைய வன், முற்றறிவும் முற்றுத் தொழிலும் இயல்பாகவுள்ளவன். உருவம் எல்லாம் மாயையின் காரியங்கள். மலசம்பந்திகளாகிய உயிர்களுக்கு மாயாகாரிய வடிவம் உண்டு. அதனால் எய்தும் சிற்றறிவு (ஏகதேச ஞானம்) உண்டு. உயிர்கள் ஆதி முத்த சித்துருவாதற்குரியன. சித்துரு - ஞானசொரூபம். அச்சத்தியுரு வமே மலம் நீங்கிய உயிர்கட்கு வியாபக அறிவைச் செய்யும்.

உருவம், அருவுருவம், அருவம் மூன்றும் ஆறத்துவாக்களுக் கும் உட்பட்டவை. இறைவன் ஆறு அத்துவாக்களையும் கடந் தவன். ஆகாயம் முதலியவை அருவப் பொருள்கள், நிலம் முதலியவை உருவப்பொருள்கள், சந்திரன் முதலியவை அரு வுருவப் பொருள்கள். இறைவனுக்கு அருவம் முதலிய மூன்றும் இருப்பின், அவனையும் ஆகாயம் நிலம் சந்திரன் முதலிய

பொருள்களுள் ஒன்ருகக்கொள்ளத்தான் வேண்டும். கொண்டால், அவனது இறைமைக்கு இழுக்குண்டாய்விடும். அநாதி முத்த சித்துருவனுகிய இறைவன் பசுத்துவம் பாசம் இரண்டும் இல்லாதவன். அவனுக்கும் அவை உண்டென்னும் குற்றம் ஏற்படும். அருவமெல்லாம் உருவமாய்த் தோன்றலும் உருவமெல்லாம் அருவமாய் அழிதலும் ஒருதலே. அதனல் அவற்றிற்கு வரம்புண்டு. அவ்வரம்பும் இறைவனுக்குண்டு என்று கொள்ள நேரும். பரதந்திரத்தால் விகாரப்படுதலும், சிற்றுணர்வு சிறு செயல்களால் ஏகதேசப் படுதலும், விருப்புவெறுப்புக்களால் துடக்குறுதலும் உருவம் முதலிய மூன்றும் உடையவற்றிற்கு உள்ளன. இறைவன்பால் அப்பரதந்திர விகாரமும், ஏகதேசம் அடைதலும், பந்தமும் ஆகும் மூன்றும் இல்லாமையால் அவனுக்கு உருவமாதியில்லே என்றே தெளிவாகும். அவன் அருளுருவம் உடையவன். அருள், ஞானம், அறிவு, உணர்வு எல்லாம் ஒரு பொருளனவாய் நூலோர் ஆட்சியிற் காணப்படுகின்றன. இறைவனது உருவம் அவ்வருளில் கொள்ளப்படுவது. அவ்வுருவில் திருவடியும் அமைகின்றது.

"உருவருள்குணங்க ளோடும் உணர்வருள் உருவில் தோன்றும்
கருமமும் அருள்அ ரன்தன் கரசர ணுதி சாங்கம்
தருமருள் உபாங்கம் எல்லாம் தான் அருள் தனக்கொன்றின்றி
அருளுரு உயிருக் கென்றே ஆக்கினன் அசிந்தன் அன்றே"

என்னும் சிவஞானசித்தியாராலும், அவ்வருளுருவம் சித்தித்தது.

அருளுருவத்தில் திருவடி எவ்வாறு இருந்திலங்கும்? மாயையுருவத்தில் இருக்கும் அடிகளேப்போல எழுவகைத் தாதுவால் ஆன அடியோ இறைவன் திருவடி? திருவடியை அஞ்சு விரலும், நகமும், குதியும், அகமும், புறமும், சிறமும், மென்மையும், நரம்பும், நாடியும், தசையும், விசையும், பிறவும் உடைய அடியாகக்கருதுவதும் பேசுவதும் பெருங்குற்றம். நம் தொல்லாசிரியருள் ஒருவர்.

"அஞ்சு விரலாய்க் குதியாய் அகம்புறமாய்
விஞ்சு நக மாய்ச்சிவந்து மெல்கியிரா — துஞ்சா
துலேமீது வெண்ணெயென உள்ளுருக்கும் என்றன்
தலேமீது வைத்தசிவன் தாள்"

என்று பாடிய வெண்பா அத்திருவடியை அறிவிக்கின்றது. சிவப்பிரகாசச் சிந்தனே யுரையாசிரியர் இவ்வெண்பாவையடுத்து

"உயிருக்குத் தலையும் சிந்தையும் இவையென்றும் சிவனுக்குத் தாள் முதலியன இவை என்றும் குருமுகமாய் அறிக" என்று எழுதியிருப்பது குறிக்கொள்ளற்பாலது.

திருக்கோயிலில் இலங்கும் திருவுருவங்களில் திருவடி காணப்படும். சிவலிங்கத்தில் திருவடி காணப்படவில்லை. அதற்கும் திருவடி உண்டு. ஞானபூசையில் திருவடி குறிக்கப் பட்டிருத்தல் அப்பூசையைச் செய்வார்க்குத் தெரிந்ததே.

உயிர்கள் உடம்பையும் ஆறு அத்துவாக்களையும் கடந்து சிவபெருமான் திருவடியை வழிபடுதல் வேண்டும் என்பது வேதாகம விதி. அத்துவாக்களையெல்லாம் கடந்த இடத்தில் இருக்கும் திருவடி நிலையை அறிந்தாலன்றி அங்கு அத்திருவடியை வழிபட்டுய்வது எவ்வாறு கூடும்? சிவபூசை செய்பவர் பலர் இவ்வுண்மையை உணர்ந்து வழிபடக் கடவர். பூசை முறைகளை மட்டும் உணர்ந்தோரே பலர். பூசையில் உணரத் தக்க ஞானச் செய்திகளை உணர விருப்பமும் முயற்சியும் உடையார் சிலர் தாமும் இலர். பூசிப்பவர் பலரிடம் பேசி அறிந் ததால்தான் இதைத் துணிந்து வெளியிடலானேன். ஆசனம், மூர்த்தி, மூலமும் அறியாமல் பூசிப்பவர் பற்பலர். அம்மூன் றனையும் தெளிய உணர்ந்தாலன்றிப் பூசைப் பயனை அடைதல் இயலுமோ? என்றெடு அவற்றைப்பற்றிச் சொல்லாடியவர் பலர். அவருள் ஒருவரும் மூர்த்தியையும் மூலத்தையும் அறிந்து சொன்னாரல்லர். அவற்றை அறிந்தோர் பூசைசெய்யுங்கோயிலில் தான் ஆண்டவனது அருள் விளக்கம் அமையும். ஏனையோர் கல்லெனக் கருதிக் கழுவி வயிற்றை நிரப்பி ஊனோம்பும் வாழ்க்கையராவர் என்று பலர்சொல்லக் கேட்பது வருத்தம் தருவதாகும். கிரியா விதியை மநநம் செய்து விடுதலே போதும் என்ற கொள்கை பெரிதாயுளது. அக்கிரியையால் வரத்தக்க ஞானத்தை அடைதலே குறிக்கோளாதல் வேண்டும். அக் குறிக்கோள் எய்தும் அறிஞர்க்கே பூசையின்பயன் உண்டாகும்.

'யான்' என்றும் 'எனது' என்றும் இருவேறு செருக்கு உயிர்கட்கு உண்டு. 'யான்' என்பது ஆன்மாவைக் குறிப்பது. இக்குடத்தை யான் அறிந்தேன் – அறியேன் என்னும் இடத் தில், அச்சுட்டுணர்விற்கு விடயம் புறத்தே உள்ள குடம்

ஆகும், யான் என்னும் உணர்விற்கு விடயம் அந்தக்கரணங்
களை அதிட்டிக்கும் ஆன்மா ஆகும். அறிந்தேன் என்னும்
உணர்விற்கு விடயம் அவ்வான்ம போதம் ஆகும். அறிகின்
றிலேன் என்னும் உணர்விற்கு விடயம் அறியாமையாகும்.
ஆகவே, பசு பாசங்கள் பாச ஞானத்திற்கு விடயமாதல் கண்
கூடாம். மெய்யுணர்விலாதார் உடம்பு முதலியவற்றை 'யான்'
என மதிப்பினும், 'யான்' என்னும் உணர்விற்கு விடயம்
ஆன்மாவே என்க. எனவே யான் என்னும் ஞானம் அகத்துப்
பொருளும் 'எனது' எனப்படுவது புறத்துப்பொருளும் ஆகும்.
யானெனப்படுவது ஞாதா. எனதெனப்படுவது ஞானமும் ஆம்.
அதற்கு விடயமாய் எனது எனப்படும் ஞேயமும் ஆகும்.
யானென்பதை அகங்காரம் அகந்தை என்றும், எனதென்பதை
மமகாரம் – மமதை என்றும் வழங்கும் உலகம். 'யானென
தென்னுஞ் செருக்கு அறுப்பான் வானோர்க்கு உயர்ந்த உலகம்
புகும்' என்னும் குறளுரைக்கண் பரிமேலழகர் எழுதியவற்றை
இங்கு நோக்குதல் நன்று. யானென்பது பசு. யானென்னும்
ஞானம் பசுஞானம். எனது எனப்படுவது பாசம். எனது
எனப்படும் ஞானம் பாசஞானம். எனது எனப்படுவது
பொருளாங்கால் ஞேயம் ஆகும். பாசஞானத்திற்கும் பசு
ஞானத்திற்கும் எட்டாதது பதி. அப்பதியை அப்பதியினது
ஞானத்தால்தான் காணலாகும். இதனைச் சிவஞானபோதம்,
"ஊனக்கண் பாசம் உணராப் பதியை ஞானக் கண்ணினிற்
சிந்தை நாடி" என்றது. சிவஞானசித்தியார், "பாசஞானத்
தாலும் பசுஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத்
தாலே நேசமொடும் உள்ளத்தே நாடிப் பாத நிழற்கீழ் நில்"
என்றது. "அவனருளே கண்ணாகக் காண்' என்றது தமிழ்
மறை. "அவன் அருளாலே அவன்தாள் வணங்கு" என்றும்
உணர்த்திற்று.

பதி ஞானத்தாலே பார்க்கத்தக்க பதிக்குத் திருவடி,
ஞானம் ஆக–ஆநந்தம் ஆக இருத்தல் வேண்டும். அத்திருவடி
ஞானம் – திருவடியின்பம் இருதிறமாக அமையும். 'யான்'
என்பது அற்ற திறம் ஒன்று. எனது என்பது அகன்ற திறம்
மற்றொன்று. அகந்தையும் மமதையும் அற்ற இரு திறமும்
ஆண்டவனுக்கு இரண்டு திருவடியாக உபசரித்துக் கூறுவன
மெய்ந்நூல்கள். 'யான்' 'எனது' ஆகும் இரண்டும் அற்ற
உயிர்க்கண் சிவசத்தி பதியும். அறாத உயிர்க்கண் பசு போதமும்

பாசஞானமும் அன்றிச் சிவசத்தி விளக்கம் இராது. இதனை, உண்மை நெறி விளக்கம் 'பரை உயிரில் யான் எனது என்று அறவின்றது அடியாம்' என்று விளக்குகின்றது. இதையே குமரகுருபர சுவாமிகள் "யான் எனது என்று அற்ற இடமே திருவடி" என்று அருளினர்கள். திருவாவடுதுறைக் குருமூர்த்திகளாகிய ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள் அருளிய தெனும் அநுபோக வெண்பாவில், "என்னது யான் அற்றால் இறைவனடி தானகும்" என்றதும் அறியத்தக்கது. அவற்றால் அடி, சிவஞானமே என்பது தெளிவாகும். ஆகவே, அடியார் சிவஞானியர் ஆவர். இவ்வுண்மையைத் திருமந்திரம் "அடியார் சிவஞானமானது பெற்றோர்" என்றும், "அடியார் அரனடி யாநந்தங் கண்டோர், அடியாரானவர் அத்தருள் உற்றோர், அடியார்பவரே அடியவராமால், அடியார் பொன்னம்பலத்து ஆடல் கண்டாரே" என்றும் உணர்த்துகின்றது. "அடியெனும் அதுவும் அருளெனும் அதுவும் அறிந்திடின் நிர்க்குண நிறைவு" என்றருளினர் தாயுமானர்.

> "ஆரியனும் ஆசான்வந்து அருளால் தோன்ற
> அடிஞானம் ஆன்மாவில் தோன்றும்"

என்றதால் ஆன்மாவில் தோன்றும் அடிஞானத்திற்கு உரிய ஞேயம் வேறு எங்குத் தோன்றும்? எங்கும் நிறைந்த ஞேயம் ஆன்மாவில் தோன்றினல் ஆன்மா அறியும். ஞானமும் ஞேயமும் ஆன்மாவில் தோன்றல்வேண்டும். அந்த ஞானமே அடி. ஞேயமே முடி, அதனை.

"முடியெனும் அதுவும் பொருளெனும் அதுவும் மொழிந்திடின் சுகம்" என்றருளிய தாயுமானவர் திருவாக்கால் தெளிக, "துன்னும் அவனே தானக அடையின் முடியாம்" என்று அநுபோகவெண்பாவும், "உரையிறந்த சுகமதுவே முடியாகும்" என்று உண்மைநெறி விளக்கமும் உணர்த்தின. இங்கு "அடிமுடி" என்றவற்றை நோக்கின். அடி என்பதற்குத் திருக்காலடிகள் என்ற கருத்துக்கு இடமில்லையெனல் தெளிவாகும்.

"மல வாசனை ...... நீங்கினலன்றி முதல்வனது திருவடியாகிய சிவாநந்தத்தை அநுபவித்தல் கூடாது"

[சிவஞானபோத மாபாடியம் சூ. 10. அதி. 1]

314



"முதல்வன் திருவடியாகிய சிவாநந்தாநுபூதியைத் தலைப் படும்" [டி 11] என்று ஆசிரியர் சிவஞான மாமுனிவர் அருளியவாற்றால், திருவடியாதல் இன்னது என்று இனிது விளங்கும். விளங்கினும் உருவவழிபாடு செய்யும் அன்பர்க்குச் சகளமாகிய அத்தூலவடிவத்தில் உள்ள அடி (பாதம்) இல்லை யென்று கொள்ளல் ஒல்லாது. அரு, உருவில் இல்லை

புறப்பூசை செய்வார்க்கு, அவரவர் பக்குவ பேதத்திற்கு ஏற்பத், திருவடியுணர்வும் வேறுபடும். சிவஞான போதத்தில் "பொல்லார் இணைமலர் நல்லார் புனைவர்" என்பதன் உரையில், சிவஞான மாமுனிவர் ஞானசத்தி கிரியசத்தி இரண்டனையும் திருவடி என்கின்றது. ஞான பூஜாவிதியின் உரை, திரோதான சத்தியையும் கிரியா சத்தியையும் திருவடி என்கின்றது. அண்மையில் அடையாற்றினின்று வெளியிடப்பெற்ற திருவாசக வுரை "திருவருளான திருவடி" (பக்கம் 9) என்கின்றது.

சிற்றம்பல நாடிகள் சாத்திரக் கொத்தில், வேறு எங்கும் காண்டற்கு அரிய அநுபவப் பொருள்கள் கிடைக்கின்றன, ஆங்கு,

> "அருவும் உருவும் அருவுருவும் ஆன
> *உருமை ஒழிந்திடத்தில் உறுவதுவும் எக்காலம்?"

என்று ஒரு கண்ணி, திருவடி நிலையைச்சுட்டி, அதை அடையும் காலத்தை வேண்டத் தூண்டுகின்றது. அதற்கு "யான்" "எனது" என்னும் செருக்கு அற்றொழிதல் இன்றியமையாதது என்பதை வற்புறுத்த,

> "ஊனம் இலா இன்ப உருவே உருவாகி
> யான் எனது நீங்கி இருந்துவிடும் நாள் ஏதோ?"

என்று திருவடியின் சொருபத்தையும் அதை அடைந்தால்வரும் இலாபத்தையும் விளக்கிற்று.

சிவாநந்தாநுபூதி பெற்றவர்க்குச் சிவபிரானும் திருவடியும் திருமுகமும் திருமுடியும் பிறவும் ஆகிய எல்லாம் ஆனந்தமே அன்றி வேறில்லை.

---

* உருமை – உருவாந்தன்மை.

" ஆநந்தமே செவி அம்புயத் தாளிணை அங்கைகளும்
ஆநந்தமே திருக் கண்ணும் செவ் வாய்அருள் மேனியெல்லாம்
ஆநந்தமே அருட் சிற்றம்பலவர் அருட் பொருளும்
ஆநந்தமே அவன் தில்லையும் காழியும் ஆநந்தமே"

என்று கலித்துறையிலும்,

" அண்ணலும் ஆநந்தம் அருளும் ஆநந்தம் உயிர்
எண்ணிலா ஆநந்தம் எவ்வுலகும்—பண்ணி
அளித்தழிப் பார்ஆகும் அவர்களும் ஆநந்தம்
களித்து அதுவே எப்போதும் காண் "

என்று துகளறுபோதத்திலும் வரும் மெய்ஞ்ஞானப்பாடல்களை உற்றுநோக்கி, திருவடியை உணர்ந்து கொள்வது சிவ வழிபாடு உடையார்க்கு இன்றியமையாத முதற்கடனாகும்.

"பிறவா யாக்கைப் பெரியோன் பாதக்
கடவுள் மாமணி சுடர்விடப் புனைந்த
ஞான மாமுடி சுமந்த கோமகன்"

[ஞானமிர்தம் 33]

என்பதில் திருவடி ஞானமும் அதனால் எய்தும் சிவாநந்தமும் உணர்த்தியுள்ள உண்மையைக் கருத்தூன்றி உணர்க, கழல் சிலம்பு என்றவற்றால் கலக்கம் எய்தற்க.

திருச்சிற்றம்பலம்

"தெருளுமா தெருளமாட்டேன் தீவினைச் சுற்றமென்னும்
பொருளுளே அழுந்தி நாளும் போவதோர்நெறியுங் காணேன்
இருளுமா மணிகண்டா நின் இணையடி இரண்டும் காண்பான்
அருளுமாறு அருள வேண்டும் அதிகை வீரட்டனீரே.

(திருமுறை 4, 26, 4,)

திருச்சிற்றம்பலம்

வாழ்க திருவடி! வளர்க பேரின்பம்!!

516



# அங்கமாலை

வித்துவான் திரு. மு. சண்முகம்பிள்ளை அவர்கள்

(மலர் 14 இதழ் 4-ன் தொடர்ச்சி)

## அங்கங்களைத் தொழிற் படுத்தும் திருப்பதிகம்

திரு அங்கமாலையில் திருநாவுக்கரசர் தம் அங்கங்களை முறைப்பட இறைவன் திருப்பணியில் ஈடுபடுத்தியதைப் பார்த்தோம். தமது மற்ருெரு திருப்பதிகத்தில் அங்கங்களின் செயல்களை வரிசையாகக் குறிப்பிடுகின்ருர். இவ்வாறு அமைந்துள்ள பதிகம் திருநாகைக்காரோணத் திருக்குறுந் தொகையாகும். இறைவனைப் புகழ்ந்து துதித்தல் முதலியன செய்வார் வினையினின்று விடுதலை பெறுவர் என அங்கங்களின் தொழில்களை வரிசைப்படக் கூறுகின்ருர்.

பாணத் தால்மதில் மூன்றும் எரித்தவன்
பூணத் தான்அர வாமை பொறுத்தவன்
காணத் தான்இனி யான்கடல் நாகைக்கா
ரோணத் தான்என நம்வினை ஓயுமே (1)

என்பது முதற்பாடல். இதில் முதல் மூன்றுவரியிலும் இறைவனை, அம்பினுல் திரிபுர மதில்களை எரித்தவன்; ஆபரணமாக அரவு கொண்டவன்; ஆமையைத் தாங்கியவன்; இனியவன்; திருநாகைக் காரோணத்தான் என்று புகழ்கிருர். இங்ஙனம் புகழ்மொழி கூற நம்வினைகள் ஒழியும் என்று துதிப்பார் பெறும் பயனையும் இறுதிவரையில் சுட்டி உரைக்கின்ருர். இங்ஙனமே இதில்வரும் ஒவ்வொரு பாடலிலும் முதல் மூன்று வரிகளில் இறைவன் புகழ்கூறி, இறுதியில் அவனைக்காணுதல் முதலியன செய்வார் வினைகள் நீங்கும் என்று உரைத்தல் காணலாம். ஏனைய பாடல்களில் காணல், சொல்லல், வலங்கொள்ளல். தொழல், மனங்கொள்ளல், சிந்தை செய்தல் முதலிய தொழில்களை முறைப்பட அருளிச்செய்துள்ளார்.

.... .... .... நாகைக் காரோணனைக்
கண்டலும் வினையான கழலுமே 2
நினையவே வினையாயின நீங்குமே 3
சொல்லவே வினையானவை சோருமே 4
ஐயனைத் தொழுவார்க்கு அல்லல் இல்லையே 5
வலங்கொள் வார்வினையாயின மாயுமே 6
மனங்கொள் வார்வினையாயின மாயுமே 7
சிந்தை செய்யக் கெடுந்துயர் திண்ணமே 8
செருவனைத் தொழத் தீவினை தீருமே 9
.... .... .... பாதம் அணைதரத்
தொடர அஞ்சும் துயக்கறுங் காலனே 10

இங்ஙனம் இப்பதிகத்தில் அங்கங்களின் தொழில்கள் வரிசையாக வந்துள்ளன. இவை முறையே கண், வாய், கால், கை, மனம் சிந்தை இவற்றிற்குரிய தொழில்களாகும். ஆகவே. இப்பதிகம் அங்கங்களை வரிசைப்படப் போற்றியுரைக்கும் அங்கமாலை அமைப்பைப் பின்பற்றியது எனலாம். இறுதியில் இறைவன் திருப்பாதம் சேர்ந்தால் எமன் நம்மை அணுகுதற்கு அஞ்சுவான் என்று அவனது பாதங்களைக் குறித்துள்ளார். ஆகவே, அவன் திருப்பாதம் அழிவற்ற முத்தியின்பத்தைச் சேர்க்கும் என்பது வெளிப்படுகிறதல்லவா ?

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் ; நீந்தார்
இறைவனடி சேராதார்

என்பது வள்ளுவர் வாக்கு.

## தொண்டர்களின் தீவிர ஈடுபாடு

அங்கங்களை அழைத்து, 'கண்காள் காண்மின்கள்', கண்டலும் வினையாயின கழலும்' - என்று கட்டளை முறையிலும் அறிவுறுத்தும் முறையிலும் கூறுவது போலன்றித் தம் அங்கங்கள் இறைபணியிலல்லது வேறு உலக காரியங்களில் ஈடுபடாது என்றும் பக்தர்கள் போற்றியுள்ளனர்.

நிறையும் புனல்சடைமே லுடையடிகள் நின்றியூரில்
உறையும் இறையல்லாது எனதுள்ளம் உணராதே 3
நின்றி, யூரன் கழலல்லாதெனது உள்ளம் உணராதே 6
நெல்லின் பொழில் சூழ்ந்த நின்றியூரி னிலையாரெம்
செல்வன் அடியல்லாது என சிந்தை உணராதே 7

நெறியில்லவர் குறிகள் நினையாதே நின்றியூரில்
மறியேந்திய கையானடி வாழ்த்துமது வாழ்த்தே 10

என்று திருஞானசம்பந்தர் இறைவனைப் போற்றுகின்றார். 'மறந்தும் புறந்தொழா மாந்தர்' என்னும் சிறப்பிற்குரியராய இறைவன் ஒருவனே தனக்குத் தாரகம் எனத் தனது கருவி கரணங்களெல்லாம் அவன் வயத்தனாகி நிற்கின்ற பெருநிலையை இங்குக் காண்கிறோம்.

சம்பந்தப் பிள்ளையாரது வாக்கின் அடிச் சுவட்டில் பிற மதத்தைச் சார்ந்த ஞானிகள் சிலரும் ஆண்டவன்பால் அன்பு மீதூர்ந்து உருகிப் பாடியுள்ளனர். சிலப்பதிகாரத்தில் கவுந்தி என்ற அருகமத சந்நியாசினி ஒருத்தி அருகதேவனுக்குப் புனையும் புகழ்மாலை ஒன்று உள்ளது. அருகதேவனது பெருமைகளைப் பலபடப் புனைந்து கூறித் தம் அங்கங்கள் அருகதேவனுக்கல்லாது வேறொன்றிற்கும் பயன்படாது என்று கவுந்தி உணர்த்தும் பகுதி நாவுக்கரசரது திருவங்கமாலையை நினைப்பூட்டுகிறது. கவுந்தியடிகளின் புகழுரை வருமாறு:

சாரணர் வாய்மொழி கேட்டுத் தவமுதற்
காவுந்தி யுந்தன் கைதலை மேற்கொண்டு
ஒருமூன் றவித்தோன் ஓதிய ஞானத்
திருமொழிக் கல்லது என் செவியகந் திறவா;
காமனை வென்றோன் ஆயிரத்தெட்டு
நாமமல்லது நவிலாது என் நா
ஐவரை வென்றோன் அடியிணை யல்லாது
கைவரைக் காணினும் காணா என் கண்
அருளறம் பூண்டோன் திருமெய்க் கல்லதென்
பொருளில் யாக்கை பூமியிற் பொருந்தாது;
அருகர் அறவன் அறிவோற் கல்லது என்
இருகையுங் கூடி ஒருவழிக்குவியா
மலர்மிசை நடந்தோன் மலரடி யல்லது என்
தலைமிசை உச்சி தான் அணிபெறாது;
இறுதியில் இன்பத்து இறைமொழிக் கல்லது
மறுதர ஓதிஎன் மனம்புடை பெயராது;
என்றவன் இசைமொழி ஏத்தக் கேட்டதற்கு
(சிலப் 9 192)

314



இப்பாடலில் செவி அருகன் உரைக்கும் ஞானமொழிக்கு அல்லாமல் திறவாது; நா அவனது ஆயிரத்தெட்டு நாமத்தை அல்லது வேறொன்றையும் சொல்லாது. கண் அவன் பாதங்களைக் காணுமே யல்லாமல் வேறு எந்தத் தெய்வத்தையும் காணாது; என் உடம்பு அவனது திருமேனியைப் பொருந்தவே பூமியில் பொருந்தும்; எனது இரு கையும் அருக தேவருக் கல்லாமல் பிறர் எவர்க்கும் குவியாது; அருகனது திருவடிகளை யல்லாது வேறொன்றையும் தலையுச்சியில் அணியப்பெறாது; அவ்விறைவனது திருமொழிகளையல்லாமல் வேறொன்றையும் ஓதி என் மனம் பெயராது என்று இவ்வாறாகக் கவுந்தியடிகள் தமது ஆழ்ந்த பக்தி ஈடுபாட்டை வெளியிடுகிறார். அங்க மாலையின் அமைப்பும் இவ்வுரைகளில் பொதிந்துள்ளது. இவ் வாறு புகழ்ந்து சொல்லுதல் திருவங்கமாலையின் மற்றொரு அமைப்பு முறையாகும் என்று கொள்ளலாம்.

## அங்கமாலையின் அடிச்சுவட்டில் அமைந்த பாடல்கள்

புதுமைக்கவி பாரதியார் 'சக்திக்கு ஆத்ம சமர்ப்பணம்' என்ற கவிதையில் 'கை, கண். செவி முதலிய உறுப்புக்களைச் சக்திக்கு உரிமையாக்கு; ஆக்கினால் அவை சக்திபெற்றுச் சிறப்படையும்' எனப் பாடியுள்ளது அங்கமாலையின் அடிச் சுவட்டில் தோன்றிய விளைவே.

கையைச், சக்தி தனக்கே கருவியாக்கு-அது
சாதனைகள் யாவினையும் கூடும்-கையைச்
சக்தி தனக்கே கருவியாக்கு-அது
சக்தி யுற்றுக் கல்லினையும் சாடும்

என்று தொடங்கி,

சிவ, சக்தி என்றும் வாழி! என்றுபாடு-சிவ
சக்திசக்தி என்றுகுதித்தாடு-சிவ
சக்தி என்றும் வாழி! என்றுபாடு-சிவ
சக்திசக்தி என்றுவிளையாடு...........

என்பது முடிய 46-பாடல்கள் இந்த சமர்ப்பணத்தில் உள்ளன. இவ்வாறு அங்கங்களை இறைவன்பால் சமர்ப்பணம் செய்வதும் அங்கமாலையில் ஒருவகை எனலாம். பிற்காலத்தெழுந்த

'கவசம்' என்னும் நூல்வகையும் அங்கமாலையின் அமைப்பையே மேற்கொண்டன. தன் அவயவங்கள் முதலியவற்றை ஆண்டவன் காப்பாராக என்று வேண்டுவதே இந்நூலின் பொருள். கந்தர்சஷ்டி கவசத்தில் வரும்,

அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினை காக்க
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க

என்பது முதலாகவரும் பகுதியை நோக்கின் இது நன்கு விளங்கும்.

## இறைவழிபாட்டிற்கு இயைந்த நிலை

இங்ஙனமாகப் பலபடியாலும் பக்தர்கள் ஆண்டவனிடம் அளவிலாப் பக்திபூண்டு அங்கமாலை பாடித் துதித்துள்ளார்கள். இப்பெரியாரது அங்கமாலைகளை நாமும் அங்கம் நெக்குநெக் குருகப்பாடி ஆண்டவனைப் பரவினால் நமது கருவி, கரணங்கள் ஒடுக்கமுற்று ஆண்டவன் வழிப்படுதல் ஒருதலை. இத்தகைய வழிபாட்டினால்தான் ஒருவன் இறைவனுடைய அருளைப் பூரணமாகப் பெறமுடியும்.

சிந்தனைநின் றனக்காக்கி, நாயினேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி,
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி, வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்களார
வந்தனை யாட்கொண்டுள்ளே புகுந்தவிச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித் தனியனேற்கே.

(திருவாசகம்-திருச்சதகம் 26.)

என்பது மாணிக்கவாசகரின் அநுபூதியில் பிறந்த அருள் வாக்காகும். இப்படிப்பட்ட பெரும்பேறே கற்றோர் பெற வேண்டும் பேறும் என்பது ஆன்றோர்களது துணிபு.

கற்றதனால் ஆய பயனென்கொல்? வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்

என்பது திருவள்ளுவரின் அமுதத்திருவாக்கு. இவ்வாக்கு நம்மனைவர்க்கும் ஒருதலையான சிறந்த இலட்சியம் அல்லவா?

# அறுமுகன் ஆடல்

பண்டிதவித்துவான், திரு. தி. இராமாநுசன் அவர்கள்

பேராசிரியர், அரசர் துரைசிங்கம் கல்லூரி, சிவகங்கை.

நினைத்தவர் நினைத்ததைத் தரவல்லது தெய்வமணி. அது வானவர் உலகிற்கு உரியது. தவறி, காட்டில் எளிதில் வந்து கிடந்தது. கிடந்த அதை நாரை ஒன்று கண்டது. கண்ட நாரைக்கு அதன் பெருமை தெரியவருமா? இருளோட்டத்தான் உதவும் என்று அது கருதிற்று. கருதியது மட்டும் இல்லை. குஞ்சுகளுக்கு விளக்கு எனக் கூட்டிலே கொண்டு வைத்தது. அதனால், மணியின் புகழுக்கு என்ன இழுக்கு? நாரையது அறியாமைக்கே நல்ல சான்று.

வள்ளி வெறும் குறமகள் அல்லள். முன் பிறவியில் திருமாலின் பெருமகள். முருகனை மணக்கத் தவம் இருந்து வள்ளி ஆனாள். முருகனும் அவளை மணக்க வர இருக்கிறான். இவ்வளவு பெருமையும் நம்பி யரசனுக்குத் தெரியாது. அவனுக்கு எளிதிலே கிடைத்த கடவுள்மணி - வள்ளி. அவளுக்கு உரிய பருவம் வந்ததும் குலமரபு கருதினான். முருகனது அமுதனைய தேவியைப் புனம் காக்கப் போக்கினான். தெய்வமணியது பெருமை நாரைக்குத் தெரிந்ததா? அதை ஒத்தது அரசனது சிறுமை!

புனம் காத்து நிற்கின்றாள் வள்ளி. தினை கவரக் கிளிகள் வருகின்றன. 'ஆலோலம்' சொல்லி அவள் கிளிகளை விரட்டுகிறாள். ஆனால் - விளிகேட்ட கிளிகள் ஓடின பாடில்லை. வெருண்டு ஓடாதபடி திரண்டு தேடி வந்தன. காரணம் - புனத்தவர் விரட்டுவதாக அவைகட்குப் புரியவில்லை. இனத்தது ஒன்று நின்று கூவுவதாகவே கிளிகட்குப் பட்டது!

வள்ளியது குரல் மட்டும் கிளிஒத்தது என்றில்லை. அறல் ஒத்துச் சுருண்டது கரிய கூந்தல். கண்கள் கயல்களை ஒத்தன. தோற்றம், நிலத்திடைக் கிடந்த மின் ஒத்தது. கொல்லும் விழிகள் வேலினை வென்றன. செந்தளிர் புரையும் மேனி; சிலை என வளைந்த நுதல்; கொவ்வை போன்ற உதடு; தாமரை ஒத்த கைகால்கள்:- எல்லா எழிலாலும் அவள் திருமகளை ஒத்தாள்.

வந்த முருகன் புனத்தருகே வள்ளியைக் கண்டான். கண்டதும், கொண்ட காதலுக்கு அளவில்லை. கடலனைய காதல் கரைகடந்தது. மையலின் எல்லையும் ஐயனை மீறியது. உடல் தளர்ந்தான்; உள்ளமும் நைந்தான். உலையுற்ற மெழுகு போல நிலையற்று அழிந்தான். சிறிது நேரம் கழிந்தது. நிலைமை தெளிந்து அவன் பேசினான் பேசின பேச்சிலே சுவை அதிகம். பேசியது கேளுங்கள்!

'' நங்கையே! என் நெஞ்சு பிளக்க உன் கண் ஒன்றே போதும். கொல்லும் வாளுக்கு நஞ்சும் வேண்டுமா? மையிட்ட உன்கண் நஞ்சிட்டவாள். உன்கண்பார்வை, நஞ்சுபூசின வாள்போல் - என் நெஞ்சைப் பிளக்கிறது. நீயோ ஏந்திழை யார்கட்கு இறைவி எனத்தக்கவள். சிறிதும் புனம்காவலுக்கு ஏற்றவள் இல்லை. பெற்ற தகப்பன் உற்ற தகுதி அறியாதவன். பூந்தினை காக்க எனஉனைப் போக்கினது பிழை. ஆனால் - அவன் என் செய்வான்! புளினர்கட்கு ஆயும் உணர்வினை அயன் படைத்திலன். படைத்திருந்தால் மாடமாளிகையில் அவன் இருத்துவன். சேடியர் பலரைப்புடை சூழவும் வைப்பன். பல சொல்லி என்? பெற்றவன் உனக்கு நிறைவு செய்திலன். என்னை நீ பெற்றால் உன்குறை நீக்கிப் போற்றுவேன்.

அள்ளி வீசிய ஆசைவார்த்தைகள் வள்ளியை அசைக்க வில்லை. எதிர்நோக்கும் அவனை அவள்முகம் நோக்கவும் இல்லை. மொழிபுகன்றோ அல்லது முறுவல் புரிந்தோ - உரிமை காட்ட வில்லை. ஊரும் பேரும் பகராது நின்றாள். துயரம் மிகுதியால் முருகன் அயர்ந்தான். அடுத்து முயல்வது ஆக்கத்திற்கு வழி யல்லவா? நிரந்து இனிது சொல்லுவோம். விரைந்து தொழில் கேட்பள் - என்று கருத்து! மீண்டும் வசமாக்கப் பேசினான்.

'நல்லாய்! நாடிநிற்கும் எளியனோடு ஊடிநில்லாதே. உன் பெயர் உரை; இல்லையேல் ஊர்ப்பெயராவது சொல்லு. அல்லது உன்னூர் செல்லும் வழியிலே விழிசெலுத்து. கூறு மொழிக்கு மறுமொழி தராதது ஏன்? மொழியொன்று புகல் அல்லது முறுவலேனும் புரி. முறுவல் புரிய அறியாயேல் விழி யொன்று நோக்கு. விரகம் மிக்கு உழலும் எனக்கு உய்யும் வழிகாட்டு. மனம் என்ற ஒன்றில்லையா? உளதேல் மனமும் சற்று உருகு. உருகாய் எனில் விரைவில் கருகி இறப்பேன். தம்மை உகப்பாரைத் தாமும் உகப்பர். இஃது உலகிடை நிலவும் வழக்கு. இவ்வழக்கை நீ அழிக்காதே. நீ மறுத்து

அழிக்கில் நான் இறந்து ஒழிவேன். இறக்கும் அளவிற்கு அருள் நீத்த பழியுன்னைச் சூழும். பழிமலைந்து இழிநிலை உறுவது பெரியதில்லை. கருத்தற்ற நிலையில் வெறுத்தலை நீக்கு."

இப்படி முருகன் கூறினான். பிறகு - வள்ளி பேசினாள். என்று கதை மேலேபோகும். இடையே ஒன்று நாம் நின்று கருதுவோம். கழிபெரும் காமமும் அதுதரும் மயக்கமும் இழிகுண இயல்புகள். இவை வினைப்பயனாய் ஒருவரை நயந்து வரும். இவை இரண்டும் திரண்ட அறிவினரைச் சாரா. இவ்விரு குறையும் பெற்ற மனிதரே தம்நிலையில் இழிவர். அவர்தம் தலைமையொடு புலமையும் அழியும். நிற்க - நம் அரும்பெறல் முருகனே பெரும்பெயர்க் கடவுள். குறைவறும் இறைவனின் மறுவடிவினன். நெறிமுறை காட்டி அறவழி நிறுத்த வந்தவன். வினையின் நீங்கி விளங்கிய அறிவினன். காமமும் மயக்கமும் கடவுளர்க்கு ஆகா. ஆகவே, குறவள்ளியிடம் இறைவன் குறையிரக்கலாமா? காதல் வலைப்பட்டு நிலைதவறலாமா? மெழுகு என உருகி மனமழியலாமா? 'காதல் இல்லையேல் சாதல்' என்பது இறைவனுக்கு உயர்வா? எனவே குறைவுதரும் இவைகளை முருகன் உரைத்திரான். உரைப்பனேல் அவன் முருகனல்லன். இறைமைக் குணம் இல்லாரை இறைவர் எனல் ஒல்லாது. ஆக, படிப்பவருக்கு ஒரு திடமுடிவுவரும். 'குறைவுபடப் பேசிய முருகன் இறைவன் ஆகான். ஆவனேல் அங்ஙனம் குறைவுதரப் பேசியிரான்'. என்பது அம்முடிவு. எடுத்த தலைவற்கு ஏற்றம் கூறலே காப்பியநிலை. நிலைதவறிக் குறைகூற வைத்தல் காப்பியப் பண்பு ஆகாது.

காப்பியத்துள் கதை உறுவது மட்டும் ஒப்பிய நோக்கம் இல்லை. கதையினைக் கூறும் முறை; முறையிலே அமையும் திறமை; திருத்தியும் பொருத்தியும் காட்டும் அறிவு; இவற்றால் ஒழுக்கம் பேணும் விழுப்பம்; இவையே சீரிய காப்பியத்தின் நேரிய பண்புகள். கந்தபுராணம் முருகனது வரலாறு கூறும். அதனை ஆக்கியவர் கச்சியப்ப ஆசிரியர் அவர் சீரிய செஞ்சொல் கவிஞர். புலவருலகின் தலைமணி. புலவரும் வியக்கும் முறையில் இலக்கியம் யாத்தவர். குறைவுதர நூலை இயற்றுபவர் அல்லர். ஆயின். இக்குறைகள் நீக்கி அவர்போற்றியது எப்படி? விடை காண்பதில் தடை ஒன்றும் இல்லை.

நாமும் இறைவனும் ஒருசேரப் பிறக்கிறோம். இருவர் பிறப்பிற்கும் வேற்றுமை உண்டு. நமது பிறப்பு செய்வினைப்பயனால் நம்பால் வரும். இறைவனோ பேரருளால் திருவுரு எடுப்பவன். இறைவன் பிறப்பிற்கு இச்சையே காரணம். "திருத்தனார் தமதிச்சையால் திருவுருக்கொள்வார்" இங்ஙனம், பரஞ்சோதி கூறுவர். வினைவிளைவால் வரும் பிறவிகளையே பயன் சாரும். இறைவன் பிறப்பிலோ இயற்றும் வினைகள் சாரா. பிறந்து செய்யும் நலம் திங்குகள் அவனுக்கில்லை. இறைவன் செயல்களை "விளையாடல்கள்" என்றே அறிவனூல் கூறும். செய்வினைப் பயன் சேராச் செயலே விளையாடலாம். திட்டிய செயலை 'விளையாட்டு' என்றால் விட்டுவிடுவோம். திட்டிற்கு மறு திட்டுத் திட்டுவதில்லை. மேலும் இறைவனது நினைப்பு நம் வினைப்பயனையே தொலைக்கும். இறையருள் உடையார்க்குப் 'போயவினையும் புகும்வினையும்' தீயினில் தூசும் ஆகும். இறைவன் நினைப்புக்கே நம் வினைப்பயன் ஓயும். அப்படியானால், இறைவனை அவன் செய்வினை எப்படிப் பற்றும்? ஆகவே, முன்சொன்ன குறைகள் இறைவனுக்கு இல்லை. எடுத்த பிறவிக்கு ஏற்பத் தொகுத்துக் கூறியதாகவே அவை அமையும். முருகன் தினைப்புனத்தில் பேசியது வினைப்பயனால் இல்லை. பேசியது குறை என அவனை நாம் ஏச இயலாது. நிலையழிந்து உருகியது அவன் திருவிளையாடல். "குமரர்க்கு இது திருவிளையாடல் போலாம்" என்கிறது கந்தபுராணம்! இறைவன் குறைகளை விளையாடல் எனில் எல்லோரும் ஒப்பார். இதற்கு உடன்பட இறையன்பு நிறையளவில் வேண்டும். "அறிவு வளர பத்திநெறி தடை" என்பவர் உடன்படார். பகுத்தறிவுவாதம் மிகுத்துடையவர் அவர். அறிவுக்குப் பொருந்த உரைத்தாலே அவர் திருந்துவார். கச்சியப்பர் மெச்சும் வகையில் அதனையும் செய்வர். அறிவனூற் கருத்தை உலகியலோடு ஒட்டிக் காட்டுவர். தெரியாததை விளக்க உவமைவகை சிரியது. ஒப்பும் வகைகளுள் அது சிறந்ததெனச் செப்புவர். அறிவு முரண்பாட்டை உவமை சமன் செய்யும். "கவிஞன் கதையை இடையே நிறுத்துவான். படிப்பவரோடு தானும் கூடி நடப்பன். இடையில் வரும் தடையைத் தட்டிக்கழியான். தடையை நன்முறையில் ஏற்று விடையும் கூறுவன்." இதை விடுத்துக் கதை நடத்தில் அவன் கவிஞன் இல்லை. படிப்பவரோடு இடையே பேசும் நடைமுறையைக் "கவிக் கூற்று" என்பர். கச்சியப்பர் கவிக் கூற்றினைச் சற்றுக் கேட்போம்!

முருகன் பேசியதில் சில குறைகள் கண்டோம். அக்குறைகளை இறைவன்மீது ஏற்றிட்டோம். இறைவன் குறைவு உடையவன் என்று முடிவும் கட்டினோம். திருவிளையாடல் என்றாலும் எள்ளி நகையாடினோம். கதைப் போக்கிலே நேர்ந்தன இக்குறைகள். இக்குறையை மறைக்கப் புலவர் முயலவில்லை. நம்முடன் இடைநின்று அவர் பேசுகிறார். கதையைத்தொடர்ந்து நடத்த முற்படவில்லை. "முருகன் பேசியது குறையில்லை. மானிட வடிவிற்கு அடுத்ததே ஆகும். குறையே என்றாலும் நிறைவுடைய இறைவனை அவை சாரா என்பது அவர்முடிக்கும் முடிவு." முருகன் இறைவனது மறுவடிவில்லையா? ஆகுமேல் அக்குறைகளும் அவனைச் சென்று சேரும். சேராவெனில் முருகன் இறைவடிவினன் இல்லை என்பது நாம் விடுக்கும் தடை. கச்சியப்பர் தரும் விடையோ தடையின்றி ஏற்பது. பொருத்தமும் திருத்தமும் மிக உடையது. கேட்டவர் மெச்சும்தரத்தது. "ஒன்று மற்றொன்றின் வடிவமேதான் எனினும், மறுவடிவினைச் சாரும் குறைகள் மூலத்தினைச் சேரா. சேர்த்துப் பேசுவது மிகுத்த அறியாமை." இம்முடிபுக்கு ஒரு உவமை தருகிறார்.

நிலவு தரும் தேவனை மதியம் என்போம். மதியப்புத்தேள் வானத்து விளங்குவன். மண்ணுலகில் தண்ணீர்த்தொட்டி உள்ளது. சந்திரன் நிழல் நீர்த் தொட்டியில் விழும். தொட்டி நிழல் வானத்து மதியின் மறுவடிவம். வானமதியை மேகம் மூடின் இது தானும் மறையும். காணும் எவரும் வேறாக மொழியார். இருண்டால் இரண்டும் இருளும். ஒளியுற்றால் இரண்டுமே ஒளிபெறும். நிறைவும் குறைவும் இரண்டிற்கும் வரும். வானத்து மதியும் தொட்டி நிழலும் வேறில்லை. இவ்வளவிலும் துளி பிழை இல்லை. எனினும் அடுத்து ஒன்று காண்போம். வானமதியை மேகம்சூழத் தொட்டிநிழல் மறைந்ததில்லையா? காரணம், இரண்டும் வேறல்ல ஒன்றென்பதே. இப்பொழுது ஒரு சிறு செயல் புரிவோம். தொட்டி நீரை ஒரு கழியால் அலைப்போம். அலைத்தால் தொட்டிநீர் நிலைகலங்கி அலைப்படும். அலைக்கும்போது தொட்டி மதியும் நிலைகலங்கும். தொட்டி நிழலும் வானத்து மதியும் ஒன்றுதானே! ஆம் என்பது நாம் ஒப்பிய உண்மை. ஆயின் நீருள் மதியம் அலைந்தபோது வான்மதி அலையாதது ஏன்? மறுவடிவின் குறை மூலவடிவினைத் தாக்கவில்லை. இது கண்கொண்டு நாம் காணும்

காட்சி. இதற்கு எவரே சரியான விடைதருவர். கண்கண்ட நிகழ்ச்சியில் உண்மைகாண இயலவில்லை. வான்மதியை மேகம் மூடியது. தொட்டி நிழலை மறையக் கண்டோம். காரணம், மூலமும் வடிவும் ஒன்று. இரண்டும் உற்ற மாற்றம் பெறும் என்றோம். ஆயின், மறுவடிவான தொட்டி மதியம் நிலைகெட்டது. அலைபட்டு ஆட்டம் உற்றது. வானத்து மூலமதியமும் நிலையழியவேண்டும். அதுவும் நிலையற்று ஆடிக்குலையவேண்டும். ஏன், அவ்வசைவுபெற இசையவில்லை? இத்தடைக்கு உற்ற மாற்றமான விடை யாது? அறிவுக்குப் பொருந்தியதாய் திருந்திய விடை இல்லை. ஏற்பவரும் மறுப்பவரும் ஒருமுடிவுக்கு வரல் தகும். "மூலம் வடிவம் இரண்டும் உற்ற மாற்றம் பெறு; சிலநேரம் வடிவக்குறைகள் மூலத்தைச் சாரா" என்ற முடிவே அது. பிறகு, கச்சியப்பர் பேசுகிறார்.

"குமரன் முருகன் என இருவரைக் கொள்ளுங்கள். குமரன் என்பது தெய்வதத்துவம். முருகன் அதுகொண்ட மானுடவடிவம். மானிட இயலிலே அதற்கு ஏற்கப் பேசினன். பேசியதில் ஏசுதற்கு ஒன்றும் இல்லை. பேசியது குறையானலும் அக்குறை குமரனைச் சாரா. எதுபோல எனில் கூறுவேன். தொட்டிநீருள் மதி நிழல் அலைகின்றது. அவ்வசைவு வானத்து மதியை ஒன்றும் செய்யாது. முருகன் விளையாடலும் அப்படியே குறைவுபடாது." இப்பொழுது நாம் என்ன பதில் சொல்ல இயலும்? சரிதான் முருகன்மீது குறையில்லை. எனவே இசைவோம். குறை நீங்குவது மட்டும் இல்லை. வேறு பல வழியில் நிறைவும் காண்போம். "மனித உருவத்துக்குத் தக்கபடி முருகன் பேசியுள்ளான். முருகன் பேசியது நனி மிகச் சிறந்தது. பாவிகம் என்பது காப்பியப் பண்பு. முருகன் அவை பேசானேல் உலகியல் கடப்பன். உலகியல் கடந்த நிலையில் காப்பியம் சுவைதராது. சுவைதருமுறையில் நயம்பெறக் காப்பியம் அமைந்துளது. கச்சியப்பர் திப்பியமுறையில் காப்பியம் யாத்தவர்." இப்படி எல்லாம் ஒப்புமாறு அவர் பாடியுள்ளார். பாடலடிகள் கூடிய சுவை தரும். நாமும் அதனைத் தேடிக் காண்போம்!

"உலைப்படும் மெழுகது என்ன உருகியே ஒருத்தி காதல்
வலைப்படு கின்ருன போல வருந்தியே இரங்கா நின்ருன்
கலைப்படும் மதியப் புத்தேள் கலங்கல் அம்புனலில் தோன்றி
அலைப்படும் தன்மைத்து அன்றே அறுமுகன் ஆடல் எல்லாம்."

கச்சியப்பர் ஆக்கியது கந்தபுராணம். பலவேறு சுவை நயங்களை உடையது. இப்படிப் பாடல்கள் பல நூறு கொண்டது. கதை சொல்லும் முறையும் சிறந்தது. சமயக் கலப்பு என்று சொல்லி இதனை ஒதுக்கல் தகாது. விழுமிய இந்நூலைப் படித்தல் தமிழர் கடன்.

# பெரியபுராண விரிவுரை

பெருஞ்சொல் விளக்கனார்

**திரு. அ. மு. சரவண முதலியார் அவர்கள்**

(முன் இதழ்த் தொடர்ச்சி)

''அவர் தங்கள் மனைவியாரும் ... சிவனெந்தை கண்டந் தன்னைத் திருநீலகண்டமென்பார்'' என்ற பாடலுக்குத் திரு நீலகண்டரது மனைவியாரே ''திருநீலகண்டம், திருநீலகண்டம் என்று அடிக்கடி கூறுவார் என்று பொருள் கொள்வாரும் உண்டு. பின்னை திருநீலகண்டருக்கும் அப்பெயர் வருவானேன்? மனைவியார் 'திருநீலகண்டம்' என்று அடிக்கடி கூறியதால் இவருக்கு அப்பெயர் வருமோ? அது பொருந்தாது. 'நீல கண்டம்' என்று அடிக்கடி கூறியது திருநீலகண்டரே என்பது மெய்யுற அணையும்போதிற்றீண்டு வீராயின். எம்மைத் திருநீலகண்டம் என்றார்'' எனவும், ''ஆதியார் நீலகண்டத் தளவு தாங்கொண்ட வார்வம், பேதியா வாணை கேட்ட பெரியவர் பெயர்ந்து நீங்கி'' எனவும் வருந் தொடர்களால் அறியலாம். ஆணையிடும் உலகியல் வழக்கை ஈண்டுச் சிந்தித்தல் வேண்டும். ஒருவன் தான் இன்னது செய்வேன் என்றோ செய்ய மாட்டேன் என்றோ ஆணையிட்டுச்சொல்ல நேரின் தனக்கு உயிர்ப்பொருளாகச் சிறந்தது எதுவோ அதன்மீது ஆணையிடுவதும் அவனே மற்றொருவனை நோக்கி 'நீ இன்னது செய்யவேண்டும், செய்யலாகாது'' என்று ஆணையிட்டுச் சொல்லநேரின் அவனுக்கு உயிர்ப்பொருளாகச் சிறந்தது எதுவோ அதன்மீது ஆணையிட்டுச்சொல்வதும் உலகியல் வழக்கு; நூல் வழக்கும் இவ்வாறே. எனவே இரண்டாலும் இவ்வுண்மை யறியக்கிடக்கின்றது. ஆதலால் எம்மைத் தொடாதீர் என்று ஆணையிடுகின்ற அம்மையார் தொடாமையை மேற்கொள்ள வேண்டியவராகிய திருநீலகண்டருக்கு உயிர்ப்பொருளாகச் சிறந்தது எதுவோ அதன்மீதுதான் ஆணையிடுதல் வேண்டும். ஈண்டு அம்மையார் நீலகண்டத்தின் மீது ஆணையிட்டதால் அதனையே நீலகண்டர் உயிர்ப்பொருளாகக்கருதினார் என்று முடிவு செய்யலாம். எனவே நீல கண்டம் என்று அடிக்கடி கூறியது நீலகண்டரேயன்றி

அவர்தம் மனைவியார் அன்று. அங்ஙனமாயின் பாடலில், 'அவர்தங்கள் மனைவியார்' என்ற எழுவாய்க்கு 'திருநீலகண்ட மென்பார்' என்னும் பயனிலை காணப்படுகின்றதே யெனின் "என்பார்' என்ற சொல்லை அந்த எழுவாய்க்குப் பயனிலை யாக்காது குளகமாகக்கொண்டு "என்பாரானதங் கேள்வர்" என்று அடுத்த செய்யுளோடு இயைத்துப் பொருள் கொள் ளுதல் வேண்டும்.

நீலகண்டர் சிவனது கண்டத்தின்மீது அவ்வளவு பற்றுக் கொண்டிருந்தது யாது காரணம் பற்றியென்பதற்கு, "புவனங் கள் உய்ய வையர் பொங்கு நஞ்சுண்ண யாஞ்செய், தவம்நின்று தடுத்ததென்னத் தகைந்து தான்தரித்ததென்று, சிவனெந்தை கண்டந்தன்னைத் திருநீலகண்டமென்பார்' என்று சேக்கிழார் கூறுகின்றார். அவ்வாறு சேக்கிழார் கூறுவதற்குக் காரணம் "திருநீலகண்டத்துக் குயவனார்க்கடியேன்" எனவருந் திருத் தொண்டத் தொகையடியை நினைந்தே, திருநீலகண்டத்துக் குயவனார் என்பதை நீலகண்டத்தையுடைய குயவனார் என்று பொருள்கொள்ளல் ஏலாது. நீலகண்டம் சிவபெருமானுக்கே உரியது- எனவே நீலகண்டத்தைத் தியானித்தலையுடைய திருநீலகண்டர் என்று பொருள் கொள்வதே சாலப்பொருந்தும். இவ்விடத்து அத்துச் சாரியைக்கு இலக்கணக்குறிப்பு விளக்கப் பெற்றது. விரிவஞ்சி விடுக்கின்றோம்.

'மானமுன் பொருது வந்தவுடல்' என்பது மானம்பற்றி வந்த வுடல் எனப் பொருள்படும். அவ்வாறெனின் வேறு காரணம் பற்றியும் ஊடல் வருமோ எனின் பரத்தையர்பால் செல்வதால் பொருள் விரயம்பற்றியும் வரும். இது சாதாரணப் பெண்களின் இயல்பு. இதனின் உயர்ந்ததாகக் கருதப்படுவது. தமக்கே உரிய இன்பத்தைப் பிறர் நுகர்வதா என்ற எண்ணம் பற்றி நிகழும் ஊடலாகும். கலிங்கத்துப்பரணி—களம்பாடிய பகுதியில் "தரைமகள் தன் கொழுநன்" என வரும் பாடலின் கருத்தை ஈண்டுச் சிந்திக்கவும். ஓவியர் நீள்சுவர் எழுதும்" எனவரும் வேதநாயகம் பிள்ளை யவர்களது (நீதிநூல்) பாடலின் கருத்தும் சிந்திக்கத்தக்கது. 'தகைசான்ற சொற்காத்து' என் பதற்குப் பரிமேலழகர் உரைப்படி "இருவர்மாட்டும் நன்மை யமைந்த புகழ் நீங்காமல் காத்து" என்பதால் ஈண்டுக் கடமை

யினின்றும் தவறிய நிலையாலும் பரத்தையர்பால் சென்றதால் வரும் இகழ்ச்சியாலும் மானம் பொருது வந்த வூடலாகும்.

"காதலுன் மகனைப்பற்றிக் குளத்தினின் மூழ்கிப்போ என்றருளினான் கொடுமையில்லான்.'' ஈண்டுச் சோதனையின் அழகு சிந்திக்கத்தக்கது. பிள்ளையிருந்த சிறுத்தொண்டரை நோக்கி "மகவு பெற்றீரேல் மைந்தன்றன்னை யழையும்'' என்று கேட்டதும், ஈண்டுக் குழந்தையேயில்லாத நீலகண்டரை நோக்கி மேற்கண்டவாறு கூறியதும் ஆழ்ந்து சிந்திப்பதற் குரியன.

எந்தநிலை வந்தெய்தினும் அடியார்கள் தங் நிலையிலிருந்து தவறுகிறார்களா? என்று சோதனைபுரிவது ஆண்டவனுக்கோர் விளையாட்டு. நீலகண்டரைநோக்கி, "உன்மகனைப்பற்றி மூழ்கித்தா'' என்று கேட்டதும்'' மகன் இல்லை என்று கூறினால் மனைவியைப் பற்றி மூழ்கச்சொல்வார். அது இயலாததொன்று. எனவே அவரே மகன் இருப்பதாக நினைத்துக் கூறுவதால் நாம் வேறு குழந்தையைப் பற்றி மூழ்கினால் இவர் எவ்வாறு அறிய முடியும் எனக்கருதி நீலகண்டர் தவறிழைக்கலாம். ஆனால் நீலகண்டர் மலையே வந்து வீழினும் தந்நிலையிலிருந்து தவறாத நேர்மையரானதால் அவ்வாறு செய்யவில்லை- சிறுத்தொண்டரை நோக்கி அவ்வாறு கூறியதை அவரது வரலாறு வரும்பொழுது கூறுவோம்.

இவ்வளவு சோதனைகள் புரியும் ஆண்டவனைக் கொடுமை யில்லான் என்று சேக்கிழார் கூறியது ஆண்டவன் செய்யும் சோதனைகளெல்லாம் அடியார்களது பெருமையை உலகறியச் செய்ய வேண்டுமென்ற கருணையால் எழுந்ததால் என்பதே யாகும்.

ஐம்புலங்களை வென்றவர்களில் மிக்கீர் என்று நீல கண்டரைக் குறிப்பிட்டது தம்மனையாளுடன் உடனிருந்தே வேட்கையை நீத்தார் என்பது பற்றியே. பொருள் இல்லாத நிலையில் துறந்திருத்தலும் உணவு கிடையாத வேளையில் பசியைப் பொறுத்திருத்தலும் மாந்தர்க்கு எளிது. ஆனால்

பொருளுடையோன் துறத்தல் மிக அரிது. அதுபோல மனைவியுடன் கூடியிருந்தே உலகியலின்பந்துறத்தல் அரிதினும் அரிது. நீலகண்டருக்கும் அவர்தம் மனைவியாருக்கு மிடையேயுள்ள சூளுரை இருவருக்குமே தெரியும். இது பிறருக்குத் தெரியாததால் இவர்கள் என்று வேண்டுமானாலும் தங்கள் சூளுரையை மாற்றிக்கொண்டிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யவில்லை. சிவசாட்சியாக இவர்கள் ஒழுகிவந்ததால் யாரை மறைத்தாலும் இறைவன் அறியாமல் ஒரு காரியமும் இருக்கமுடியாது என்பதை நன்கு உணர்ந்து ஒழுகியவர்களானதால் தங்கள் ஆணையைக் கடைசிவரையிலும் நிறைவேற்றும் உறுதிப்பாடுடையராய் இருந்தனர். இதனால் இவர்கள் ஐம்புலங்களை வென்றவர்களில் சிறந்தோரானார்கள்.

---

குறிப்பு :— ஆதீனத்துக்குச் சொந்தமான திருச்சி மௌன மடத்தின் சார்பில் 16—1—55 இல் நடைபெற்ற பெரியபுராண விரிவுரைக் குறிப்புகள். தொகுத்தவர்: திரு. கிருஷ்ணன் அவர்கள்.

## புலமை

எது புலமை? நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறிய பெருமானைப் போற்றுவதே புலமை; பல்கலைக்கழகங்களில் பெறும் பட்டத்தோடு மட்டும் புலமை வந்து விடுதல் இல்லை. இந்தப்புலமை பெற்ற மனிதன்தான் மெய்ப்புலனும் திருவருட் சக்தியை உணர்தற்கேற்ற பயணத்தினைத் தொடங்கத் தகுதி உடையவனாகிறான்.

—ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள்.

# பூலோக விமர்சனம்

## (பதினேழாம் நூற்றாண்டு வேங்கடாத்வரி)

தமிழில் ஆக்கியவர்

பிர்மஸ்ரீ. ய. மஹாலிங்க சாஸ்திரிகள் அவர்கள் M. A., B. L.,

தருமபுர ஆதீனப் பல்கலைக்கல்லூரி முதல்வர்.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

கொஞ்சம் தெற்கே விமானத்தைச் செலுத்திக்கொண்டு சென்று விசுவாவசு க்ருசானுவிடம் தெரிவித்தான். "இதோபார்! கங்காநதியை. விஷ்ணு பாதத்தினின்று பெருகிய நதி இது. ஸம்ஸாரதாபத்தைப் போக்கவல்லது. சகல விபத்துக்களையும் நிவிர்த்திசெய்து மனதிற்கு நிம்மதி தரக்கூடிய தீர்த்தம். சர்வ பாபங்களையும் போக்கடிக்கக்கூடிய இந்த நதி அலைமோதிக் கொண்டு பிரவேசிக்கும் அழகைப்பார். மேலும் இதன் ஜலங்களால் சகரபுத்திரர்கள் சுவர்க்கமடைந்தார்கள். அத்தனை புனிதத்தன்மை உடையது இந்த நதி. கங்காஸ்னான புண்ணியத்தினால் மனிதர்களும் சுவர்க்கலோகத்தை அடைந்து தேவர்களுடன் சுகவாழ்வு வாழ்கிறார்கள். கங்கையில் பித்ரு தர்ப்பணம் செய்தால் பிதிர்க்கள் எல்லோரும் நல்ல லோகங்களுக்குச் செல்லுகிறார்கள். காம்பீர்யத்தினால் ஸ்ரீமந்நாராயணனுடைய ஹ்ருதயத்தையும், வெண்மையினால் அவருடைய கீர்த்தியையும், சீதளத்தன்மையினால் அவருடைய கருணையையும், தெளிவினால் அவருடைய புத்தியையும், இனிமையினால் அவருடைய முககாந்தியையும் பின்பற்றும் அவருடைய சரண கமலத்தில் உற்பத்தியான இந்தப் புண்ணிய நதி போற்றத் தக்கது.

இவ்விதம் கங்கையைத் துதிசெய்துவிட்டுப் பின் விசுவாவசு காசியைப்பற்றிக் கூறுகிறான். க்ருசானு காசியின் உன்னதமான மாளிகைகளைப்பார். இவை இந்திரலோகம்வரையில் எழும்புகின்றன. இந்த நகரத்தில் நித்யவாசியாய் இருப்பவர்

சந்த்ரகலாதரனை பரமசிவன். இந்த நகரத்தில் வசிப்பவர்கள் போகத்தில் ஈடுபட்டவர்களாயிருந்தாலும் யோகிகளுக்குக் கிடைக்கக்கூடிய சிவஸாரூப்யத்தை அடைகிறார்கள். இங்கு அந்த்யகாலத்தை அடைந்த மானிடர்களுக்குப் பரமேச்வரன் தாரக மந்திரத்தைக் காதில் உபதேசம் செய்கிறான். ஆகையால் இங்கு மரணம் அடையும் சர்வ ஜீவர்களும் முக்தியை அடைகிறார்கள் என்பது சாஸ்திரம். இங்கு வசிக்கும் சிவபக்தர்களுக்கு நமஸ்காரம். இவர்கள் அதிகாலையில் தினமும் கங்காஸ்னானம் செய்து நித்யவிதிகளை முடித்துக்கொண்டு சங்கரனை மனமுருகி வழிபடுகிறார்கள். இவர்களே தன்யர்கள்; புண்ணியர்கள்."

க்ருசானு:- நீ என்ன இப்படி கலிகாலமஹிமையினால் ஆசாரம் குன்றி வாழும் காசிதேச அந்தணர் குழாத்தை வந்தனம் செய்கிறாயே! இவர்கள் சாஸ்திரப் பயிற்சியை விட்டுவிட்டு ஆயுதப் பயிற்சியை அல்லவா எடுத்துக்கொண்டுவிட்டார்கள். மேலும் வேலைக்காரன் எந்த ஜாதியானாலும் அவன் கொண்டுவரும் ஜலத்தில் முழுகிவிட்டு அந்த ஜலத்தைக்கொண்டே தேவபூஜை அபிஷேகமும் நடத்துகிறார்கள். இவர்கள் எச்சில் தோஷம் பார்ப்பதில்லை. உன்னதப்பதவியில் உள்ள துருஷ்கர்களுடன் பழகுகிறார்கள். பஞ்சமர்கள் வழியில் வந்தாலும் ஒதுங்கிப் போவதில்லை. வெளியில் போகும்போது வண்ணான் மடியை உடுத்துகிறார்கள். இவர்கள் ஸ்னானம் செய்து என்ன பிரயோஜனம்! வெளியில் சென்றாலோ மிலேச்சர்களின் பேரில் படாமலா இருக்கிறார்கள். பட்டுவிட்டாலும் வீடுவந்ததும் ஸ்னானம் செய்து மடிசெய்துகொள்கிறார்களா? அப்படியே சாப்பிட உட்கார்ந்துவிடுகிறார்கள். அதுமட்டுமா! துலுக்கர் முதலியவர்களால் பார்க்கப்பட்ட ஆகாரத்தைக் கண்டவர்கள் பந்தியில் உட்கார்ந்துகொண்டு புசிக்க இவர்கள் தயங்குவதில்லை. துராசாரமுள்ள ஜனங்களை ஏமாற்றுவதற்காக அர்த்தமற்ற, வேத சாஸ்திரவர்த்தமானகர்மாக்களை ஆடம்பரமாகச் செய்கிறார்கள்.

இந்த ஊர் ஜனங்கள் குடும்ப சுகத்தையும் மறந்து பணம் சம்பாதிப்பதற்காக தேசாந்தரங்களில் அலைகிறார்கள். இவர்களுக்கு இகலோகமும் பரலோகமும் இரண்டும் நிஷ்பலமாகின்றன. நூற்றிலோ ஆயிரத்திலோ ஒருவன் படிப்பானேயானால் சுருதிஸ்மிருதிகளை விட்டுவிட்டுத் தர்க்கம்தான் படிக்கிறான்.

விசுவாவசு:- கலிகாலத்தின் மகிமையால் இந்தப்பிராம்மணர்கள் ஆசாரசீலங்கள் குறைந்தவர்களாயிருக்கலாம். ஆனல் தயவுதாக்ஷிண்யமற்ற துருஷ்க்கராஜாக்களே இவர்கள் கணக்கர்களாகவும், சேனுபதிகளாகவும், இன்னும் பல அலுவல் உள்ளவர்களாகவும் இருந்துகொண்டு சேவித்து வராமல்போனல் உலகத்தில் தேவதைகள் என்றும் பிராம்மணர்கள் என்றும் பூண்டற்றுப்போயிருக்கும். மேலும், ஸேதுவிலிருந்து ஹிமாசலம்வரை தேசமானது துருஷ்கர்களால் ஆக்ரமிக்கப்பட்டு சுதேசமன்னர்கள் இருந்தவிடம் தெரியாமல் மறைந்துவிட்ட இந்தக்காலத்தில் ஸ்ரீமந்நாராயணன் உபேக்ஷையாயிருக்கக் கலி பலம்பெற இருக்கும் நிலைமையிலும் ஒருவித குறையும் இல்லாமல் வைதிகமார்க்கத்தை இங்கும் அங்கும் ஒரு சிலர் பரிபாலித்து வருவது சந்தோஷத்திற்கு உரிய விஷயமல்லவா? இன்றும் வித்யைகள் கௌடதேசத்திலேயும், கான்யகுப்ஜத்திலும், அங்கதேசத்திலேயும், பங்கதேசத்திலேயும், மிதிலாதேசத்திலும் பிழைத்திருக்கின்றன என்று நினைக்கும்போது எவ்வளவு ஆச்வாசமாகவிருக்கிறது.

மேலும் இந்தக் காசிவாசிகள் ஆகார விஷயத்தில் அனுஷ்டிக்கும் சில நியமங்களை நீ மறந்துவிட்டாய். காலையில் ஸ்னனம் செய்து தேவதார்ச்சனம் செய்யாமல் இவர்கள் சாப்பிடுவதில்லை. பட்டினிகிடந்தாலும் பழஞ்சோறு தின்பதில்லை. நன்ருக மெழுகின இடத்திலேயே போஜனம் அருந்துவார்கள். இவ்வளவு சிரேஷ்டர்களை நீ வேறு எங்கு கண்டிருக்கிருய்?

இருவரும் விமானத்தின்மூலம் வெகுதூரம் சென்று சமுத்திரத்தைப் பார்த்தார்கள். விசுவாவசு சமுத்திரத்திற்கு வணக்கம் செய்தான். க்ருசானு சமுத்திரத்தை நிந்தித்தான். "குடிக்க உதவாத தண்ணீரைக் காப்பாற்றிவரும் இந்தச் சமுத்திரம் ஜலஜந்துக்களுக்குத்தான் ஆச்ரயமாகிறது." (அதாவது ஜடஜந்துக்கள்=மூட ஜனங்கள்) இதற்கு என்ன நமஸ்காரம் வேண்டியிருக்கிறது? மேலும், கர்ணகடோரமாக இது போடும் ஓயாத சப்தத்தை என்னல் சகிக்கமுடியவில்லை. ஒரு தரித்திரனைப்போன்றது இந்த சமுத்திரம். தரித்திரனின் உதரத்தில் ஜாடராக்னி எரிகிறது. சமுத்திரத்தில் படவாக்னி எரிகிறது. தரித்திரன் எப்போதும் பசி பசி என்று கத்துகிருன், சமுத்திரம்

ஓவென்று அலறுகிறது. தரித்திரனிடம் ஆபத்துக்கள் மேலுக்கு மேல் அணுகிக்கொண்டிருக்கின்றன. சமுத்திரத்தில் ஜலங்கள் தேங்கியிருப்பதுபோல். இத்தகைய தரித்திரனையும் சமுத்திரத்தையும் கண்டால் யாருக்குத்தான் கோபம் வராது? மேலும் இது ரத்னகரம் (ரத்னங்களுக்கு இருப்பிடம்) எனப்பட்டாலும் சுவர்ணம் விளையும் த்வீபங்களை அடைந்திருந்தாலும் கொடை என்ற குணம் அற்றது. இதன் ஜலம் கரையோரத்திலுள்ள மரங்களுக்குக்கூட உபயோகப்படுகிறதில்லை என்றால் பயிர்பச்சைகளுக்கு இவைகளை உபயோகப்படுத்திக் கொள்ளும் பேச்சிற்கு இடம் எங்கே இருக்கிறது? இந்த ஜலம் ஸ்னானத்திற்கே யோக்யமில்லை என்றால் பானத்தைப் பற்றி என்ன கேள்வி? ஆனால் இதுபோடும் சத்தமோ பிரமாதமாயிருக்கிறது. இதனிடத்தில் வசிக்கும் ஜந்துக்களோ பயங்கரமானவை. இந்த சமுத்திரத்தை சிருஷ்டித்த பிரும்மதேவன் எதற்காக இதை சிருஷ்டித்தான் என்பதுதான் புரியவில்லை. லோகத்தில் ஒரு பணக்காரன் கருமியாக இருந்தால் அவன் சொத்துக்கள் எப்படி அழிந்துபோகும் என்பது சமுத்திரத்தின் விருத்தாந்தத்திலிருந்து அறியத்தக்கது. சமுத்திரம் ஏராளமான ஜலங்களை வைத்துக் காப்பாற்றிவருகிறது. ஆனால் அதில் ஒரு திவலைகூடப் பிறர்க்குப் பிரயோஜனமில்லை. இத்தகைய கருமியான சமுத்திர ஜலத்தை அதன் வயிற்றில் இருக்கும் வாடவாக்னியே ஒழித்துக்கொண்டிருக்கிறது. மேலும் தேவர்கள் பலாத்காரம் செய்து சமுத்திரத்தைக் கடைந்து தங்களுக்கு வேண்டியவற்றை எடுத்துக்கொண்டார்கள்.

ஸ்ரீராமனே அணைபோட்டு சமுத்திரத்தைக் கட்டினான். தன் வருவாய்க்குத் தக்கபடி செலவு செய்யாதவர்களுக்கு இத்தகைய தண்டனைகள்மூலம் தனவிரயமேற்படும் என்பதற்கு சமுத்திரம் ஒரு நிதர்சனம்.

விசுவாவசு:- நண்பா! சமுத்திரத்தை வையாதே; இந்திரனுக்கு உச்சைச்சிரவஸ்ஸையும், விஷ்ணுவுக்கு லக்ஷ்மியையும் கொடுத்தவனைக் கருமி என்று கூறாதே. தேவர்களுக்கு அமிர்தத்தையும் காமதேனு கல்பதருக்களையும் கொடுக்கவில்லையா? பரமேச்வரனுக்கும் ஒரு சந்திரகலையைக் கொடுக்கவில்லையா?

(தொடரும்)

# திருசிய காவியப் பிரிவுகள்

வீயாகரண சிரோமணி,
**சிவஸ்ரீ M. S. சுப்ரமண்ய சர்மா அவர்கள்**
வடமொழி ஆசிரியர், தருமபுரம்.

(முன்தொடர்ச்சி)

வடமொழியில் நாட்டியம் (அபிநயம்) (1) ஸாத்விகம் (2) ஆங்கிகம் (3) வாசிகம் (4) ஆஹார்யகம் என்று நான்கு விதமாக வகுக்கப்பட்டிருக்கின்றது. ஸாத்விகம் என்பது, உணர்ச்சியால் கருத்தை வெளிப்படுத்துவது. ஆங்கிகம் என்பது கைகால் முதலிய அவயவங்களின் அசைதல் மூலம் கருத்தை வெளிப்படுத்துவது. வாசிகம் என்பது உரையாடல் மூலம் கருத்தை வெளிப்படுத்துவது. ஆஹார்யகம் என்பது ஆடை ஆபரணவேஷங்களால் கருத்தை வெளிப்படுத்துவது. இவ்விதமாக அபிநயம் நான்கு வகைப்படும். இவ்வபிநயங்கள் சுவையை அடிப்படையாகக் கொண்டு வெளிவருவது என்று சொல்கிருர்கள்.

இவ்வபிநயமே நிருத்யம் நிருத்தம் என்று மேலும் இரு வகைப்படும். கதைகளில் வரும் பாத்திரங்களுடைய சுகதுக்கங்களை தன்மயமாகக்கொண்டு நடிப்பது நிருத்யம் என்று பெயர். தாளம் கீதம் இவைகளுக்கு தகுந்தபடி நடிப்பது நிருத்தம் என்று சொல்லப்படுகிறது. ஆதலால் நாட்டியம், நிருத்யம் நிருத்தம் என்ற மூன்று சொல்லும் அபிநயத்தினுடைய வெவ்வேறு நிலையை குறிக்கின்றது என்பது அறியத்தக்கது. நிருத்யம் நிருத்தம் என்ற இரண்டும் மதுரம் உத்ததம் என்று இருவகையாக பிரிகின்றன. அப்பிரிவிற்கு லாஸ்யம் தாண்டவம் என்று பெயர். தாண்டவம் என்ற அபிநயம் சிவபெருமானல் விளக்கப்பட்டது. உத்ததம் என்ற அபினயம்தான் தாண்டவம் என்று பெயர். லாஸ்யம் என்ற அபிநயம் பராசக்தியால் விளக்கப்பட்டது. மதுரம் என்ற அபிநயம்தான் லாஸ்யம் என்று பெயர். இவ்வாறு வகுக்கப்பட்டிருப்பதாக மகாகவி காளிதாஸன் தன்னுடைய மாளவி காக்கினி மித்திரம் என்ற நூலில் ருத்ரேணேதம் உமாவ்யதிகரே ஸ்வாங்கே விபக்தம் த்விதா என்று கூறுகிருர். என்பது அறியத்தக்கது.

நாட்டியம், நிருத்யம், நிருத்தம் இம்மூன்றும் திருசிய காவ்யங்களுக்கு அடிப்படையான தேவை என்று கூறப்படுகின்றது. இக்கருத்தைக்கொண்டே சிலர் திருசிய காவ்யம் (நாடகம்) என்ற சொல்லிற்கு நாட்டியம் (அபிநயம்) என்று பொருள் கூறுகிறுர்கள்.

இதை அனுசரித்தே தென்மொழியிலும் நாடகம் என்ற சொல்லிற்கு நாட்டியம் என்று பொருள்கொண்டதாகத் தெரிகின்றது, எட்டாவது நூற்ருண்டில் தோன்றிய திவாகரம் என்னும் நிகண்டுவால் அறியப்படுகிறது. இந்நிகண்டுவிலே,

நடமே நாடகம் கண்ணுள் நட்டம்
படிதம் ஆடல் தாண்டவம் பரதம்
ஆளுதல் தூங்கல் வாணி குரவை
நிலயம் நிருத்தம் கூத்தெனப் படுமே.

என வருகின்றது. பிங்கலவரும் மூவகைத் தமிழையும் முதலில் கூறி அவற்றை முறையே விளக்குகின்ற இடத்து நாடகத்தைக் கூத்து அதாவது நாட்டியம் எனவே கொண்டு பலவகை நாட்டியங்களேயும் உணர்த்தினுர். ஆகவே நாடகம் என்பது நாட்டியத்தையே அறிவிப்பதாக அறிய வருகிறது. பத்துப் பாட்டில்

நாடக மகளிர் ஆடுகளத்து எடுத்த
விசி வீங்கு இன்னி யங்கடுப்ப

என உருத்திரங்கண்ணனுர் பாடுகின்ருர். இங்கே நாடகம் என்பது கூத்தெனக் கருதப்படுகிறது. இவ்வாசிரியரே பட்டினப் பாலேயில் பாடல் ஓர்த்தும் நாடகம் நயந்தும் என்றனர். இந்த இடத்திலும் நாடகம் என்ற சொல் நாட்டியம் என்ற பொருளிலே வழங்கியிருத்தல் வேண்டும்.

முத்தமிழ் நூல் என்று முழங்கப்படும் சிலப்பதிகாரத்தில் மூன்ரும் காதையில் மாதவியின் நாட்டியமே விரித்துரைக்கப் படுதலாலும் அவள் போன்ருர் நாடகக் கணிகையர் எனப் பெயர் பெறுதலாலும் இயல் இசை நாடகம் என்ற மூவகையில் நாடகம் என்பது நாட்டியமேயாதல் வேண்டும் எனத் தெரிகின்றது.

எனவே திருசிய காவ்யங்கள் யாவும் நாட்டியத்தை அடிப்படையாகக் கொண்டு வெளிவருதலால் நாடகம் என்ற பதத்திற்கு நாட்டியம் என சிலர் கூறுகின்றூர்கள். மேலும் இன்றும் சில நாடகங்களில் மிகவும் நாட்டியம் புகுத்தப் பட்டிருக்கின்றது. தஞ்சாவூர் ஜில்லா மிலட்டுர் என்கிற கிராமத்தில் வருடந்தோறும் நடத்தப்பட்டுவரும் நாடகங்கள் எல்லாம் அதிகமான அபிநயங்கள் மூலமாகவே நடிக்கப்பட்டு வருகின்றது. இவ்வித நாடகம் மிகவும் உயர்வாக நாடக வல்லுனர்களால் கருதப்படுகின்றது. மேலும்,

பிற்காலத்தில் திருசிய காவ்யங்கள் பொதுவாக இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டதாக அறிய வருகிறது. அதாவது நடன நாடகம், நடனமில்லாத நாடகம் என்று மலையாள தேசத்தில் கதகளி என்ற அபிநயம் நடனநாடகப் பிரிவைச் சேர்ந்தது, மிலட்டூர் சூல மங்கலம் முதலிய ஊர்களில் நடிக்கப் படுகிற நாடகங்கள் யாவும் நடனநாடகப்பிரிவைச் சேர்ந்தவை களே. வடமொழியில் பிரசித்தமான நாடகங்கள் யாவும் நடன அடிப்படை இல்லாத நாடகப் பிரிவைச்சேர்ந்தவை களாக கருதப்படுகின்றது. இவ்விதமான பிரிவு பிற்காலத்தில் செய்யப்பட்டதாக அறிய வருகின்றது. ஆரம்பத்தில் ரூபகங்கள் எல்லாம் அபிநயங்களை அடிப்படையாகக்கொண்டு இருந்ததாக அறியவருகிறது. திருசியகாவ்யங்கள் எல்லாம் அபிநயங்களை அடிப்படையாகக் கொண்டு இருக்குமாயின் பிரிவு எவ்வாறு வரும் என்ற வினு எழும். எல்லா திருசிய காவியங்களுக்கும் அபிநயம் மூலம் பிரிவு இல்லாமலிருந்தபோதிலும் தலைவன். சுவை. கதைஅமைப்பு இவைகள் மூலமாக திருசிய காவியங்கள் பிரிவுக்கு காரணமாகின்றன.

இதன் மூலமாகவே திருசியகாவ்யங்கள் (1) நாடகம் (2) பிரகரணம் (3) பிரஹஸனம் (4) பாணம் (5) வியாயோகம் (6) ஸமவாகாரம் (7) டிமம் (8) வீதி (9) அங்கம் (10) ஈஹாமிருகம் எனப் பத்து விதமாக வகுக்கப்பட்டிருக் கின்றன.

திருசிய காவ்யப் பிரிவுகளுக்கு காரணமான தலைவன், சுவை, கதை அமைப்பு இவைகளை ஆராய்வோம். தலைவன்

தீரோதாத்தன், தீரோத்ததன், தீரலலிதன், தீரசாந்தன். என நான்கு விதமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. கதை அமைப்பு, புராணத்தைத் தழுவியது. கற்பனை. புராணமும் கற்பனையும் சேர்ந்தது என மூன்று விதமாகக் கருதப்படுகிறது. சுவை (1) சிருங்காரம் (2) ஹாஸ்யம் (3) கருணை (4) ரௌத்ரம் (5) வீரம் (6) பயாநகம் (7) பீபத்ஸ (8) அத்புதம் (9) சாந்தம் என ஒன்பது பிரிவை உடையது.

பத்துவிதமான ரூபகங்களுக்குள் நாடகம் என்பது முக்கியமானது. இதை அனுசரித்தே மற்ற எல்லா ரூபங்களையும் நாடகம் என்று சொல்லுகிறார்கள். அது எவ்விதமென்றால் நம் நாட்டில் காவேரி என்ற நதியானது மிகவும் முக்கியமானது அதை அனுசரித்தே மற்ற நதிகளையும் நம் நாட்டில் காவேரி என்று சொல்வதை நாம் வழக்கத்தில் இன்றும் காண்கிறோம். அவ்வாறே மற்ற ரூபகங்களையும் நாடகங்கள் என்ற பெயரால் குறிக்கப்படுகின்றன.

(தொடரும்)

---

## யாது கொடுப்பாய்?

அசனம் கரளம் பணீ கலாபோ
 வஸனம் சர்மச வாஹனம் மஹோக்ஷ:
மம தாஸ்யஸி கிம் கிமஸ்தி சம்போ
 தவ பாதாம்புஜ பக்திமேவ தேஹி.

உலகங்களுக்கு க்ஷேமத்தை உண்டுபண்ணுகிறவனே! விஷம் உனது உணவு. பாம்பு அணியாகிறது. தோல் ஆடையாகவும், ஒரு காளைமாடு வாஹனமாகவும் இருக்கிறது. நீ எனக்கு எதைக் கொடுப்பாய்? கொடுக்கத்தான் என்ன இருக்கிறது; உன்னிடம் உள்ள வஸ்துக்கள் எனக்குப் பயன்படுவன அல்லவே. ஆதலால் உன்னுடைய திருவடித் தாமரையில் பக்தியைக் கொடுத்தருள்வாயாக.

—சிவானந்தலஹரீ.

# ''பிறைநாறுஞ் சீறடி எம்பேதாய்'

திரு. தி பொ ஸ்ரீநிவாசன் அவர்கள்,

திருவாவடுதுறை.

தெய்வமாக் கவிஞராகிய குமரகுருபரர், சிவகாமிஅம்மை இரட்டைமணிமாலையில் இறைவியை,

''மறைநாறுஞ் செவ்வாய் மடக்கிள்ளாய் பிள்ளைப்
பிறைநாறுஞ் சிறடி எம் பேதாய்!'' (செய்யுள் 9)

என்று அழைக்கின்றார்.

''பிள்ளைப், பிறைநாறுஞ் சிறடிஎம்பேதாய்!'' என்று விளிப்பதால் மூன்றாம் பிறைச்சந்திரன் விளங்குகின்ற திருவடியைத் தேவி உடையவள் என்று விளங்குகின்றது. தேவியின் திருவடியில் பிறைச்சந்திரன் விளங்குவதாகக் கூறியது, சதிபதிகளுக்குள் ஏற்படும் பிணக்கில் தலைவி ஊடுங் காலத்துத் தலைவன், தலைவியை வணங்குவதைக் காரணமாகக் கொண்டு கூறியதாகும்.

பார்வதிதேவிக்கு ஏற்பட்ட கோபத்தில் அதாவது ஊடலில் சிவபெருமான் தேவியை வணங்குவதாக வடமொழி, தென் மொழி நூல்களிற் பல இடங்களில் கூறப்பட்டிருக்கின்றது.

நீலகண்டதீக்ஷிதர். ஆனந்த ஸாகரஸ்தவம் என்ற தேவி ஸ்தோத்திர சம்பந்தமான வடமொழி நூலில் பார்வதி தேவிக்கும் சிவபிரானுக்கும் ஏற்பட்ட ஊடல்நிலை நிகழ்ச்சிகளை வர்ணிக்கின்றார்,

''எந்தப் பாதங்களில் வணங்கும் சிவன், வணங்கும்போது பிறையினால் கீறல் முதலான இடையூறு நேரிடா வண்ணம் மெதுவாகப் பட்டதும் படாததுமாகத் தொடுகின்றாரோ அந்தப் பாத தாமரைகளை எனது கரடு முரடான வார்த்தைகள் பீடிக்காதிருக்குமா?'' (சுலோகம். 60)

இறைவன் முடியில் தரித்திருப்பது பிறையே. எனவே, இறைவன் தேவியை வணங்கும்போது இறைவனின் முடியில் உள்ள பிறை தேவியின் பாதங்களில் விளங்க ஏதுவாகின்றது.

ஊடற்காலத்தில் தேவியை இறைவன் வணங்குவதாக ஸ்ரீசங்கரபகவத்பாதர்களும் கேசாதி பாதாந்த வர்ணனை என்ற வடமொழி நூலில் நான்காவது சுலோகத்தில் நெற்றிக்கண்ணைப் பற்றிக் குறிப்பிடுகையில்,

'கோபங்கொண்ட பார்வதியைச் சமாதானம் செய்வதற்காக வணங்கிய காலத்துத் தேவியின் பாதங்களில் உள்ள கட்டைவிரலின் செம்பஞ்சுக்குழம்பு ஒட்டிக்கொண்டதோ' என்று சொல்லும்படியான நெற்றிக்கண் என்று வர்ணிக்கின்றார்கள்.

மூன்றாவது கண்ணின் அக்கினி நிறத்திற்குத் தேவியின் பாதங்களில் உள்ள செம்பஞ்சுக் குழம்பு உவமை.

மகாவித்துவான் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களும் தாம் இயற்றிய திருவானைக்கா அகிலாண்ட நாயகி மாலையில் இந்த ஊடல்நிலை நிகழ்ச்சியை வர்ணித்திருக்கின்றார்கள். அதில் வேறொருநயமும் இருக்கின்றது.

கொடியவனாகிய எனக்கு அருள்புரிய வேண்டும் என்று உன் மணவாளனுக்கு உணர்த்த உனது கருணையினால் நினைத்தால் அதற்குரிய சமயம் உனது ஊடலில் அவர் வணங்குங்காலை எனக்கு அருள்புரிய வேண்டும் என்ற உனது கருணைப் பிரச்னையை முன்வைத்தால் உடனே பலிக்கும் என்று கூறுகின்றார்.

"கொடியவன் இவற்கும் அருள்புரி என்று உன்
கொழுநனுக்கு எனைக்குறித்துணர்த்த
முடிவினின் னருளால் எண்ணினையேல் அம்
முதல்வன் நின் ஊடலை உணர்த்த
அடிபணி பொழுதில் உணர்த்திடல் வேண்டும்
அஃதுடன் பலிக்கும் நீ அறிதி
கடிதலில் கழகஞ்சூழ் திருவானைக்கா அகிலாண்ட
நாயகியே."

(செய்யுள் 12)

 341

சேக்கிழாரும், ஆடவர்களின் குஞ்சியின் பரப்பில் மாதர்களின் பாதங்களில் உள்ள செம்பஞ்சுக் குழம்பு தோய்வதாகக் கூறு கின்றார். தலைவன் தலைவியை ஊடற்காலத்தில் வணங்கும் நிகழ்ச்சியைத்தான் இவ்வாறு சித்திரிக்கின்றார்.

"நஞ்சு சூழ்வன நயனியர் நளின மெல்லடிச்செம்
பஞ்சுசூழ்வன காளையர் குஞ்சியின் பரப்பு" (ஏயர்கோன் 2)

மகளிர் ஊடற்காலத்தில் ஆடவர் வணங்கும் இந்நிகழ்ச் சியை வேறொரு விதமாக அழகு பெறக் கம்பர், இரணியன் கூற்றாகக் கூறுகின்றார்.

இரணியன் ஒருவரை வணங்குவதென்பது எக்காலத்தும் இல்லையாம். இன்றியமையாததாகிவிடுகின்ற ஊடற்காலத் திலும் வணங்குவது கிடையாதாம். இதை இறுமாப்போடும் எக்களிப்போடும் கூறுகின்றான்.

"வணங்குதல் மகளிர் ஊடல்
நாளினும் உளதோ"

இரணியன் கூற்றிலும். ஊடல் நிலையில் தலைவன் தலைவியை வணங்குவது மறைமுகமாகக் காணக்கிடக்கின்றது,

ஸ்ரீ குமரகுருபரருடைய "பிறைநாறுஞ் சிறடி எம் பேதாய்!" என்ற திருவாக்குக்கான விளக்கத்துக்கு ஒத்த * வேறு கருத்துக்களை விரிவஞ்சி இங்கு எடுத்துக் காட்டவில்லை.

---

* பிரபுலிங்க லீலை 'ஆதிபகவன் தனதூட்டல் தணிப்பான் பணிய .... .... சிதமதியும் .... .... விழுஞ் செயற்கும் உவகை செயாமல் .... .... அலைமாது பணியுமதற்கு மனமகிழும் உமையை வணங் குவாம் என்பது முதலியவை இங்கு நினைவில் வரும்.

—முத்து. சு.

---

" முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
றன்னெறி யேசர ணாதல் திண்ணமே "

—அப்பர்.

342

# கலித்தொகையில் நாடகம் எப்படி?

வித்துவான்,
**ஸ்ரீமத் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்**
கட்டளை விசாரணை சீகாழி தேவஸ்தானம்.

அவன் தன்கையில் வில்லுடனும் கழுத்தில் மாலையுடனுந் தான் அவ்வழியே வந்தான். தினைப்புனம் வழியாகவந்த அவன், வேட்டையாடிவிட்ட மானைத்தேடிக்கொண்டு வருபவன்போலக் காணப்பட்டான். அத்தினைப்புனத்தருகே, மானைஒத்த கண் படைத்த மாதரார், ஆடியும் பாடியும் மகிழ்ச்சிக் கடலிலே விளையாடிக் கொண்டிருக்கின்றனர். மானைத் தேடிவந்தவன், இம்மான்விழி மகளிரை உற்று நோக்குகிறான். அவ்வளவுதான். பின் தன்வழியே சென்றுவிடுகிறான். காலச்சக்கரம் விரைந்து சென்றது. ஆனால், அவன் தினந்தோறும் அத்தினைப்புனம் வருவதில் தவறியதில்லை. அப்படித்தான் ஒருநாள் அவன் வருகிறான். அங்குவிளையாடும் மகளிரைப் பார்த்தவாறே நிற்கின்றான். திடீர் என்று, வைத்தபொருள் எதையோ எடுத்து வருவதற்குப் போவதைப்போலப், போய்விடுகின்றான். அந்தச் சமயத்தில் ஒருபெரியவர் காட்டியவழி, அவன் மனத்திரை முன்வந்து நின்றது. அதனால் அவன் வாய்திறந்து பேசவில்லை. கண்களைக்கொண்டு குறிப்புணர்த்துகின்றான். "கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள் என்னபயனும் இல". என்ற மறைமொழிதான், அவனுக்கு அவ்வழியைக் காட்டியது.

அம்மகளிர் கூட்டத்தில் இருந்த தலைவி, ஆமாம், அவள் பெயர் சுகந்தா. இதையெல்லாம் கவனிக்கத்தான் செய்தாள். 'குறிப்பறியமாட்டாதவன் நன்மரம்' என்ற இலக்கணத்திற்கு அவள் இலக்காகிவிடவில்லை. அவன் குறிப்பை உணர்ந்தவள் இரவில் உறக்கம் கொண்டாளல்லள். ஏதோ ஒன்று, அவள் மனத்தில் குடிகொண்டுவிட்டது. இன்னதென்று சொல்ல அப்பெண்ணுக்கு எப்படி இயலும்? அதனால் அவனைப்போல அவளும் துயர் உற்றாள்.

அவனே கண் குறிப்பால் உணர்த்துகிறான். வாய்திறந்து பேசவில்லை. ஆயினும் அவன் உள்ளத்தின் உண்மை இன்னதென்று வெளிப்பட்டுவிட்டது. அதை அவன் வாய்திறந்து

343

சொல்லவும் இல்லை. அந்நிலையிலும் அவள் அத்தன்மையைத் தெரிந்துகொண்டாள். அதனால், அவன் கொண்ட நோயும் அவள் கொண்டாள். அந்நோய் அவளை வருத்துகிறது. அதை வாய்திறந்துசொல்லும் வகையறியாமல் திகைக்கின்றாள். பெண் எனப் பிறந்தாளாதலின் அவளே வலிய அறிவித்தல் பெண் மைக்கு ஒவ்வாதென அஞ்சினாள்'' என்று அவள் வருந்துகிறாள். இந்நிலையில் நாள், திங்கள், ஆண்டு என்ற உருவெடுத்தான் காலதேவன். நடவாததும் நடந்துவிட்டது. யாரும் அறியாதபடி அவனும் அவளும் சந்தித்துவிட்டனர். ஆனாலும், அவளுடைய தோழி சுந்தரிக்கு எல்லாமே தெரியும்போலும். அவள்தெரிந்து கொண்டதை நாமும் தெரிந்து கொள்வோம்.

தலைவன் வாராமலே இருந்தது, தலைவி சுகந்தாவுக்குத் துன் பத்தைத்தான் கொடுத்தது. அவன்வாராதுபோனாலும் அவன் நலம்பற்றிய சேதியாவது வரவேண்டுமே. அதுவும் இல்லை. அல்லது அவன் இருக்கும் இடமாவது தெரியட்டுமே என்றாலும் அதற்கும் வழியில்லை. அதனால் மனம் வருந்தினாள். அவனை எப்போது திரும்பவும் காண்போம் என ஏக்குற்றாள்.

தோழி சுந்தரி :- அம்மா சுகந்தா ! நீ ஏன் ஒருவாறாக இருக்கிறாய்? தேக சுகம் இல்லையா? அன்றி மனோவேதனையா? உன்னிடம் வந்தால் கமகம என்று மணம் வீசுகின்றதே. என்ன மணம்? நேற்றுமாலை நான் உன் கூந்தலை வாரிப்பின்னி மல்லிகைப் பூவல்லவோ சூட்டினேன்? செண்பக மலரின் மணம் எப்படி வந்தது! அதோ, வாடிய செண்பக மலர்கள் உதிர்ந்து கிடக்கின்றனவே! நான் அறியாமல் உனக்கு யார் செண்பக மலரைச் சூட்டினார்கள் ?

சுகந்தா:- தோழி நன்றாய் இருக்கிறது உன் கேள்வி. நீ செண்பக மலர் வைக்காவிட்டால், நானேபறித்துச் சூட்டிக் கொண்டிருக்கக்கூடாதா ? இனிமேல் அவ்வாறு கேட்காதே.

சுந்தரி:- சரி, அதுபோகட்டும். உன்கண்கள் ஏன் சிவந் திருக்கின்றன?

உன் முகங்கூட மாறுபாடாகத் தோன்றுகிறதே.

சுகந்தா :- தோழி! உனக்குப் பித்தம் பிடித்திருக்கிறதா என்ன ? போதும் நிறுத்து.

சுந்தரி :- எனக்கா பித்தம் பிடித்திருக்கிறது? எல்லாம் உனக்குத்தான்.

சுகந்தா :- தோழி! என்னிடம் விளையாடாதே; எனக்கு மிகவும் கோபம் வந்துவிடும்.

சுந்தரி :- உனக்குக் கோபம் வரட்டுமே! நீ முன்போல் எங்களுடன் ஆடிப்பாடுவதில்லை. நீ எங்களோடு வாராமல் எங்கேபோகிறாய்? என்னசெய்கிறாய்? அதை மட்டும் சொல்லேன்.

சுகந்தா :- ஐயோ, கேட்கச் சகிக்கவே இல்லையே. என்ன தலைவேதனை?

சுந்தரி :- ஆமாம்! தலைவேதனையாகத்தான் இருக்கும். நீ சரியாக உண்பதில்லை என்று செவிலித்தாய் சொல்கிறாள். அதுமட்டுமா? நீ சரியாக உறங்குவதுகூட இல்லையாமே. சரி சரி. உன் நெஞ்சம் எங்கேயோ போய்விட்டது. நீ எதை மறைக்கிறாயோ அது அவ்வளவுக்கவ்வளவு எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. போதுமா?

சுகந்தா :- நிறுத்தடி உன் அதிகப்பிரசங்கத்தை. உனக்குக் கோடிபுண்ணியம் உண்டு.

சுந்தரி :- உன் நடை, உடை, பாவனை எல்லாம் மாறுபாடாகக் காண்கின்றனவே?

சுகந்தா :- (பெருமூச்சுவிட்டு) பேசாமல் இரேன்.

சுந்தரி :- நான்சொல்வதைக்கேள். உண்மையா பொய்யா என்று உனக்கே தெரியும். கவனமாகக்கேள் :- முன்னொருநாள் அழகே உருவெடுத்த வாலிபன் ஒருவன் இங்கே வந்தான். கையில் வில்லும் தலையில் கண்ணியும் கொண்டு, மானைத் தேடிக்கொண்டு வருவதுபோல வந்தான். என்னைப்பார்த்தான். தன்நோயைச் (சொல்லாமல்) சொல்லி ஆம்! குறிப்பால் கூறினான். இப்படியே பலநாட்கள் வருவதும் போவதுமாக இருந்தான். அவன் கொண்ட துன்பம் என்னையும் தாக்கியது. அந்நோய் என்னையும் பற்றிக்கொண்டது. 'உன்னைப்போல

யானும் வருந்துகிறேன்' என்று கூறலாம் என்ருல், அது பெண் தன்மைக்கே இழுக்கு. இப்படியே அவனை விட்டுவிட்டால் அவன் என் நினைவாகவேயிருந்து உயிரைப் போக்கிக்கொண்டால், என்ன செய்வதென்று பயந்து தகுந்த சமயத்தில் நாணத்தையும் மீறித் துணிகரச் செயலைச் செய்தேன். அப்போது ஊஞ்சலிலே உட்கார்ந்து ஆடிக்கொண்டிருந்தேன். அந்தச் சமயம் அவன் பின்னுல்வந்து நின்ருன். அவனைப்பார்த்து 'ஐயா! சிறிது தயவுசெய்து வேகமாக ஊஞ்சலை ஆட்டும்' என்றேன்' 'தையால் நன்று நன்று' என்று ஊஞ்சலை ஆட்டினுன்.

சுகந்தாவிற்குத் தலை கிறுகிறு என்று சுழல ஆரம்பித்து விட்டது. உலகமே சுற்றி வருவதைப்போல பிரமை. தன் இரகசியம் வெளிப்பட்டுவிட்டதே என்று எண்ணி நாணம் உற்றுத் தலைகவிழ்ந்தாள்.

• இந்நிகழ்ச்சியை அப்படியே பூர்ண அழகுடன் நாடகமாகச் சித்திரித்துக் காட்டுகிறது பின்வரும் கற்றறிந்தார்போற்றும் கலித்தொகைப் பாட்டு.

'கயமலர் உண்கண்ணுய் காணுய் ஒருவன்
வயமான் அடித்தேர்வான் போலத் தொடைமாண்ட
கண்ணியன் வில்லன் வரும் என்னைநோக்குபு
முன்னத்திற் காட்டுதல் அல்லது தான்உற்ற
நோய் உரைக்கல்லான் பெயருமன் பன்னுளும்
மெய்யறிந் தேற்றெழுவேன் ஆயின்மற்று ஒய்யென
ஒண்குழாய் செல்கெனக் கூறி விடும் பண்பின்
அங்கண் உடையன் அவன்.''

---

## நன்றியறிதல்

"முன்னொருவன் செய்யும் உபகாரம் மூவுலகந்
தன்னைக் கொடுத்தாலும் சாலுமே—என்னே
உயிர்க்குறுதி யாக ஒருவர்சோ றுண்டார்
பிறர்க்குரியர் ஆவரோ பேசு"

(பாரத வெண்பா)

3ஃ6

இலக்கணம்

# தமிழ்ச் செய்யுட்களில் ✠ ✠ எழுத்திலக்கணம்

பன்மொழிப்புலவர்,

**வித்துவான், திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள்**

ஓய்வுபெற்ற ஆராய்ச்சிப் பேராசிரியர், பல்கலைக்கழகம் சென்னை.

(முன் தொடர்ச்சி)

இனி, குற்றியலுகரம் குற்றெழுத்துப்போல் அலகுபெறுதலை நோக்குவோம். இது மேலே குறித்த இரண்டு செய்யுட்களிலும் காணலாகும். அவற்றைத் தவிர வேறே உதாரணம் வருமாறு:

'பாறை படுதயிர் பாலொடு நெய்பொரு
தாறு படப்ப(ள்)ளி ஆகுல மாக
மாறு படமலைந் தாய்ப்படை நெக்கது
சேறு படுமலர் சிந்த விரைந்தே'

என்னுஞ் செய்யுளில் பின் மூன்றடியிலும் முதற் சொற்களில் உள்ள 'று' ஒரு மாத்திரை பெற்றுக் குற்றெழுத்துப்போன்று அலகுபெற்றது காண்க. 'நெக்கது' என்னுஞ் சொல்லிலும் 'து' குறில்போன்றுளது. இன்னும்.

'கழித்தவே லேறு பெற்ற கடத்திடைப் பிணையின் மாழ்கி
விழித்துவெய் துயிர்த்து மெல்ல நடுங்கித்தன் ருேழி கூந்தல்
இழுக்கிவண் டிரியச் சேர்ந்தோர் கொடிப்புல்லுங் கொடியிற்புல்லி
யெழிற்றகை மார்பற் கின்யா ழிதுவுய்த்துக் கொடுமோ என்ருன்.'

இச்செய்யுளிலும் ஏறு, உயிர்த்து, உய்த்து என்பவற்றின் குற்றுகரம் குற்றெழுத்துப்போன்று ஒலித்தலை அறிக, இவ்வாறு வருதலை யாண்டும் அறியலாகும்.

இனி, குற்றியலிகரமும் குற்றெழுத்துப்போன்று ஒரு மாத்திரை யளவினதாதலை நோக்குவோம்:

'எனக்குயி ரென்னப் பட்டான் என்னலாற் பிறரை இல்லான்
முனைத்திற முருக்கி முன்னே மொய்யமர் பலவும் வென்றான்
தனக்கியான் செய்வ செய்தேன் தான்செய்வ செய்க வொன்று
மனக்கினு மொழிய வேண்டா வாழிய ரொழிக என்றான்.'

இச்செய்யுளில் 'தனக்கியான்' என்னுமிடத்தில் 'கி' ஒரு மாத்திரை பெற்றிருத்தலை ஓர்க. இன்னும்,

'நிறத்தெ றிந்து பறித்த நிணங்கொள்வேற்
றிறத்தை வவ்விய சேயரிக் கண்ணினாள்
பிறப்பு ணர்ந்தவர் போற்றமர் பேச்செலாம்
வெறுத்தி யாவையு மேவல ளாயினாள்.'

இச்செய்யுளில், 'வெறுத்தியாவையும்' என்பதில் 'தி' ஒருமாத்திரை யொலித்தல் அறிக. இவ்வாறு குற்றியலிகரம் ஒரு மாத்திரையளவு பெறுதல்,

'மாத்திரை யளவும் எழுத்தியல் வகையும்
மேற்கிளந் தன்ன என்மனார் புலவர்'

என்ற தொல்காப்பியனார் கொள்கைக்கு மாறானதே.

இனி, முற்றியலிகரம் ஒலி குறைந்து அலகிடப்படாதிருத்தலும் காணப்படுகின்றது.

'சுண்ணம் முடைந்து சுரமஞ்சரி சோர்ந்து தோழி
விண்ணந் நெடுங்கட் குணமாலையை வைது மாறிப்
புண்மேற் புடையிற் புகைந்தாளுரு வியாது நோக்காள்
கண்ணேக் குடைந்து கடிமாட மடைந்த வாறும்.'

இச்செய்யுளில், 'புகைந்தாளுரு வியாது' என்பதில் முற்றியலிகரமாகிய 'வி' ஒலி குறைந்து குற்றியலிகரம் போன்று அலகிடப்படாதிருத்தலை மேலையடிகளை நோக்கின் அறியலாகும். ஈண்டு 'வி' என்பதில்லாமலே, 'புகைந்தாளுருயாது நோக்காள்' என்று எழுதினும் அமையும், உரு என்பதனோடு 'வு' சேரவேண்டுதல் இன்மையின்.

இனி, ஐகாரம் மொழிகளில் ஒரு மாத்திரை பெற்று, குறில் போன்றொலித்தலை நோக்குவோம். செய்யுளில் அடியின்

3248



முதலில் நிற்கும் ஐகாரம் ஒரு மாத்திரையதாதல் இல்லை; மொழியின் இடையிலும் கடையிலும் நிற்கும் ஐகாரமே ஒரு மாத்திரைய்தாகும். அடியின் முதலில் நிற்கும் ஐகாரம் அய் என்று ஒலித்தாலும் இரண்டு மாத்திரையதாகும்.

ஐகாரம் ஒரு மாத்திரையதாதற்கு :

'வலைப்படு மானென மஞ்ஞையெ னத்தம்
முலைப்படு முத்தொடு மொய்குழல் வேய்ந்த'

என்னும் பகுதியில் 'மஞ்ஞையெ' என்னுஞ் சீரில், ஞை குறிலாயொலித்து முன்னின்ற 'யெ' என்பதனோடு சேர்ந்து குறிலிணையாகிய நிரையசை ஆயினவாறு காண்க. இன்னும்,

'செங்கட் புன்மயிர்த் தோ றிரை செம்முக
வெங்க ணேக்கிற்குப் பாயமி லேச்சனைச்
செங்கட் டீவிழி யாத்தெழித் தான்கையு
ளங்கட் போது பிசைந்தடு கூற்றனுள்.'

என்னும் இச்செய்யுளில் உள்ள 'கையுள்' என்னுஞ் சொல்லில் 'கை' குறில்போல் நின்று 'யு' என்னும் எழுத்தோடு கூடி நிரையசை ஆயினவாறு காண்க.

இனி, ஐகாரம் அடியின் முதலில் 'அய்' என்றொலித்து இரண்டு மாத்திரை பெறுதலை யாண்டுங் காணலாகும். உதாரணமாக :-

'கய்விசை முறுக்கி வீசுங் கொள்ளியும் கறங்கு மேய்ப்பச்
செய்கழற் குருசிற் றிண்டேர் விசையொடு திசைக ளெல்லாம்
அய் என வளைப்ப வீரர் ஆர்த்தன ரவரும் ஆர்த்தார்
மொய்யமர் நாட்செய் தையன் முதல்வினை யாடி னனே'

என்னுமிச்செய்யுளில், 'கை' 'ஐ' என்பன முறையே கய் அய் என்றொலித்தும் இரண்டு மாத்திரைய வாயின காண்க.

இனி, ஔகாரம் அடி முதலில் 'அவ்' என் றொலித்தற்கு :

'பவ்வ நீர்ப்பவ ளக்கொடி போல்பவள்
மவ்வ லங்குழ லாள்சுர மஞ்சரி
கொவ்வை யங்கனி வாய்க்குண மாலையோ
டெவ்வந் தீர்ந்திருந் தாளிது கூறினுள்'

இச்செய்யுளில், பௌ, மௌ என்பவை பவ், மவ் என்றொலித்தலை யறிக.

இனி, உயிரளபெடையில் அளபெழுந்த குறில் தனியே நின்று அலகு பெறுதற்கு :

'பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு'

இச்செய்யுளில் 'விடாஅ' என்பதில் சொல்லின் இறுதியிலும், 'விடாஅதவர்க்கு' என்பதில் சொல்லின் இடையிலும் அளபெழுந்த குறில் தனியே நின்று அலகு பெற்றது காண்க.

இனி, ஒற்றளபெடையில் அளபெழுந்த ஒற்றுத் தனியே நின்று அலகு பெறுதற்கு :

'கண்ண் தண்ணெனக் கண்டுங் கேட்டும்'

என்பதில், 'கண்' என்னுஞ் சொல்லில் அளபெழுந்த 'ண்' தனியேநின்று ஒரு மாத்திரைபெற்று நேரசையாயினவாறு அறிக.

இனி, சொல்லில் ஒற்று இல்லாதவிடத்தும் ஒற்றினைப் புதிதாக அமைத்துக் கொள்ளுதல் உண்டு.

'மைதீரொற் றின்றியும் செய்யுட் கெடினொற்றை உண்டாக்கு' என்பது விதி.

'தங்கு ரவ்வர் தாங்கொடுப்பின் நெஞ்சு நேர்ந்து தாழ்வர்தாம்
பொங்க ரவ்வ வல்குலார் எனப்பு கன்று சொல்லினன்'

இதில், 'குரவர், அரவவல்குலார்' என்னுஞ் சொற்களில் தனி வகரமெய் இல்லையாயினும், செய்யுட்கு ஓசை கருதிச் சேர்க்கப் பட்டதாதல் அறிக.

மகரக் குறுக்கத்திற்கு உதாரணம் :- மேற்காட்டிய உதாரணங்களிற் காணலாம்.

'எண்ணில் கோடிபொன் னீதும்வென் றுற்கென'

என்பதிற் காண்க.

இனி, சிலவிடங்களில் மெல்லின இடையின மெய்கள் இரட்டித்து வந்தவிடத்து, அவற்றில் ஒற்றினை நீக்கி அலகிட வேண்டுவதாயுளது. அம்மெய்களின் அமைதி பின்காட்டப்படும்.

# தூண்டு கோல்!

பனந்தைச் சிவன்

ஓய்வு நேரத்திலே ஒருதரமாவது அந்த நூலை எடுத்துப் பாராதிருக்கமாட்டார் அவர்; அது அவருடைய அன்றாட வாழ்க்கைப் பாதையிலே நிகழ்வது.

அவரது மனைவிக்கு ஏனோ அது ஒரு பெரிய தலைவலியாக இருந்தது. "எப்பப்பார்த்தாலும் இப்படிப் புத்தகத்தையே புரட்டிக்கொண்டிருப்பது ஏன்? அப்படி என்னதான் இருக்கிறது அந்தப்புத்தகத்தில்?" என்று தனது கணவர் புத்தக ஆராய்ச்சியில் மூழ்கிக் கிடக்கும் போது முணுமுணுப்பாள்.

மனைவியின் முணுமுணுப்பு கணவரின் காதிலும் சில சமயங்களில் விழத்தான்செய்யும்; அப்போதெல்லாம் அவருக்குத் திருகுவலிதான். ஆத்திரப்படுவார்; ஆனல் அவருடைய சாந்த இதயம் அப்படியே ஆத்திரத்தை அடக்கிவிடும். இந்தக்காதில் வாங்கி அந்தக்காதில் விட்டுவிடுவார். அப்போது அவருக்குக் கண்டிப்பாக ஒரு சிந்தனை எழத்தான் செய்யும்.

"கல்வியறிவில்லாத ஒரு மனைவி நமக்கென்றுவந்து சேர்ந்தாளே!" என்று தமக்குள்ளே குறைபட்டுக்கொள்ளுவார்.

ஒருநாள்! மனைவிவந்து நின்ருள். அவள் உள்ளத்திலே எழுந்துநின்ற ஏதோ ஒரு கலக்கமானது முகத்திலே நெளிந்தபடியிருந்தது. வீட்டு வாடகை, மளிகை சாமான்கள், மற்றும் பால், தயிர், வெண்ணெய் போன்ற வீட்டுக்குரிய செலவினங்களையெல்லாம் ஒன்றுவிடாமல் உகுத்துக்கொட்டினுள். மனைவிக்குத்தகுந்த பதிலைக்கூறி அனுப்பிவைத்தார் கணவர்.

பின், மூத்தமகன் வந்து நின்ருன்; தனக்குத் தேவைப்பட்ட உடைகள், பள்ளிவகுப்புப் பாடபுத்தகங்கள் ஆகியனவற்றை அப்படியே அடுக்கடுக்காகக்கூறி அதனையெல்லாம் வாங்கித் தருமாறு கேட்டான். அதற்கும் தக்கபதிலைக்கூறி அவனையும் அனுப்பிவைத்தார். பிறகு சிறிது நேரத்திற்குள் அவருடைய இளையமகள் இந்திரா வந்துசேர்ந்தாள். அவள் முகத்தில் ஒரு வாட்டம், கண்களில் கண்ணீர்த்துளி, அதனுல் ஒரு கலங்கிய பார்வை, இவற்றுடன் வந்துநின்ருள் அவள்.

"ஏம்மா! இந்திரா, உனக்கென்ன குறை?......உனக்கு வேண்டிய புத்தகங்களெல்லாந்தான் நேற்று வாங்கியாகிவிட்டதே?......... இன்னும் என்ன செலவைக் கொண்டுவருகிறாய் இப்போ?" என்று கேட்டார் தந்தை. சற்றுநேரம் மயங்கி மயங்கி நின்ற இந்திரா "எனக்கு ஒரு குறை இருக்கிறது; அதை நிறைவேற்றிவைக்கணும்" என்று பீடிகைபோட்டாள்.

"ஏ இந்திரா! பணங்கிணம் கேட்டு இப்போ என்னைத் தொந்தரவுபண்ணாதேம்மா; அந்தக்குறை இருந்தால் சற்று நிறுத்திக்கொள். இன்றைக்கு உன் குறையையும் சேர்த்துக் கொண்டால் எனக்குப் பைத்தியம் பிடித்தாலும் பிடித்துவிடும். கைக்குப் பணம் வந்தவுடன் கண்டிப்பாக உன் குறை எதுவோ அதை நிறைவுசெய்கிறேன்" என்றார் தந்தை.

இந்திரா கலீர் என இருமுறை நகைத்தாள். தந்தை திடுக்கிட்டார்.

"என்ன இந்திரா! ஏன் இப்போது நகைத்தாய்? சற்று முன் அழுதவண்ணமிருந்தாயே?" என்று கேட்டார் தந்தை.

"ஆம், அப்பா! அதற்குள் மறந்தேவிட்டேன்" என்றாள் இந்திரா.

தந்தைக்கு ஒன்றுமே விளங்கவில்லை. இந்திராவை ஏறிட்டுப்பார்த்து "என்ன இந்திரா? எதையோ மறந்துவிட்டதாகச் சொன்னாயே! என்ன அது?" என்று கேட்டார்.

"அதுவா! வந்து.........நீங்கள் கண்டிப்பாக என் குறையைக் கேட்பதானால் சொல்லுகின்றேன்" என்றாள் இந்திரா.

"என்னால் முடியுமானால் உன் குறையைத் தீர்த்துவைக்கிறேன்." என்று தந்தையும் வாக்களித்தார்.

"உட்காருங்களப்பா!" என்றாள் இந்திரா. நீண்ட பெருமூச்சுடன் தந்தையும் உட்கார்ந்தார். மகள் கூறுவதை ஆவலுடன் கேட்கும் பாணியிலே அவளது முகத்தை உற்று நோக்கியிருந்தார் அவர். இந்திரா தன் குறையைக் கூறத் துணிந்தாள்.

தில்லையிலே ஒருநாள், ஓர் வீட்டில் குழந்தையொன்றின் "அம்மா! அம்மா!!" என்ற அழுகுரல் கேட்கிறது. சிறிது

விளுடியில் தாய்வந்து தனது அருமைக்குழந்தையை ஆவலோடு வாரியெடுத்து "என் கண்ணே! மணியே! கனியே! என்று வாயாரப் பாடித் தாலாட்டிப் பாலூட்டுகிருள். குழந்தையின் அழுகுரல் தீர்வதோடு அதன் குறையும் தீர்கிறது.

மற்ருேர் வீட்டின் கொல்லைப்புறத்துக் கொட்டகையிலே கட்டிக்கிடந்த பசுவொன்று "அம்மா!" என்று குரல் கொடுக்கிறது. உடனே வீட்டுக்குரியவர் – மாட்டுக்குரியவர் அதற்கு வைக்கோலைக் கொஞ்சம் எடுத்துவந்து போடுகிருர். பசுவின் குறையும் ஓரளவு தீர்கிறது.

இன்னெருவீட்டுக் கூடத்திலே தூணில் கட்டிக்கிடந்த இளம் பசுங்கன்று ஒன்று "அம்மா! அம்மா!" என்று கதறிக்கொண்டிருக்கிறது. அதைக்கண்ட அந்தவீட்டு அம்மையார் இளங்கன்றை கட்டவிழ்த்துவிடுகிருள். உடனே துள்ளியோடிப்போய்க் கொல்லைப்பக்கத்துக் கொட்டகையிலே இருந்த தாயிடம் வாலைக் குழைத்துப் பாலை ஊட்ட ஆரம்பிக்கிறது பசுங்கன்று அதன் குறையும் தீர்ந்தது. எல்லோருடைய குறைகளையும் நிறைவுசெய்துவருகின்ருன் ஏகம்பவாணன். கோயிலில் குறைசொல்லிக் கண்ணீர்மல்கும் வாதவூரடிகளுக்குக் குறை தீர்ந்தபாடில்லையே ஏன்? ஏனப்பா அப்படி? யாரும் இல்லாத அனுதைபோல அம்பலக்கூத்தனிடம் குறைசொல்லிக் கதறியவண்ணமிருக்கிருரே ஏன்? உங்களுக்கு ஏதாவது தெரிந்தால் சொல்லுங்களேன்!' என்று கேட்டாள் தனது தந்தையிடம் இந்திரா.

தந்தையார் திடுக்கிட்டார். அவருக்கு ஒன்றும் புரியவில்லை உடனே தன் மகளிடம் "என்னம்மா இது! எந்தக்கோயிலில்? எந்த வாதவூரடிகள்?" என்று திடுக்கிட்டுக் கேட்டார் அவர்.

"என்னப்பா இது வேடிக்கை! உங்களுக்கு வாதவூரடிகளைத் தெரியாதா என்ன?' என்று அகல விரித்த கண்களால் ஆச்சர்யப்பார்வை செலுத்திக் கேட்டாள் இந்திரா.

"அதெல்லாம் எனக்கு ஒண்ணும் தெரியாது" என்று எழுந்த தந்தை இந்திராவிடம் "உன்கதையைக் கேட்க எனக்கு இது சமயமில்லை. எனக்கு நேரமாகிறது" என்று கூறிவிட்டு அவ்விடத்தைவிட்டகல ஒரு அடிபெயர்த்துவைத்தார். இந்திரா அவரை விட்டால்தானே!

ஓடிப்போய் அவரை வழிமறைத்து "பாவமப்பா! மணிவாசகர் அழுகிருர்; அலறுகின்ருர். அவர் குரல் உங்கள் காதுக்கு எட்டவில்லையா?" என்று கலங்கினுள்.

"அதெல்லாம் எதுவும் என் காதில் விழவில்லை. சும்மாயிரு!" என்று கூறினர் சற்றுக் கோபமாகத் தந்தை.

"சும்மாயிருப்பதா! நான் சும்மாயிருக்கப்போவதில்லை, அப்பா! மாணிக்கவாசகப்பெருமான் அம்பலக்கூத்தனிடம் கூறும் குறைதனைக் கேளுங்கள்; அங்கே அவர் ஆலயத்தில் அலறும் அலறலைக் கேளுங்கள் சற்றுக் காதுகொடுத்து.

"அருளா தொழிந்தால் அடியேனை
அஞ்சேல் என்பார் ஆரிங்குப்
பொருளா என்னைப் புகுந்தாண்ட
பொன்னே பொன்னம் பலக்கூத்தா
மருளார் மனத்தோ (டு) உனைப்பிரிந்து
வருந்து வேனை வாஎன்றுன்
தெருளார் கூட்டங் காட்டாயேற்
செத்தே போனுற் சிரியாரோ."

கேட்டீர்களாப்பா வாதவூரடிகளின் வாய்மொழியை! சிந்தித்தீர்களாப்பா மணிவாசகப்பெருமானின் மனக் குறையை?

"உனக்குப் பொருளாகாத என்னைப் பொருளாக எண்ணி உனது உள்ளம்படுத்தி என்னை ஆண்டுகொண்ட பொன் போன்றவா! அவ்விதம் நீயே என்னைக் காத்தருள் செய்யா விட்டால் அடியேனை இந்த நிலையில் அஞ்சேல் என்று அபயம் கொடுப்பார் யார்? யார் என்னைத் தேற்றுவிப்பார்? உன்னையன்றி எனக்கு உற்றதுணை வேறு யார் இருக்கிருர்? பொன்னம்பலத்தில் திருநடம் புரியும் புனிதா! என்னை வா என்றழைத்து உன்னுடைய உண்மையை, மெய்யன்பு கொண்ட அடியார் குழாத்துடன் நீ கூடியிருக்கின்ற கூட்டத்தை எனக்குக் காட்டாதுபோனுல் அந்த ஆற்ருமையால் இறந்துபடுவேன். அதனையறிந்த அன்பர்கள் உன்னை இழித்துக் கூறுவர்; நகைசெய்வர்." என்று குறைகூறுகின்ருர். அவர் பக்கம் நான்; அவருக்கு அம்பலக்கூத்தன் அருள் தராவிட்டால் அவர் கூறியபடி நானும் அந்த அருள் தராத வள்ளலை, அம்பலக் கூத்தனை இழித்துரைப்பேன்; எள்ளிநகையாடுவேன். அப்பா! நீங்களும் மாணிக்கவாசகர் பக்கம்தானே? என்று கேட்டாள் இந்திரா.

அவளுடைய தந்தைக்கு வாய் பேசமுடியவில்லை. மௌனமாய் நின்றார் சிறிது விநாடி. பின் இந்திராவைப்பார்த்து "இந்திரா ! உனக்கு இந்தப்பொருளைக் கூறியது யாரம்மா?" எனக் கேட்டார்.

"அப்பா ! எனக்கு இந்தப்பொருளைக் கூறியவர் எனக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்தான். பொன்னனை மணிவாசகத்தின் மாண்பினை எனக்கு எடுத்துக்கூறிய அவ் ஆசிரியர் ஒரு சிவநேசச்செல்வர். என்று கூறிச் சற்று நிறுத்தினாள் இந்திரா தனது பேச்சை.

அப்போது ஆலவாயான் திருநீற்றை அள்ளிப்பூசிய நெற்றியுடன் அமைதியே குடிகொண்ட முகத்தின் மலர்ச்சியுடன் ஓர் இளைஞர் வந்தார். அவர்தான் இந்திராவின் ஆசிரியர். அவரைக் கண்டதும் இந்திரா வணங்கி வரவேற்றாள். அவள் தந்தையார் அவரிடம் "வரவேண்டுமய்யா வரவேண்டும் !" என்று இன்சொல் நயம் இழைந்து ஓடும் குரலில் வரவேற்றுப் பின் "ஐயா, ஆசிரியரே ! என் மகள் இந்திராவுக்குத் தாங்கள் கற்றுக் கொடுக்கும் பாடம் ஞான ஒளி யூட்டும் அமுத பாடமாக இருக்கிறது; இத்தனைநாட்கள் உணரமுடியாத நான் அதை இன்று தான் – இப்போதுதான் உணர்ந்தேன். ஐயா ! தாங்கள் தித்திக்கும் அந்த திருவாசகத்தின் மாண்பினை எனக்கும் விளக்க வேண்டும்." என்று கேட்டுக்கொண்டார்,

"தங்களுக்கா ? நானா பாடம் சொல்லிக்கொடுப்பது ?" என்று திகிலுடன் கேட்டுநின்றார் ஆசிரியர்.

"ஐயா ! ஏன் எனக்குச் சொல்லித்தரக் கூடாதா ? நான் அவ்வளவு பாவியா ? உண்மைதான் ! நானும் அன்றாடம் பல நூல்களைப் பார்த்துக்கொண்டுவருகிறேன்; ஞான நூல் ஒன்றையாவது புரட்டி இருக்காது இந்தக்கை. விளையாட்டல்ல; நான் இதுவரையிலும் வாழ்க்கையில் பெரும்பகுதி கண்ணற்ற ஓவியமான கதைகளைத்தான் படித்துவந்திருக்கிறேன். ஓய்வு நாளிலே ஒருதரமாவது இருவினையகற்றி இன்பவீடளிக்கும் ஞான நூலைப் படித்திருக்கமாட்டேன். இனிமேலும் நான் அப்படி இருக்கமாட்டேன்." என்று கூறிக் கலங்கினார் இந்திராவின் தந்தை.

" என்னை மன்னிக்கவும் எனக்கு அவகாசமே கிடையாது. பள்ளிக்கூடம் சென்று பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கவேண்டும்; எஞ்சிய எனது இடைவேளைகளைத் திருவாசகம் போன்ற ஞானநூல்களின் நயந் தெரிந்துகொள்ள நானும் ஒருவரை அணுகி இருந்துவருகிறேன். வேண்டுமானால் இதோ திருவாசகம்! இதைத்தருகிறேன். இதை மனனம்செய்து முயன்றுபாருங்கள்" என்று கூறிவிட்டு இந்திராவின் தந்தையிடம் ஒரு திருவாசகப் புத்தகத்தைக் கொடுத்தார் ஆசிரியர். அதை அன்புடன் வாங்கிக்கொண்ட இந்திராவின் தந்தை "ஆஹா! என் ஜென்மமே சாபல்யமடைந்ததுபோலும்! எனக்கு இந்தத் திருவாசகம் கிடைத்தது என் மகள் எனக்கு ஓர் தூண்டுகோலாக இருந்ததால்தான். இது எனக்கு கிடைத்தற்கரியது; நான் பெற்ற பெரும்பேறு இது." என்று உள்ளமுவந்தார். இந்திராவின் முகம் திடுக்கிட்டு இப்போது மாறிவிட்டது. அவள் முகத்தில் இருந்த மகிழ்ச்சிரேகை மாறிக் கலக்கம் பளிச்சிட்டது.

" அப்பா! நான் தங்களுக்குத் தூண்டுகோல் இல்லை. இதோ நிற்கும் ஆசிரியர்தான் எனக்குத் தூண்டுகோலாக இருந்தார். அவரால்தான் நான் இன்று திருவாசகத்தில் வரும் ஒரு பாடலைத் தங்களிடம் பாடிக்காட்டினேன்." என்றாள் இந்திரா. அதைக்கேட்ட ஆசிரியர் "என்ன இது! நான் தூண்டுகோல் இல்லை!" என்றார்.

"என்ன!" என்று திடுக்கிட்டார் இந்திராவின் தந்தை.

"ஆ!" என்று ஆச்சரியப்பட்டாள் இந்திரா. அப்போது மௌனமாய் நின்ற ஆசிரியர் "இதில் ஆச்சரியப்படவோ, திடுக்கிடவோ எதுவுமில்லை. நமதுவாழ்க்கையின் பெரும் இருளகற்றி இன்ப ஒளி ஈட்டும் ஞானத் தூண்டுகோல் திருவாசகம்." என்று கூறி முடித்தார். அப்போது இந்திராவின் தந்தை திருவாசகப் புத்தகத்தைப் புரட்டிக்கொண்டிருந்தார்.

# பிள்ளையார் சுழி

திரு. சி. இராமலிங்கம் அவர்கள் எம். ஏ.,
மாற்றும் முதல்வர், ஆதீனக் கீழைக்கலைக்கல்லூரி, தருமபுரம்.

உலகம் பலவகையான பொருள்களால் ஆக்கப்பட்டிருப்பதாகப் பார்க்கிறோம். ஆனால், அப்பொருள்கள் யாவும் மண். நீர், தீ, காற்று, வெளி ஆகிய ஐந்து பூதங்களின் சேர்க்கையால் ஆனவையென்று அறிவியல் அறிஞர்கள் ஆராய்ந்து அறிந்து கூறுகின்றனர். இந்த ஐந்து பூதங்களும் ஒன்றில் ஒன்று ஒடுங்கும் முறையையும் கண்டு சொல்லுகிறார்கள். . மண் நீரிலும், இவையிரண்டும் தீயிலும், இம்மூன்றும் காற்றிலும் இந்நான்கும் வெளியிலும், ஒடுங்கும் என்கிறார்கள். இவ்வெளியுங்கூட ஒலியில் இருந்தே தோன்றுகிறது என்றும் முடிவுசெய்கிறார்கள்.

எனவே, உலகம் முதலில் ஒலி வடிவமாக இருந்து பின்பு முறையே வெளியாகி வெளியும் வளியுமாகி வெளி வளி ஒளியாகி வெளிவளி ஒளி நீராகி நீர் வெளிவளி ஒளி நீர் மண்ணும் ஆகி இருக்கிறது என்று தெரிகிறது. இந்த ஐந்து பொருள்களிலிருந்து நாம் காணும் மற்றப் பொருள்கள் உண்டாயிருக்கின்றன. ஒலியில் இருந்து பொருள் உண்டாகுமா என்பதற்கு ஆராய்ச்சி நடந்தது. அறிவியல் அறிஞர் பேராசிரியர் டிண்டல் என்பார் ஒலி அணுக்களைச் செறித்தால் பொருள் தோன்றுகிறது என்று கண்கூடாகக் காட்ட ஒரு எந்திரமே கண்டுபிடித்தார். அந்த எந்திரத்தில் ஒருபுறம் ஒலி அணுக்களை எழுப்பி அவற்றை மறுபுறம் ஒன்றுசேர்த்தால் ஒரு பொருள் துகள் தோன்றும். ஒலியே பின்பு குவிந்து பொருளாகிறது என்ற உண்மையை எவரும் ஒப்புக்கொள்ளுகிற வகையிலே இந்தக் கருவி செய்து காட்டுவதாயிற்று

ஒரு பொருள் துகள். ஒலியாக மாறுவதை விளக்கப் பெரிய கருவி எதும் தேவையில்லை. ,உலகத்தில் எந்தப் பகுதியில் எவ்வகை ஒலி எழுந்தாலும், அந்தப் பகுதியில் ஓர் அணுவடிவமான பொருள் சிதைந்து ஒளி யணுக்களாக மாறுகின்றது என்பதை சிறிதும் ஐயமின்றி ஒப்புக் கொள்ளலாம். ஒரு

பட்டாசு வெடிக்கும்போது உண்டாகிற ஒலி, அப்பட்டாசின் உள்புறத்தில் அடைபட்டுள்ள பொருளின் ஒரு துகள் ஒலியணுக்களாக மாறுவதனுலேயே யாகும்.

நம்முடைய முன்னேர்கள் இவ்வுண்மைகளைக் கண்டு அறிய ஆய்வுக் கூடங்கள் அமைத்துக்கொள்ளவில்லை; அகநோக்கத்தாலேயே ஆண்டவன், அருள் நினைவினுலேயே, இவற்றையெல்லாம் அவர்கள் உணர்ந்துகொண்டிருந்தனர். அவனுடைய அருளே இந்த ஐந்து பூதங்களின் உள் இருந்தும் அவற்றை இயக்கிக்கொண்டிருக்கின்றது என்றும் தெரிந்திருந்தார்கள். இறைவனைப் போற்றுகின்ற மாணிக்கவாசகப் பெருமான் தமது போற்றித்திருவகவலில் பாடியதைப் பாருங்கள்:

"பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி!
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி!
தீயிடை மூன்ருய்த் திகழ்ந்தாய் போற்றி!
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி!
வெளியிடை யொன்ருய் விளைந்தாய் போற்றி"

இறைவன் கூத்தப்பெருமான் திருவுருவத்தில், வலது மேல் கையில் தாங்கியுள்ள உடுக்கையால் ஒலியை யெழுப்ப அவ்வொலி அவனருளால் உலகமாயிற்று என்று கூறுவர். திருமால் வடிவத்தில், சங்கம் முழக்க அவ்வொலியே உலக வடிவானது என்பர். 'சப்த ப்ரபஞ்சம்', அதாவது ஒலியுலகம் முதலில் தோன்றிப் பிறகு அது அர்த்த ப்ரபஞ்சம் அதாவது பொருள் உலகம் ஆயிற்று என்று சொல்வர். அங்ஙனம் முதலில் தோன்றியது ஒலியே என்பதை வலியுறுத்துகிற முறையிலே கிறித்து சமயத்து விவிலிய நூலில் ஒரு பகுதியும், "முதல் முதலில் சொல் இருந்தது. அச்சொல் இறைவனிடமிருந்தது. அச்சொல்லே இறைவனுக இருந்தது. முதலில் அது இறைவனேடு இருந்தது." என்று தொடங்குகிறது.

இந்த முதல் ஒலியின் வடிவம் என்ன? நாம் கேட்பனவும் கேளாதனவுமான எல்லா ஒலி வகைகளையும் ஒன்று கூட்டிக் குழைத்த வடிவமே இம்மூல ஒலியின் வடிவமாகும். அதுவே பிரணவ வடிவம், ஓம் வடிவம், என்போம். ஒரு சந்தையில் பல ஒலிகளைக் கேட்கிறேம். ஒவ்வோரிடத்தில் ஒவ்வொரு வகையான ஒலி கேட்கிறது. சந்தையை விட்டுச் சிறிது தொலைவு வெளியே

சென்றதும், எடுத்த ஒலிகள் தெளிவாகக் கேட்கின்றன; படுத்த மெல்லொலிகள் அப்பெரிய ஒலிகளில் குழம்பிவிடுகின்றன. நெடுந்தொலைவு சென்று உன்னித்துக் கேட்டால் எந்தத் தனியொலியும் தனியே கேட்காமல் எல்லா ஒலிகளும் கூடிக்குழம்பிய 'ஓம்' என்ற ஒலியே காதில் படுகிறது. ஓம் என்ற ஒலி எல்லா வகை ஒலிகளும் சேர்ந்த ஒலியேயென்பதற்கு இது ஒரு சின்ன எடுத்துக்காட்டாகும்.

நான் படிக்கும் நூல், எழுதும் கருவி, உண்ணும் உணவு, பருகும் நீர், எனது உடல், உடலின் ஒவ்வொரு உறுப்பு யாவும் அந்த மூல 'ஓம்' ஒலியிலிருந்தே உண்டாகிப், பல மாறுதல்களுக்குப் பின் இப்போது காணும் வடிவில் தோன்றுகின்றன. எனவே நான் படிக்கப் புகுமுன் அந்த மூல ஒலியின் நினைவு எனக்கு வரவேண்டும். அந்த ஒலிதான் இந்நூல், அந்த ஒலி தான் எனது இரு கண்கள், அந்த ஒலிதான் இந்நூலைத் தாங்கும் எனது இருகைகள், அந்த ஒலிதான் என் மூளை, அந்தஒலிதான் என்மனம்,புத்தி, அகங்காரம், சித்தம்முதலியன. அந்த ஒலியின் துணையாலேயே இப்போது நான் படிக்கிறேன், அந்த ஒலியில்லையென்றால் என் உடல் இல்லை நூல் இல்லை, உலகமே இல்லை. எனவே, அந்த ஒலியை முதலில் நினைக்க வேண்டாமா? அந்த ஒலியைத் தோற்றிவிட்ட பெரும்பொருளை நினைக்க வேண்டாமா? நன்றி செலுத்த வேண்டாமா? நல்ல வண்ணம் இந்நூலைப் படிக்கத் துணையாக இருக்கக்கூடியது அந்நன்றி நினைவேயாகும், அல்லவா?

அந்த ஒலியையே விநாயகர் என்கிறோம், பிள்ளையார் என்கிறோம், கணேசர் என்கிறோம். நாம்காணும், நாம் நுகரும் எல்லாப் பொருள்களுக்கும் முன்னது ஆதலின் முன்னவன் என்கிறோம். எந்தச் செயல் செய்வதானாலும் முன்னே நினைக்கப்பெற வேண்டியவர் முன்னவனாரே. எல்லாம்வல்ல பொருளை வழிபடத் தொடங்குவதானாலும் முன்னே முன்னவன் வழிபாடு கட்டாயம் தேவையாகும். முன்னவனாரே முழுமுதற் கடவுள் என்ற அளவுக்கும் இம்முன்னவனார் நினைவு சென்றிருக்கிறது. முன்னவனை நினையாமல் தொடங்கிய செயல் செவ்வனே முற்றுப் பெறாது என்று சொல்வது, செய்ந்நன்றி மறந்து துவங்கும் செயல் செவ்வகையாக முடியாது என்பதனாலேயே யாகும். செய்ந்நன்றி மறவாதிருக்கவே எடுத்ததற்கெல்லாம்

முன்னவனுரை முன்னுவது. செய்ந்நன்றி கொன்றூர்க்கு உய் வில்லை; முன்னவனை முன்னின்றால் முடியாத பொருள் இல்லை.

உலகம் அனைத்தையும் ஓம்புகின்ற இந்த 'ஓம்' என்ற ஒலியைத் தமிழில் எழுதுகிறோம், வடமொழியில் எழுதுகிறோம். இரண்டு மொழிகளிலும் அந்த ஒலியின் வரிவடிவம் எப்படி யிருக்கிறதோ அப்படியே அந்த ஒலிக்கு ஒரு திருவுருவமும் அமைத்துக்கொண்டிருக்கிறோம். அன்புகனிந்த கற்பனைகளால் அருளாளர்களும் பிறரும் அவ்வுருவத் தோற்றத்திற்கு அவரவர் கள் கருத்துக்கு இசைய விளக்கங்களும் வரலாறுகள் வரைந்து வைத்திட்டிருக்கின்றனர். அவற்றில் ஏதேனும். ஏதாவதொரு காரணத்தால், எவருக்காவது பிடிக்கவில்லை யென்றாலோ, எவராவது அவற்றை விளங்கிக்கொள்ள அறிவோ மனமோ பெற்றில்லை யென்றாலோ, கவலையில்லை. மூல ஒலியிலிருந்து உலகமே உண்டாயிற்று என்று நமது மூதாதையர்கள் கண்டு உணர்ந்து கூறியிருப்பதற்கேற்ப அறிவியல் அறிஞரும் கூறி யிருப்பது பொய்யாகப் போய்விடப் போவதில்லை. ஒரு குழந் தையின்மீது போட்டிருக்கும் அணிகலனோ ஆடையோ ஒருவ ருக்குப் பிடிக்காமல் இருந்தால், அதற்காக அழகான அக்குழந் தையின்மீது அவர் அருவருப்புக் கொள்வது அழகாகாது. அவர் விருப்பப்படி வேறு அணிகலனோ ஆடையோ போட்டுக் கண்டு களித்துக் கொள்ளட்டும். குழந்தை உண்மையை மறுக்க வேண்டாம்.

இந்த மூல ஒலிதான் உலகத்திற்கே முதல் என்று அறிந் தோம், இந்த ஒலியின் அலைகள் இரண்டு வகையாக இயங்கு கின்றன. ஒன்று வட்ட வட்டமாகச் சுழன்று சென்று கொண் டிருக்கிறது. மற்றொன்று நீளநீளமாக அவ்வட்டத்தில் குத்திக் கொண்டு செல்கிறது. இவ்வுண்மையை நமது முன்னோர் யோகக் கண்கொண்டு கண்டுகொண்டிருந்தனர். இறை வனது அறிவாற்றல், நீளவடிவில் தூயமாயை என்ற குண்டலினியில் பதிந்து அழுத்துகிறதென்றும், அப்போது வட்டச் சுழல் குண்டலினியிலிருந்து உண்டாகிறதென்றும், இப்பதிவும் சுழலுமே உலகத் தோற்றத்திற்கு முதல் என்றும் உணர்ந்திருந்தனர். இவ்வுண்மையை அறிவியல் பேரறிஞ ராகிய சர் ஜேம்ஸ் ஜீன்ஸ் என்பார் தமது 'விந்தைதரும் விய னுலகம்' என்ற நூலிலே விதந்து கூறுகின்றார். "இரண்டு

வகையான அலைகளாலேயே இல்வியனுலகு படைக்கப் பெற்றிருக்கிறது. ஒன்று சுற்றிச் சுற்றிவரும் வட்ட வடிவமானது, மற்றொன்று நேரே ஓடிச்செல்லும் நீள வடிவானது" என்பதே அவர் கண்ட உண்மை.

இந்த வட்டமும் நீளமும் சேர்ந்தே பிள்ளையார்சுழியாகிறது. எதையெழுதுவதானாலும் முன்னே இதனைப்போடுகிறோம். இவ்வுலகம் தோன்றுவதற்கே இந்த இரண்டுவடிவான அலைகளே காரணமானவை. நன்றி யுள்ளத்தோடு, எழுதும் பொருள் நல்லபடி முற்றுப்பெற வேண்டும் என்னும் கருத்தோடு, பிள்ளையார்சுழி போடும் வழக்கம் நமது நாட்டின் நெடுநாளைய வழக்கமாக இருந்துவருகிறது, அறிவான வழக்கம் இது. இவ்வுண்மையையறியாத அனைவரும் இனி யறிந்து பின்பற்றி வரவேண்டிய அருமையான வழக்கமுமாகும்.

---

## REVIEWS:

### Dr, Dharma Bhushanam by Swami Sraddhananda,
### (In Tamil—Rs. 2)

His Holiness Swami Sivananda was known as Doctor Dharmabhushanam P. V. Kuppuswamy Aiyer in his Purva Asrama, while he was practising medical profession at Malaya, because of his wide sympathies and devoted service to His patients and to the poor. The biographer was known. as Narasimha Aiyer in his Purva Asrama and he lived with Doctor Dharmabhushanam in Malaya during those early days Mr. Narasimha Aiyer speaks of intimate anecdotes in this biography which reveal Swamiji's generosity and spiritual out look on life in their incipient form from which they latterly developed into renunciaton and god consciousness. The book is well written and can be read at one sitting. The latter parts of the book contain golden sayings of Swamiji and laudatory songs glorifying Swamiji.

# அன்னையினும் தயவுடையாய்!

மாமூலர்

கடவுள் உணர்ச்சி பெற்ற பெரியவர்கள், ஆண்டவர் அன்புவடிவமாக இருக்கின்றார் என்று சொல்லுகிறார்கள். உலகத்திலே அன்பின் உச்ச நிலையைத் தாயினிடத்துக் காண்கின்றோம். "தாயாய் எனக்குத் தான் எழுந்தருளி" என்று ஔவைப் பிராட்டியார் பரம்பொருளைப் பரவுகின்றார். தாயைக் காட்டிலும் அன்புடையவர் எவராவது இருக்க முடியுமா என்றால், முடியும்; அவர் இறைவனே என்று வள்ளற்பெருமான் கூறுகின்றார். அப்பெருந்தகையாரது "அன்னையினும் தயவுடையாய்!" என்று முறையிடும் அருள் வாக்கே இக்கட்டுரையின் தலைப்பாய் அமைந்தது. "பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்பரிந்து" என்று மாணிக்கவாசகப் பெருமானும் பரமன் அருள் புரியும் பரிவினைப் பாராட்டிப் பாடியிருக்கிறார்.

திருவருள் கைவந்த இப்பெரியார்கள் உணர்ந்து மொழிந்திருப்பதை மறுக்கமுடியாது என்றாலும், திருவருள் துணையினாலேயே நாம் உயிர் வாழ்ந்து வருகின்றோம் உலகம் நடந்து வருகின்றது என்பது உண்மையேயானாலும் நமது வாழ்க்கையில் ஆண்டவரின் அருட்பாங்கை விளக்கமாக உணர முடியவில்லையே என்று ஏங்குகிறோம். அருள் என்பதொன்று உண்டு என்ற எண்ணமே இல்லாமல் ஒவ்வொரு வாழ்க்கையிலும் எத்தனையோ ஆண்டுகள் கடந்துவிடுவதைப் பார்த்து வருந்துகிறோம். எங்கும் ததும்பி விளங்கும் இந்த அருட்பாங்கை நாம் உணராமல் உழலுகின்ற நிலையை நினைந்து நினைந்து அறிஞர்கள் மனம் நைவார்கள். "விஞ்சும் நினது திருவருளை மேவாது உழலும் இடியொருபால்; எஞ்சல் இலவாய் அலைக்கின்றேன். என்செய்கேன் இவ்வெளியேனே!" என்று உள்ளம் உருகி முறையிட்டுக் கொள்கிறார் அருட்பிரகாச வள்ளலாரும்.

பச்சிளங் குழந்தையைப் பாதுகாக்கப் பரிந்து ஓடும் தாயின் அன்பினைக்காட்டிலும், அன்புசெய்ய இடைவிடாது எங்கெங்கும் காத்துக்கொண்டிருக்கும் ஆண்டவரின் அருள்வெள்ளத்தை

ஒவ்வொருவரது வாழ்க்கையிலும், ஒவ்வொரு செயலிலும் உன்னித்துக் காண முயலவேண்டும். முயன்று கண்டுவிட்டால், பின்னர் வேறு என்ன வேண்டியிருக்கிறது இவ்வுலகத்தில்? வேறு எதற்கு அஞ்சவேண்டும் இப்புவியினிலே?

எனது நெருங்கிய உறவினர் ஒருவர் துணைத்தண்டலாராக (டெபுடிகலெக்டராக) இருக்கின்றார். அண்மையில் மாவட்டத் தண்டலாராக உயர்வுபெறும்நிலையில் இருப்பவர். அவருடைய பெருந்தன்மை அவருடைய ஒவ்வொருசெயலிலும் கருக்கொண்டு விளங்கி மகிழ்ச்சியளிக்கும். தாராள மனமுடையவர். இல்லையென்று இரப்பார்க்கு இல்லையென்னாது அள்ளிக்கொடுக்கும் இயல்பு உடையவர். நல்லதே செய்யும் உள்ளம் கொண்டவர். பிறர் தனக்குத் தீங்கு நினைத்தாலும் தான் அவர்க்குத் தீங்கு நினையார். வஞ்சமற்ற நெஞ்சத்தினர். அதிகார இறுமாப்பு சிறிதும் இல்லாதவர். ஆரவாரமற்ற தோற்றமுடையவர். குழந்தைபோல இருப்பவர். வாழ்க்கையின் பெரும்பயனான இறவாநிலையையடையும் நினைவு மிகுந்தவர். இந்நிலையை அடையும் முயற்சியில் ஈடுபட்ட இல்லறத்தாரும் துறவிகளும் இவருக்கு நெருங்கிய நண்பர்கள். இவர் உள்ளத்தில் ஆண்டவர் அருள் நடனம் புரிகின்றார் என்று நான் மனம் பூரிப்பேன்.

இவருடைய வாழ்க்கையில் சில நிகழ்ச்சிகளில், அன்னையினும் தயவுடைய அருட்பாங்கின் திருச்செயலைக் கண்டு களிபேருவகையடைந்தேன். இரண்டு நிகழ்ச்சிகளை இங்கேகூற விரும்புகின்றேன்.

அலுவல் முறையிலே தலைமையிடத்தைவிட்டுப் பலமைல் தொலைவிலே ஓர் ஊருக்குப் போயிருந்தார். அங்கிருந்த அலுவலகத்தின் வாயிலிலே தான் ஏறிச்சென்றிருந்த உந்து வண்டியை (மோட்டார்கார்) விட்டுவிட்டு உள்ளே சென்றிருந்தார். மாலைநேரம் அலுவலை முடித்துக்கொண்டு வெளியே வந்தார். உந்து காணவில்லை. எங்கே போயிற்று என்று அங்கிருந்த ஏவலரைக் கேட்டார். இவரது நண்பர் ஒருவர் அங்கே வந்ததாகவும், அடுத்துள்ள சிற்றூருக்குச் சென்று விரைவில் திரும்பி வருவதாகக்கூறி வண்டியில் ஏறிச்சென்றதாகவும் ஏவலர் சொன்னார்.

வண்டியில் சில குறைபாடுகள் இருந்ததால் அன்றே இருட்டுக்குமுன் தலைமையிடப்சேர எண்ணியிருந்த இவருக்குச் சினம் வந்துவிட்டது. ஏவலரைக் கண்டித்தார். ஏவலருக்கும் மாலையே திரும்பவேண்டும் என்பது தெரிந்திருந்தும் வந்த நண்பருக்கு நிலையைக் கூறித் தடுக்காமல், வண்டியை எடுத்துக் கொண்டுபோக விட்டுவிட்டாரே என்று வருந்தினர். வந்த நண்பரும் அவ்வளவு உரிமையோடு நடந்துகொள்பவர் அல்லரே; கேளாமல் வண்டியை எடுத்துக்கொண்டு போகமாட்டாரே; ஏன் இப்படி அவர் கேட்காமலே இச்செயலைச் செய்துவிட்டார் என்று எரிச்சலும் கொண்டார். மறுபடியும் அலுவலகத்திற் குள்ளேயே சென்று உட்கார்ந்து பொறுமையிலாது வண்டியை எதிர்பார்த்தபடியிருந்தார். ஏவலர் தெருக்கோடியில் சென்று வண்டியின் வரவை நோக்கியபடியிருந்தார்.

ஒருமணிநேரம் தாழ்த்தது. இடையில் நல்ல மழையும் அடித்துவிட்டது. வண்டிவரும் ஓசையும் கேட்டது. வண்டியில் வந்த நண்பர் தெருக்கோடியிலேயே இறங்கிக்கொண்டார். ஏவலர் வழியாகச் செய்தியறிந்த அவருக்குத் தான்செய்த தவறு விளக்கமாயிற்று. தனது நண்பரைப் பார்த்து மன்னிப்புக் கேட்கவும் இது நேரமல்ல என்று அப்படியே சென்றுவிட்டார்.

வண்டி அலுவலகத்தண்டை வந்ததும் அதில் துணைத் தண்டலாரும் ஏவலரும் ஏறிக்கொண்டார்கள். வண்டியும் விரைந்து தலைமையிடம் செல்லப் புறப்பட்டது. அங்குக் கொஞ்சமாய்ப் பெய்திருந்த மழை, வழியில் செல்லச்செல்லப் பலமாக அடித்திருப்பதாகத் தெரிந்தது. புயல்காற்றும் அடித் திருக்கவேண்டும் என்பதும் தெளிவாயிற்று. சாலையில் பல பெரிய மரங்கள் முறிந்து விழுந்துகிடந்தன.

நண்பர் வண்டியை எடுத்துக்கொண்டு சிற்றூருக்குச் சென்றிராமல் இருந்து, குறித்த நேரத்தில் புறப்பட்டிருந்தால், கட்டாயம் வழியில் வண்டியின்மீது ஏதாவது ஒரு மரம் முறிந்து விழுந்திருக்கும். வண்டி நொறுங்கியிருக்கும் என்பது திண்ணம். உள்ளிருப்பவர் நிலை என்ன ஆயிருக்குமென்று கூறத் தேவை யில்லை. இல்லை, அந்நண்பர் என்றுமில்லாத உரிமை அன்று பாராட்டிக் கேளாமலே வண்டியை எடுத்துக்கொண்டு செல்லத் துணியாமல் நேரே வந்து கேட்டிருந்தாலும், இவர் கட்டாயம் வண்டியை எடுத்துச்செல்ல இடந்தந்திருக்கமாட்டார்.

அன்னையாயினும் இவ்வளவு முன் எச்சரிக்கையோடு அருள்செய்ய முடியுமா? என்னே! தாயினும் தயவுடைய தன்மை!

இன்னொரு நிகழ்ச்சி. இவருடைய அலுவல் நண்பர் ஒருவர் வேட்டையாடுவதிலே விருப்பமுடையவர். துப்பாக்கிப் பயின்றிருப்பது அலுவல் முறைக்கும் நல்லது என்று இவருக்கும் துப்பாக்கிச் சுடக் கற்றுக்கொடுத்தார். அலுவல் சுற்றுப் பயணத்திலே அடர்ந்த காட்டு வழியாக ஒருமுறை செல்ல நேர்ந்தது. விளக்குவைக்கும் நேரம். அங்கொரு சிற்றூர். அவ்வூரார் அச்சம் மிகுந்து இருந்தனர். ஏன் பயப்படுகிறீர்கள் என்று கேட்டறிந்தார். அதற்கு முன்னாள் இரண்டு புலிகள் சண்டையிட்டுக்கொண்டதாயும், ஒன்று மாண்டதாயும், மற்றொன்று அவ்வூர்ப் புறத்து மலைக் குகையில் வெறிகொண்டு இருந்ததாயும், இரவு வெளிவந்தால் என்னசெய்யுமோ என்று அஞ்சுவதாயும் கூறினர் அவ்வூரவர்.

உடனே இவர் அம்மலைக்கு அருகே பரண் ஒன்று கட்டச் சொன்னார். அதில் கையில் துப்பாக்கியோடு தானும் மற்றொருவருமாக ஏறிப் படுத்துக்கொண்டனர். எதிரே ஓர் ஆடு கட்டப்பட்டது. புலியின் வரவை எதிர்நோக்கியிருந்தனர். புலிவந்து ஆட்டைப் பற்றியதுமே, பரண்மீது இருந்து சுடுவது என்றும், சுட்ட ஓசை கேட்டதுமே தொலைவில் இருபுறத்திலும் நிறுத்தியிருந்த இரண்டு 'ஜீப்' உந்துவண்டிகளின்முன் விளக்குகளை ஏற்றி, இருவண்டிகளையும் பேரொலியோடு ஆடுகட்டிய இடம் நோக்கி விரைந்து ஓட்டிவருவதென்றும் ஏற்பாடு. அப்படிப் பெருவெளிச்சத்தோடும் ஓசையோடும் இரு வண்டிகளும் தன்னை நோக்கி வந்தால், ஒருவேளை புலி துப்பாக்கிக் குண்டுகளால் சரியாக அடிக்கப்படாமல் இருந்தாலும் பரணை நோக்கி வராமல் ஓடிவிடும் என்னும் எண்ணத்தோடேயே இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

புலியின் உறுமல் கேட்டுக்கொண்டிருந்தது. ஆனால் விடிய விடியக் காத்தும் புலி வரவில்லை. சரி, சரி, புலி வரப்போவதில்லையென்று பரணை விட்டு இறங்கிப் பயணமானார்கள். கையில் புலியைச் சுடவைத்திருந்த துப்பாக்கியிருந்தது. வழியில் ஓர் ஆந்தை தென்பட்டது. அதைச்சுட்டனர். சுட்ட ஓசையே

கேட்கவில்லை. குண்டே ஓடவில்லை. ஆந்தை அசையவேயில்லை. என்ன என்று துப்பாக்கியைச் சோதித்தால், தோட்டாக்கள் சரியாகப் பொருத்தப்படவேயில்லை என்பது தெரிந்தது.

இந்நிலையில் இரவு உண்மையாகவே புலி வந்துவிட்டிருந்தால், துப்பாக்கிப் பயன்பட்டிருக்காது. புலி ஆட்டை அடித்துவிட்டோ, அடிக்காமலோ, நேரே பரண்மீது பாய்ந்துவிட்டிருக்கும். விரைவு விரைவாகக் கட்டிய கால்கள் ஆடிக்கொண்டிருந்த சிறு பரண்மீது இருந்தவர் நிலை என்ன ஆயிருக்கும் என்று சொல்லவேண்டுவதில்லை.

திருவருள் செயலை என்னவென்று வியப்பது! 'அன்னையினும் தயவுடையாய்!' 'அன்னையினும் தயவுடையாய்!' 'அன்னையினும் தயவுடையாய்!' என்று எத்தனைமுறை சொன்னாலும் சொல்லிக்கொண்டேயிருக்கலாமல்லவா?

பொங்கித் ததும்பிப் பூரணமாய் எங்கும் இலங்கும் இவ்வருளை ஒவ்வொரு செயலிலும் உணரும் உள்ளம் நமக்கு என்று வாய்க்குமோ?

## REVIEWS:

Women Saints of Christendom by Sri P. Chenchiah
(Price 4 Annas)

This contains an account of the Christian women Saints as many as twenty eight by Mr. P. Chenchiah a learned and devout Christian. The lives are inspiring

Light, Power, and Wisdom Vol I Nos 9—10

This is a birth day issue for the year 1954. It contains a series of useful upadesh's conducive to the earnest seekers spiritual uplift.

Y. Mahalinga Sastri.

# தமிழர் திருமண முறைகள்

**வித்துவான், திரு வி. சா. குருசாமி அவர்கள்**
தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

தமிழர் திருமண முறையை விளக்கும் மற்றுமோர் அகநானூற்றுச் செய்யுள். மணம் செய்தற்குரிய முன்னாளிரவெல்லாம், 'உளுந்து முதலியவற்றை கூட்டிச் சமைக்கும் கூட்டு, பொங்கல் முதலான உணவு வகைகள் மணம் செய்யும் மனையில் இடையறாது தயாரிக்கப் பெறுகின்றது. வரிசையாகக் கால்கள் நிறுத்திய மணப்பந்தரில் புதுமணல் பரப்பப் பெற்றிருக்கிறது. மங்கல விளக்கு சுடர்விட்டவண்ணம் இருக்கின்றது, மாலைகள் தொங்கவிடப்பெற்று மணவறை அழகுறுத்தப்பெறுகிறது. அன்றைய விடியற்காலை, தீயகோள்களின் தொடர்பு நீங்கப்பெற்ற வெண்திங்களை உரோகிணி கூடிய நாள்; உயரியநாள். மணங்கூடிய நீர்நிறைந்த புதிய குடங்களைத் தலையில் தாங்கியும் புதிய மண்டை என்னும் அகலை ஏந்தியும் முறைமுறையாகக் கொணர்ந்து முன்னும் பின்னுமாக மங்கல மகளிர் கொடுக்க, புதல்வரைப் பயந்த பூங்கொடிமகளிர் நால்வர் கூடி அம்மணம்நிறைந்த நீர்க்குடங்களைவாங்கி, நெல் மணமலர் பெய்து 'கற்புநெறி வழுவாது காதலிற் சிறந்து தற்காத்துத், தற்கொண்டான்பேணித் தகைசான்ற சொற்காத்து விருந்தினரைப் பேணி மக்களைப் பெற்று, கணவன் விரும்புங் காரிகையாகுக' எனவாழ்த்தி மணமகளைநீராட்டி, புதிய ஆடை உடுத்தி அணிகள் பல அணிவித்து, மலர் சூட்டி மணப்பந்தரில் அமரச் செய்வர். பின்னர் நன்மகளிர் எல்லோரும் 'பெருமைக்குரிய பேரில் கிழத்தியாகுக' என வாழ்த்துக்கூறத் திருமணம் நடைபெறும். இது கீழ்வரும் பாடலின் கருத்து.

'உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ்சோற் றமலைநிற்ப நிரைகால்
தண்பெரும் பந்தர்த் திருமணல் ஞெமிரி

மணிவிளக் குறுத்து மாலை தொடரிக்
கனையிரு ளகன்ற கவின்பெறு காலைக்
கோள்கால் நீங்கிய கொடுவெண் திங்கள்
கேடில் விழுப்புகழ் நாள்தலை வந்தென
உச்சிக் குடத்தர் புத்தகல் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தரப்
புதல்வர்ப் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பினின் வழா நற்பல உதவி
பெற்றோற் பெட்கும் பிணையை ஆகென
நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க
வதுவை நன்மணம் கழிந்த பின்றை.' —அகம். 86.

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் திருமண முறை கூறப்பெறுகிறது. மாநாய்கனின் மகள் கண்ணகி. மாசாத்துவானின் மகன் கோவலன். பெற்றோர் கண்ணகியைக் கோவலனுக்குக் கொடுக்க இசைகின்றனர். மண விழா மிகச் சிறந்தமுறையிலே நடைபெறுகிறது என்பதைப் பாடற்பகுதியின் ஆரம்பமே தெரிவிக்கிறது. பெருங்குடி வணிகன் மாசாத்துவான்; மன்னனுக்கு அடுத்த தகுதியில் உள்ளவன் செல்வநிலையில். மணவிழா எடுத்தற்குச் சில நாட்களுக்குமுன் களிறுகளின்மேல் கன்னியர் அமர்ந்து நகரப் பெருமக்களுக்குக் கோவலன் கண்ணகியின் திருமணத்தை அறிவிக்கின்றனர் அப்பெண்கள்.

'யானை எருத்தத்து அணியிழையார் மேலிரீஇ
மா நகர்க் கீந்தார் மணம்' —சிலம்பு.

அதை அடுத்து, முரசவாத்தியங்கள் முதலிய ஒலிக்கின்றன. மங்கல விளக்கு அழகுற எரிகின்றது. மணப்பந்தர் நீலப் பட்டாடையின்கீழ்த் தொங்கவிடப்பெற்ற முத்து மாலைகள் விளங்குமாறு அமைக்கப்பெற்றுள்ளது. மணமக்கள் அதன்கீழ் அமர்ந்து அந்தணர் ஒருவரை ஆசாரியராகக்கொண்டு தீ வலஞ் செய்து மணம் முடிக்கின்றனர். இத் திருமணமும் மதியம் உரோகிணியைக் கூடும் நாளில்தான் நடைபெறுகிறது:

'முரசியம்பின முருடதிர்ந்தன முறைஎழுந்தன பணிலம்
வெண்குடை
அரசெழுந்ததோர் படிஎழுந்தது அகலுள் மங்கல அணிஎழுந்தது
மாலைதாழ் சென்னி வயிர மணித் தூணகத்து
நீல விதானத்து நித்திலப்பூப் பந்தர்க்கீழ்
வானூர் மதியம் சகடணைய வானத்துச்
சாலி ஒருமீன் தகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலஞ் செய்வது காண்பார்கள் நோன்பென்னை' —சிலம்பு.

பின்னர் மங்கலப் பொருள்களை ஏந்திய மங்கல மகளிர் ஒன்று கூடி மணமகளை 'காதலனைப் பிரிவின்றியும் பற்றியகை நெகிழா மலும் துன்பங்கள் அற்று இன்பம் பெற்று இனிது வாழ்க' என ஏத்துகின்றனர்.

'போதொடு விரிகூந்தல் பொலனறுங் கொடியன்னார்
காதலற் பிரியாமல் கவவுக்கை நெகிழாமல்
தீதறு கஎனஏத்திச் சின்மலர் கொடுதூவி
அங்கண் உலகில் அருந்ததி அன்னாளை
மங்கலநல் லமளி ஏற்றினார்' —சிலம்பு.

இம்முறை பத்துப்பாட்டில் மதுரைக் காஞ்சியுள் மணங் கமழும் மலர் நிரைத்துப் பூந்தட்டு மலர் மாலை இவற்றைக் கையில் ஏந்திப் பொற்பொடிதூவி மணமக்களை வாழ்த்தி யதைக் கீழ்வரும் தொடர்கள் அறிவிக்கும்.

'படைகைப் பெய்த கமழ்நறும் பூவினர்
பலவகை விரித்த எதிர்பூங் கோதையர்
பலர்தொகு பிடித்த தாதுகு சுண்ணத்தர்'
—மதுரைக்காஞ்சி.

புறநானூற்றில் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனைப்பாடிய மாங்குடி கிழார் 'போரில் வெற்றிகொண்ட மகிழ்ச்சிப் பெருக்கால் நிரம்பச் சோறாக்கி வீரர்க்கெல்லாம் அளித்துக் களவேள்வி செய்ததை மணவிழாவன்று உற்றார் பெற்றார்க்கும் ஏழை எளியர்கட்கும் உண்டி கொடுக்கும் சிறப்பை உவமையாகவைத்துப் பேசுகிறார்.

'ஈனு வேண்மா ளிடந்துழந் தட்ட
மாமறி பிண்டம் வாலுவ னேந்த
வதுவை விழவின் புதுவோர்க் கெல்லாம்
வெவ்வாய்ப் பெய்த பூதநீர் சால்கென
புலவுக் களம்பொலிய வேட்டோய்நின்
நிலவுத் திகழ்ஆரம் முகக்குவ மெனவே" —புறம்.

திருமணத்தன்று உறுதிகூறல் பெருவழக்கம் என்பதை,

'நெஞ்சு களனுக நீயலன் யானென
நற்றேள் மணந்த ஞான்றை
தாவா வஞ்சின முரைத்தது' —குறு 36.

'நேரிறை முன்கை பற்றிச்
சூரர மகளிரொ டுற்ற சூளே' —குறு.

'ஏமுறு வஞ்சினம் வாய்மையில் தேற்றி' —குறிஞ்சி 210.

'எஞ்சா வஞ்சினம் நெஞ்செனக் கூறி' —நற் 214

'நெஞ்சுண அறிய வஞ்சினம் சொல்லியும்' —அகம் 175.

'பணையெழில் மென்றேள் அணைஇய அந்நாள்
வஞ்சினம் செய்த கள்வன்' —குறுந் 318

'நல்லசொல்லி மணந்தினி நீயேனென்ற தெவன்கொல்'
—ஐங்குறு 22.

'நீங்கா வஞ்சினம் செய்து நத்துறந்தோர்' —அகம் 378.

என்பனபோன்ற பல தொடர்களால் அறியலாம்.

திருமணத்தைப்பற்றிய பழைய உரையாசிரியர்களின் கருத்துக்களை ஆய்ந்து பிற்கால இலக்கியங்கள் மற்றும் சில சங்க இலக்கியங்கள் எண்வகை மண வழக்குகள் தாலி இவை பற்றிய கொள்கைகளை அடுத்த இதழில் இனிக் காண்போம்.

(தொடரும்)

320



# தருமை ஒரு திருக்கோயில்

**வித்துவான், திரு. S. T. ஸ்ரீநிவாசாசாரியார் அவர்கள் M.A., L.T.,**

பிரின்ஸிபால், அரசர் கல்லூரி, திருவையாறு.

"நண்ணற்கரிய நளினமலர் நான்முகனும் எண்ணற்கரிய எழிற்றல மாயிசைத்தருமை" யைக்கண்ணுற்றேன். அணுகுங்கால் ஏதோ அரங்கமேடையில் திரைகளில் காண்கின்ற கட்டடங்களைப் பார்க்கும் இன்ப உணர்ச்சி எழுந்தது. தருமையின் அமைப்பில், சுவர்களிலும், பெருவழிகளிலும், கட்டடப் பகுதிகளின் அமைப்பிலும் வளைந்த வரிகளைவிட நேர்க்கோடுகள் (Straight lines) அதிகமாகக் காணப்பட்டன. நேர்மை வாழ்க்கையின் குறிக்கோள் என்பதைத் தருமையம்பதி பேசாது வற்புறுத்திப் பேசிற்றோ?

மாயூரத்தின் கலகலப்பிற்கும் தருமையின் நிம்மதிக்கும் எங்கே ஒப்புமை எழக்கூடும்? மாயூரம் நகரில் மலைபடுகடாத்தில் நாம் காண்கின்ற 'ஓதை' களெல்லாம் காணலாம். தருமையின் அண்மையிலே ஒரு தவநிலை தவழ்கின்றது. அமைதி தாண்டவமாடுகிறது—மனிதன் ஓசையை மறக்கிறான். பேசுபவர்களையும் மறக்கிறான். தன்னொடுதான் அளவளாவ விரும்புகிறான். தருமையம்பதி தன்னொடுதான் அளவளாவும் தவத்தினர்க்கொரு புகலோ என்று கேட்கின்றேன். மாசி மாதமாயினும் எங்கும் வேனில் தலைக்காட்டித் தாண்டவமாடுங்கால், தருமையில் வீசியதண்கால் எவண் எழுந்தது? வந்தவுடன் தோன்றுவது. இறைவன் திருக்கோயில் இந்தக்கட்டடம்மாணவர்களுடைய ஆன்மநிலை .ஒன்றுபற்றியே கவலைப்படுகின்றதென்பதற்கு, இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்? இந்தச் சூழ்நிலையில்தான் திருவள்ளுவரது "கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்" எனுங் குறள் உரை செய்யப்படாது உரைசெயப்பெறுகிறது. இல்லாவிடில் இறைவன் கோயிலுக்கு அந்தக் 'காம்பவுண்டிற்குள்

3/1

என்ன வேலை? அங்கே ஒரு Aerated waters room அல்லவா இருக்கவேண்டும்? அல்லது ஒரு தேனீர்ச்சாலையல்லவா திகழ வேண்டும்?

தருமையில் யான் கண்டது புரட்சியை! புரட்சி என்றால் பயந்து விடாதீர்கள். ஆத்திகர்களே! நான் கண்ட புரட்சி நல்லதொரு புரட்சி. மாணவர்களுக்குப் பழைய செந்தமிழ்ப் புலவர்கள் திரு. மீனாட்சிசுந்தரம்பிள்ளை, உ.வே. சாமிநாத அய்யர் இவர்கள் காலத்துச் சூழ்நிலை அளிக்கப்பட்டுக் கல்வியும் அந்தக் காலத்தின் உயர்வும் தூய்மையும் பெற்றிருக்கிறது. தரையில் விரித்தபாயும், சாய்ந்து தாழ்ந்த கணக்காயர் மேசையும் கண்டகண்ட இடமெல்லாம் கோயிலுங் குளமும் வாவியும் மன்றமுமான சூழ்நிலை எங்கே கிடைக்கும்? யான் மாணவனாய்ப் பயின்ற காலத்தில் ஆசிரியரது பாடம் ருசிக்கா விட்டால், சற்று அப்பால் கவனிக்க நேரும். அப்பொழுது கட்புலனாவது இங்கிலாந்தில் பெயர்பெற்ற வெஸ்ட் மின்ஸ்டர் மாதாகோவில்! இந்தச்சங்கடங்கள் நம் மாணவர்களுக்கு இல்லாமல், பொன்னும் சூழ்நிலைதரும் தருமையின் பெருமை தான் என்னே!!

நான் கண்ட தருமை என்னை மகிழ்வித்த முறையை உள் ளடங்கா மகிழ்ச்சியுடன் தெரிவித்தேன் என்று முடித்துக் கொள்வதற்குள் இன்னொரு முதன்மையான செய்தியையும் சொல்லாது ஒழியேன். வடமொழி பேணி வளர்க்கப்படுகிறது. வடமொழி மாணவர்கள் தமிழ் மாணவர்கள் இருவரும் ஒரு தலைவர்க்கீழ், ஓரே அன்புகொண்ட ஓர் ஆசிரியத்தொகுதியின் கீழ், ஓதி வாழ்கின்றனர். மொழிவெறுப்புத் தாண்டவமாடும் இந்நாட்களில் இது எத்துணை இன்பத்தை அளிக்கிறது ஆயினும் தருமை நன்னகர் இன்னும் வேறு பல புதுமைகளைக் கைஆள வேண்டும். என்னுடைய துணிவுற்ற கூற்றுக்காக என்னை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மன்னிக்கக்கூடும். என் கூற்றை ஆதரிப்பார்கள். ஏன்? அவர்களுடைய கலை உணர்ச் சியைக் காம்பவுண்டில் எழுகின்ற ஒரு நான்கு அடுக்கு மாளிகையே காட்டுகின்றது. அவர்களின் சமயப்பிரசார அன்பை, மலைமலையாய்க் குவிந்து எழும் புத்தகத்திரளும், மன்றந்தோறும் அவர்தம் ஆணையினால் முழக்கம் செய்யும் புலவர் திரளுமே, விளக்குகின்றன. சமயப்பிரசார அன்பில் சிறந்த நிலையில் இருக்கிறார். கட்டடங்கள் கட்டும் ஆர்வத்திலோ

மகாமகோபாத்யாய, டாக்டர் ... நூல் நிலையம்

மொகலாய மன்னர் ஷாஜஹானை விஞ்சியுள்ளாரென்றே சொலல்வேண்டும்.

"பூங்குயிலே பூம்புனலே பொற்பரையன் தரு பூவாய்" எனப்பெறும் அப்பெருமாட்டியல்லவா உலகுக்கு உண்ணுஞ் சோறும் பருகும் நீரும் அளிப்பவர்? காம்பவுண்டில் வசதியான இடங்களில் கண்ணுதற் கடவுள் காலனை அழிப்பதும், காமவேள் தேடிக் கலக்கமடைந்ததும், விண்ணுறு தேவர் வியனுறத் தோன்றலும், வேதியர் தாருகாவனம் புரிவேள்வியும் மண்ணுறு மானவர் மயக்கமோடவே மாதவன் மன்னவன் மாறுகால் வேண்டலும், இவ்விதம் ஓர் ஆயிரம் அற்புத நிகழ்ச்சிகள் சித்திரமாகவும் சிற்பமாகவும் திகழுதல் வேண்டும். வகுப்புக்களில் உலக எழிலும் உன்னதமும் குடிகொண்ட புள்ளிருக்கு வேளூர், திருக்கடவூர். மாயூரம், சிதம்பரம் முதலிய பதிகளின் முழுத் தோற்றமும் சிற்சில பகுதிகளின் தோற்றமும் புகைப்படம் சித்திரம் இவை வாயிலாகத் திகழுதல் வேண்டும். சோம்பேறியாய்க் கொட்டாவி விடும் மாணவனுடைய உள்ளத்தில் ஓங்கி எழும் புள்ளிருக்கு வேளூர்க் கோவிலின் கோபுரம் ஊக்கம் அளித்து உயர்வு தருமல்லவா? ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் என்னனையவர் உள்ளக்கருத்தையறிந்து, தருமையை முக்கண்ணப்பனின் திருக்கோயிலாக எக்கண்ணும் என்றும் திகழுமாறு செய்ய அடியேனது நூதனக் கருத்துக்களையும் உளங்கொள்வார்களா? கற்பனை உண்மை நிகழ்ச்சி யாகுமா? காலனை அழிக்கும் இறைவனையும் கற்பகால மெல்லாம் கருணையே செய்யும் கற்பக வல்லியாம் இறைவியையும் இறைவனையே இரங்கி ஏவல் புரிவிக்கும் வன்தொண்டர்களையும் பெற்ற சைவப் பெருஞ்சமயம் கலையைக் கருவியாகக் கொள்வதில் இழுக்கு ஏது? இடையூறுதான் ஏது?

---

## REVIEWS:

### Sivananda Gita by Swami Sivananda. Rs: 1

This is an epistolary auto biography of Swamiji. It contains 18 letters and as many pictures of Swamiji. Swamiji in a revealing mood deals with the fundamentals of his spiritual personality The letters are said to have been written in one hour. The unfurlment of the unique personality is elevating in the extreme.

373

தொடர் கதை

# மாசில் வீணை

வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் அவர்கள்,

தமிழ்ப்பேராசிரியர், தருமபுர ஆதீனக் கீழைக்கலைக் கல்லூரி.

***நினைவுக்கு:*** *பறம்பு நாட்டுக்கும் பாண்டிய நாட்டுக்கும் போர் நடந்தது. போரில் பறம்பு மன்னர் விழுப்புண்பட்டு இறந்தார். இளவரசன் பாரியையும் இளவரசி பொன்னியையும் கைதுசெய்ய ஆணையிட்டான் பாண்டிமன்னன், ஆனல் ...... பிறை சூடியார் என்ற புதிய உருப்பினர் ஒருவர் இப்போது காக்க முன் வருகிறார் கதையை மேலே படியுங்கள்.........!*

ஒன்பதாம் அத்தியாயம்

## மூடு பல்லக்கு

சந்தனத்தேவன் தலைமையில் ஒரு அரசியற் குழுவினர் குதிரைகளின் மேலே பிரான்மலைக்கு விரைந்து கொண்டிருந் தனர். இளவரசனையும் இள்வரசியையும் கைது செய்யும் வேகம் அவர்கள் குதிரை வேகத்தோடு போட்டிபோட்டது. ஆம்; சந்தனத்தேவன் மனமெல்லாம் இளவரசி மேலேயே ஒன்றிக்கிடந்தது. அன்று, போர்க்காலத்தில் ஒருநாள் இரவு பிரான்மலைக்குத் தான் சென்றபோது, இளவரசியின் எதிர் பாராத தாக்குதலுக்குத் தற்செயலாகத் தப்பிய நினைவு இப்போது ஏனே அவன் மனத்தில் முந்தி நின்றது.

ஆயிற்று. பிரான்மலை இன்னும் மூன்றுகாத தொலைவு தான். கதிரவன் மேற்கே தனது மஞ்சள் வெயிலை வாரி வீசிக் கொண்டு, கடலை நோக்கிப் பிரயாணம் செய்து கொண்டிருந் தான். சந்தனத்தேவனும் அவன் உடன் வந்தோரும் ஏறிவந்த குதிரைகள் மிக்க களைப்படைந்துவிட்டன. ஏதோ ஒரு சிற்றூர் அது. சாலையோரமாக இருந்த அந்த ஐயனார்கோவில் இடிந்து காணப்பட்டது. கோவிலுக்கு எதிர்ப்புறம் இடிந்து உள்ள படித்துறையோடு ஒரு குளம். குளத்தின் கரையில் விண்ணை

யளாவி, கொப்பும் கிளையுமாகத் தழைந்து நின்றது ஒரு பெரிய அரசமரம். அதற்கு இடது பக்கத்தில் இருந்த பெரிய மண் குதிரை, நான் 'ஐயனர் வாகனம்' இப்போது இப்படி வண்ணம் சிதைந்து இருக்கிறேன்; அப்போது – ஐந்தாண்டுகளுக்கு முன் னுல்வந்து பார்க்கவேண்டும் நீங்கள்; ஆகா! என்னுடைய மேனி தான் எவ்வளவு வர்ணங்கள் தீட்டப்பட்டு எழிலோடு இருந்தது தெரியுமா?' என்று கேட்பதுபோலக் கம்பீரமாக நின்றது.

களைத்துப்போன குதிரையின் மேலிருந்து கீழே குதித்தான் சந்தனத்தேவன். மற்ற மூவரும் தங்கள் குதிரைகளை நிறுத்தி இறங்கினர்.

'வீரர்களே! சற்று இளைப்பாறிச் செல்லலாம்!' என்று கூறியபடிக் குதிரையை இழுத்துச்சென்று அந்தப் பெரிய அரச மரத்தின் வேரில் கட்டினன் தேவன்.

'எவ்வளவு பழைமையான கோவில்! அருமையான வேலைப்பாடு!'

மண் குதிரையை அடுத்து இருந்த அரசமரத்து அடி மேடையில் அமர்ந்தான் சந்தனத்தேவன். மற்ற மூவரும் அவன் காலடியில் உட்கார்ந்தனர். தலைப்பாகையை அவிழ்த்துக் களைப்பாறினர். கதிரவன் மலைவாயில் விழுந்து கொண் டிருந்தான்.

ஐயனர்கோவிலின் பின்புறத்திலிருந்து ஒரு உருவம் மெல்லச் சாலைப்பக்கம் சென்றதை அவர்கள் கவனித்ததாகவே தெரிய வில்லை. ஐயனர் கோயிலின் பின்புறமுள்ள நந்தவனத்தின் ஓரமாகச் சென்றுகொண்டேயிருந்த அவ்வுருவம், சாலையில் ஏறும்போது இருட்டுவதற்கு இன்னும் கொஞ்சநேரந்தான் இருந்தது.

நன்ருகக் கருகருவென்று வளர்ந்திருந்த தாடி; சுருள் சுருளாக அடர்ந்த கருமயிர் கழுத்தோடு விழுந்து அழகு கொடுத் துக் கொண்டிருந்தது. வெண்மையான ஆடை; தோளில் ஒரு துணி மூட்டை தொங்கிக்கொண்டிருந்தது. விசாலமான நெற்றி வலிவுள்ள திரண்ட கைகள். சற்றேறக்குறைய வயது நாற்பது இருக்கலாம். இப்படிக் காட்சியளித்தார் அவர்.

சற்றுநேரத்துக் கொருமுறை உண்டாகிய நெற்றிச் சுருக்கங்கள் அவருடைய எண்ண அலைகளை எடுத்துக் காட்டின. நடை வரவர வேகமாகிக்கொண்டே வந்தது. பிரான்மலைப் பாதை அவர்க்குப் பழக்கமானதுதானே!

பிரான்மலை அரண்மனை. அரண்மனையின்மேல் இருந்த நிலாமுற்றம். மஞ்சத்தில் நீர்வாரும் கண்ணோடு பொன்னிதேவி வானத்தை நோக்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள் பொன்னி தேவி. நீலவானத்தில் கோலமதி தன் வெண்ணிலா அமுதை வாரி வீசியிருந்தான். எண்ணற்ற விண்மீன் குழந்தைகள் நிலா அமுதை வாரிவாரி உண்டன. இந்தக்காட்சியைக்கண்டு சிந்தனை தோய்ந்த நெஞ்சோடிருந்தாள் பொன்னிதேவி. அன்று, போர் தொடங்குவதற்கு முன்னால் இதே நிலாமுற்றத்தில் தந்தை வீரவேள் பேசிய பேச்சை நினைத்துப்பார்த்தாள். அவள் உடம்பு புல்லரித்தது.

தந்தையின் வீரம் ததும்பிய சொற்கள் ...... இதயத்தோடு வெளிப்பட்ட அந்த வார்த்தைகள்......

"படைபலம் மிகுந்த பாண்டியன் திடீரென்று படையெடுத்து வரலாம். இறுதி வரைக்கும் போராடிப் பறம்பு நாட்டார் உரிமையைப் பாதுகாப்பது தம்கையில்தான் இருக்கிறது".

"ஆம் அந்த வார்த்தைகள் உண்மையாகி விட்டன. பாண்டியன் படையெடுத்தே விட்டான். இறுதி வரைக்கும் போராடி நாட்டுக்குத் தம் அரிய உயிரையும் கொடுத்து விட்டார் தந்தை. ஆனால் இனிமேல்... ... ...

இப்படி நினைத்ததும் பொன்னியின் நெஞ்சம் துடித்தது. இன்றோ நாளையோ பாண்டியன் உக்கிரப் பெருவழுதி தன்னையும், இளவரசனையும் சிறை செய்ய ஆணையிட்டாலும் இடலாம் என்று மீண்டும் எண்ணியது அவள் மனம், இதயம் விம்மியது;

"பொன்னி! வருத்தப்படுவது ஏன்? தந்தை மீண்டும் வரப் போகிறார்களா என்ன? வருந்தாதே! மேலே ஆக வேண்டிய செயல்களில் ஈடுபடுவதே அறிவுடைமை"

இளவரசனின் அமைதியான பேச்சு பொன்னிக்கு ஆறுதல் அளிக்கவில்லை. மாறாக இன்னும் கண்ணீர் வெள்ளத்தை பெருக்கியது.

"அம்மா! இளவரசர் இருக்கும்போது இதயக் கலக்கம் ஏன்! மன்னரை மறைத்த, மமதை கொண்ட அரசியலை மண்ணோடு மண்ணாக்க மனங்கொண்டுள்ளார் இளவரசர். வருந்தாதீர்கள் அம்மா!" மருத நம்பியின் பணிவான பேச்சும் இளவரசியின் உள்ளத்தைத் தொடவில்லை. அவள் மனமெல்லாம் தன் அருமருந்தன்ன தந்தையின் மறைவிலேயே ஈடுபட்டிருந்தது. இந்த சமயத்தில் பரபரப்போடு உள்ளே புகுந்தார் பிறைசூடியார். இளவரசே! உடன் பொன்னியோடு புறப்படுங்கள். வாருங்கள் என்னோடு! மன்னன் உக்கிரப்பெருவழுதியின் ஆட்கள் வந்து கொண்டிருக்கிறார்கள் ... ... இம்!' புலவரின் குரலில் மிகுந்த பரபரப்பு இருந்தது. வெகுதூரம் நடந்து வ்ந்ததால் அவர் நெற்றியில் முத்துமுத்தாக வியர்வைத் துளிகள் அரும்பி நின்றன.

"யார்! புலவரா! வாருங்கள் ... அப்படியானால் எதிர்த்து நின்று ... ... என்று தொடர்ந்த பாரியின் பேச்சை அடக்கிற்று பிறை சூடியாரின் கம்பீரமான குரல்.

" இளவரசே! எதிர்த்து நின்று போராடும் உங்கள் இதயத்துக்கு என் வாழ்த்து! ஆனால் காலம், இடம், வலி அறியாது எதிர்த்து நிற்றல்தான் அறிவுடைமையோ?"

பிறைசூடியாரின் குரலில் இப்போது கொஞ்சம் கண்டிப்பு புலப்பட்டது.

"மருதநம்பி! ஏன் மலைத்து நிற்கிறாய்? இளவரசரும் இளவரசியாரும் புறப்படப் பல்லக்கு தயாராகட்டும்! நானும் நீயும் வெண்புரவியில் செல்லலாம்! இம்.....திருக்குற்றால மலையை யடுத்த காடுகளே நாம் சிறிதுகாலம் மறைந்திருத்தலுக்கு ஏற்ற இடம்'

மருதநம்பி என்ன சொல்வான்? மெல்ல நடந்தான்.

இளவரசியையும் இளவரசனையும் மெல்ல அருகில் அழைத்து, 'உங்கள் நன்மையையும், எதிர்காலத்தையும் எண்ணியே சொல்லுகிறேன், என் சொல்லைத் தட்டாதீர்கள் ... ...பொன்னி! என்னம்மா எண்ணுகிறாய்' என்று கேட்டார்.

'தங்கள் கருத்துக்கு மாறாக நான்சொல்ல என்ன இருக்கிறது ?'

அறிவும் அடக்கமும் கலந்த பொானனியின் விடை புலவர்க்கு மிக்க இன்பம் அளித்திருக்க வேண்டும். புலவரின் இதழ்களில் புன்னகை ஒன்று நெளிந்தது.

'இளவரசரின் எண்ணம் எப்படியோ ?'

'தங்கள் கருத்து எங்கள் நன்மையை ஒட்டித்தான் இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை எனக்கு. இருப்பினும் மாற்றானுக்கு அஞ்சி மறைந்து வாழ்வது என்பதுதரன் ...'

'பண்பாட்டுக்கு முரணாக இருக்கிறதே என்று பார்க்கிறீர்கள் ... அவ்வளவுதானே ...

"காலங் கருதி இருப்பர் கலங்காது
ஞாலம் கருதுபவர்"

என்ற திருக்குறள் என்ன சொல்லுகிறது?

'ஞாலம் முழுதும் தம்பால்வர எண்ணுவோரும் காலம் கருதி இருப்பர்'! இருக்கவேண்டும். என்றல்லவா சொல்லுகிறது! ஆகவே ...'

'புலவரின் புலமைக்குமுன் எங்கள் புல்லறிவு எவ்வளவு தூரம்?' இதற்குள் மருதநம்பி வந்துவிட்டான்.

'பல்லக்கும் குதிரைகளும் தயாராக உள்ளன. புறப்படலாம்; பொழுது புலர்வதற்கும் நாம் போய்ச் சேர்வதற்கும் சரியாக இருக்கும்' என்றான் மருதநம்பி.

அடுத்தசிலகண நேரத்தில் பிரான்மலையையடுத்த காட்டுப் பாதை வழியே தீவர்த்தி வெளிச்சத்தோடு ஒரு மூடுபல்லக்கு சென்றது. அதற்கு முன்னும் பின்னும் இரண்டு வெண்புரவிகளில் புலவரும், மருதநம்பியும் இருந்தனர்.

*

376



சந்தனத்தேவன் பிரான்மலையில் தனக்கு இவ்வளவு பெரிய ஏமாற்றம் காத்திருக்குமென எதிர்பார்க்கவே இல்லை. இளவரசனும் இளவரசியும் தப்பிவிட்டனர் ...

சந்தனத்தேவன் கண்களில் தீப்பொறி பறந்தது. பிரான் மலை மக்கள் மட்டும் தம்நாட்டு இளவரசரும் இளவரசியும் பாண்டியர் ஆட்சியில் பணிந்து வாழாமல் எங்கோ சென்று விட்டதுபற்றி இறும்பூதுகொண்டு எக்களித்தனர்:

பூங்காட்டு மண்டபத் தோட்டத்தில் வாழ்ந்து வந்த நிலா முடியனும், மல்லிகையும் இழுத்துவரப் பட்டனர். சந்தனத் தேவனின் உருட்டலுக்கும் மிரட்டலுக்கும் கொஞ்சமும் மனங் கலங்கவில்லை மல்லிகை. நிலாமுடியனும் நெஞ்சுரம் படைத்த வனல்லவா? இளவரசன் இளவரசியைப் பற்றிய விவரங்கள் ஒன்றும் தங்களுக்குத் தெரியாது என்றும் தாங்கள் ஊர்ப் புறத்தே வாழ்பவர்கள் என்றும் உரைத்துவிட்டனர் அவ்விரு வரும்.

வேறு வழியின்றி, மதுரைக்குத் திரும்பினான் சந்தனத் தேவன். பாரியும் பொன்னியும் தப்புவதற்கு, ஐயனார் கோயில் மறைவிலிருந்து புறப்பட்ட அந்த முதியவர்—புலவர் பிறைசூடி யார்தான் காரணமென்பதை அவன் எப்படி அறிவான்?

பறம்புநாட்டு இளவரசனும் இளவரசியும் தப்பிவிட் டார்கள் என்ற செய்தியைப் பாண்டிய மன்னனிடம் எப் படிப் பகர்வது என்ற தயக்கம் அவனுக்கு. ஆம்; உண்மைதான்! உக்கிரப் பெருவழுதி இந்த செய்தியைக் கேட்டால் எரிமலையாக மாறிவிடுவான்! கண்களில் கனல் வீசும்; கருத்தில் வெம்மை தோயும்! பேச்சில் பெருகிவரும் கோபக்கனல்! ஊழிக்காலத்து உருத்திரக் கடவுள்போல மாறிவிடுவான் மன்னன் என்பதை நினைத்ததும் சந்தனத் தேவனுக்கு என்னவோ போல் இருந்தது!

எங்கே தப்பியோடி யிருப்பார்கள் என்று சிந்தித்துச் சிந்தித்து அவன் மூளை சலித்துவிட்டது. மூடுமந்திரமாக இருந்தது அவர்கள் செய்தி. 'ஆம்! அவர்கள் தப்பிய மூடு பல்லக்கின் மூலம் அந்த மூடுமந்திரம் திருக்குற்றால மலைக்குச் சென்றுவிட்டது என்பது அவனுக்கு எப்படித் தெரியும்?

(தொடரும்)

# அறுபத்துமூவர் வரலாறு

திரு. கயப்பாக்கம். சோமசுந்தரம் செட்டியார் அவர்கள்
சென்னை.

முன் இதழ்த் தொடர்ச்சி

(சம்பாஷணை — ராமனுக்கும், சோமனுக்கும்.)

முன் ஏற்பாட்டின்படி ராமனும் சோமனும் மறுநாள் காலையில் திருமயிலைக் கபாலீசுவரர் கோயில் வாயிலில் சந்திக்கிறார்கள்.

ராமன்: சோமு! வணக்கம். கோயிலுக்குள் போகலாமா?

சோமன்: ராமா! நீ இவ்வளவு விரைவில் வந்ததுபற்றி மகிழ்ச்சி. இது உனக்கு அறுபத்துமூவர் வரலாற்றைச் சரிவரத் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற ஆவலைக் காட்டுகின்றது. சரி, வா, உள்ளே செல்லலாம்.

(ஆலயம் மேற்குப்பார்த்த சந்நிதி. உள்ளே நுழைந்து இருவரும் விநாயகப்பெருமானையும், முருகப்பெருமானையும் வணங்கிக்கொண்டு ஸ்ரீ கபாலீசுவரப்பெருமானை வணங்கினார்கள். சுவாமி சந்நிதியைச் சுற்றிவரும்போது அங்குள்ள அறுபத்துமூவரைப் பார்க்கின்றார்கள். அவர்களைக் காட்டிக்கொண்டே ஒவ்வொருவர் வரலாற்றையும் தெளிவாகச் சொல்லி வருகிறான் சோமு. பொறுமையாகக் கேட்டுக்கொள்கிறான் ராமன்).

சோமன்: ராமு! இங்குப்பார்த்தாயா? இவர்தாம் தில்லை வாழந்தணர்களுக்கு பிரதிநிதி. இவருக்கடுத்துள்ளவர் திருநீலகண்டர். இவர் தனியடியார். இப்படியே மற்றவர்களையும் பார்த்துக்கொள்க.

ராமன்: சோமு! அதிருக்கட்டும், இவர்கள் வரலாற்றை ஆரம்பித்துச் சொல்வதற்கு முன்னர், இவர் வரலாற்றைப்

பாடியவர், சேக்கிழார்பெருமான் என்றுயே? அவர் எங்கே? அவர் வரலாற்றை முன்னர்ச் சொல்லிவிடு. பிறகு தொடர்ச்சியாக மற்ற வரலாறுகளைக் கேட்டுக்கொள்கிறேன்.

சோமன்: ராமு! நீ மிகவும் புத்திசாலியப்பா! ஏன் என்றால், மேல்நாட்டார்கள், ஒருவன் ஒரு புத்தகத்தைப் படிக்க வேண்டுமென்று நினைத்தால் முதலில் அப்புத்தகத்தின் முதல் பக்கத்தைப் பார்க்கவேண்டும் என்றும், அதன் ஆசிரியர் யார் என்றும், அதனுள் பேசப்படும் விஷயம் என்ன என்றும் தெரிந்துகொண்ட பின்னர்த்தான் நூலினுள் செல்லவேண்டும் என்கிறார்கள். எனவே, நீ முதலில் தெய்வச் சேக்கிழார் பெருமானைப்பற்றித் தெரிந்துகொண்டு பின்னர் அறுபத்துமூவர் வரலாற்றைக் கேட்கலாமென்று சொல்வது மிகவும் பொருத்தம். உன் புத்தியை நான் மெச்சுகிறேன். சரி, இப்படிவா. இந் நாயன்மார்களையெல்லாம் வணங்கிக்கொண்டேவா, இதோ, கடைசியில் இவர்களைப் பார்த்தவண்ணமாக கையில் புத்தகத்துடன் இருக்கிறாரே, இவர்தாம் அறுபத்துமூவர் வரலாறு கூறும் பெரியபுராணத்தின் ஆசிரியர். இவர் வரலாற்றை முதலில் சொல்லிவிடுகிறேன். கவனமாய்க்கேள்.

ராமன்: சோமு! நீ ஆரம்பிப்பதற்குமுன் ஒரு சந்தேகம்! அதனைத் தீர்த்துவிட்டு மேலே செல்வாய்; ஏதாவது என்மீது கோபமா?

சோமன்: இல்லையப்பா! நீ மிகவும் நல்லவன். பொறுமைசாலி, புத்திசாலி, கேட்டுக்கொள்ளுவதை முதன்முதலிலேயே ஐயம், திரிபு, அறியாமையின்றியே கேட்டுக்கொள்வது சரி என்று நினைத்துக் கேட்கிறாய்! இதில் எனக்கென்னகோபம்? ஒன்றுமில்லை. உன்னைப்போலவே இப்போதுள்ள பலரும் நல்லவர்களை அடுத்துப் பொறுமையாகத் தமக்குள்ள சந்தேகங்களை விளக்கவேண்டினால் பெரியவர்கள் நிதானமாக அச்சந்தேகங்களுக்கெல்லாம் சமாதானம் கூறுவார்கள். சரி, சொல்லட்டுமா?

ராமன்: சரி, சொல்லப்பா; முதலில் இவரை வணங்குவதற்கு ஏதேனும் ஒரு பாட்டு உண்டா? அதனைச் சொல்லிவிட்டுப் பிறகு வரலாற்றை ஆரம்பிக்கலாமென்றுநினைக்கிறேன்.

381

சோமன்: ராமு! நீ இதற்குள்ளாகவே மிகவும் சமத்தா யிருக்கிருயே! மிகவும் மகிழ்ச்சி. கேள்:-

திருச்சிற்றம்பலம்

"தில்லைவாழ் அந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாந் திருத்தொண்டத் தொகைஅடியார் பதம்போற்றி
ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழார் அடிபோற்றி.

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலே, குன்றத்தூர் என்னும் ஊர் உண்டு. அதில் வாழ்ந்தவர் சொன்னசொல்லைக் காப்பாற்றும் தன்மை வாய்ந்த வேளாளர். இக்குலத்தில் சேக்கிழார் குடியில் தோன்றினர் நம் பெரியபுராண ஆசிரியர். இவர் தோன்றினர். வளர்ந்தார். தக்கவயதில் கல்விகேள்விகளில் விளக்கமடைந் தார். இவர் வாழ்ந்த காலம் பன்னிரண்டாம்நூற்ருண்டு. இவரது கல்வித்திறம் எங்கும் பரவியது. இவர்காலத்தில் சோழ நாட்டை ஆண்ட அரசர் அநபாயன் எனப்படுவார். இவரை இரண்டாவது குலோத்துங்கன் என்பர் சரித்திர ஆசிரியர்! நமது ஆசிரியரின் பிள்ளைப்பெயர் அருண்மொழித்தேவர்.

ராமன்: சோமு! ஒரேஒருவார்த்தை குறுக்கே சொல் கிறேன். மன்னிக்கவும்.

சோமன்: சரி, சொல்லப்பா! ஒருவிஷயத்தைத் தொடர்ச் சியாகச் சொல்லிக்கொண்டு வரும்போது மத்தியில் கேள்வி களைக் கேட்டுவைத்தால், என் சிந்தனை சிதறுகிறது. தொடர்ச்சி போய்விடும். அதற்காகத்தான் சொன்னேன். இனிமேல் உனக்கு ஏற்படும் சந்தேகங்களை எல்லாம் ஒரு துண்டு. காகிதத்தில் குறித்துவைத்துக்கொள். நான் ஒரு விஷயத்தைச் சொல்லி முடித்தவுடன் அவற்றைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வும். சரி, கேள்.

ராமன்: இவ்வாசிரியரின் பெயர், அருள்மொழித்தேவர். ஆகா! எவ்வளவு அழகாக இருக்கிறது? நல்ல தூயதமிழ்ப் பெயராக இருக்கிறதே! இம்மாதிரியான பெயரை நாம் இக் காலத்தில் எங்குக் கேட்கிறேம்? என்பதுதான் என் சந்தேகம்.

381



சோமன்: இதுமட்டுமா? இந்நூலாசிரியரின் தம்பி ஒருவரிருந்தார் அப்பா! அவர்பெயர் என்னதெரியுமா? பாலறுவாயர்.

ராமன்: அட, அட. எவ்வளவு அழகான பெயர்! கேட்கச் செவிக்கானந்தம்; சொல்ல வாய்க்கு ஆனந்தம். இனியாவது நம் தோழர்கள் நம் தமிழ்நாட்டுக் குழந்தைகளுக்கெல்லாம் இம்மாதிரியான அழகிய பெயர்களை வைப்பார்களாக! சரி, நீ மேலே சொல்வாயாக.

சோமன்: அநபாய மன்னன் தமது அருண்மொழித் தேவரைத் தன் அரண்மனைக்கு மரியாதைகளுடன் அழைத்து வரச்செய்தான். அவரைப் பல கேள்விகள் கேட்டான் என்று கர்ணபரம்பரையான சில வரலாறுகள் உண்டு. அவைகள் ஆதாரமற்றவைகளானதால் நமக்கு வேண்டுவதில்லை. இவர் திறமையைமெச்சிப் புகழ்ந்தான். அவருக்குத் தங்கள் அரசாங்க வழக்கப்படி "உத்தமசோழப் பல்லவராயர்" என்ற பட்டத்தை வழங்கினன். தனக்கு முதன்மந்திரியாக இருந்து ராஜ்யபாரத்தில் தனக்குத் தக்கதுணை செய்யுமாறு வேண்டினன். இவரும் இணங்கினர். அரசனுக்கு வேண்டிய காரியங்களை எல்லாம் சரிவரச் செய்து முடிப்பார். ஆன்மவிசாரமும் செய்வார். அரசன் அக்காலத்து மிகப் பிரசித்தமாக விளங்கின "ஜீவக சிந்தாமணி" என்னும் ஜைன காவியத்தைப் பாராட்டிவந்தான். அவனை நல்வழியில் திருப்ப எண்ணி "அறுபத்துமூவர் வரலாறுகளைப்பற்றி விரிவாகப் பேசிவந்தார்." அரசனும் நிதானமாகக் கேட்டுக்கொண்டான். அவரைப் பார்த்து "நீங்கள் சொல்லிவரும் விஷயங்களுக்கு ஆதாரமுண்டா?" என்றான். அருண்மொழித்தேவரான சேக்கிழார்பெருமானும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய "தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கு மடியேன்" என்பது முதலாக உள்ள திருத்தொண்டத் தொகையையும், இதற்குத் துணையாக நம்பியாண்டார்நம்பி என்னும் பெரியவர் அருளிச்செய்த "திருத்தொண்டர் திருவந்தாதியையும்" பல தலங்களிலுள்ள கல்வெட்டுக்களில் காணப்படும் உண்மைகளையும், கர்ணபரம்பரையாகத் தாம் கேட்ட சில உண்மை வரலாறுகளையும் ஒன்று சேர்த்து ஒழுங்காக வரலாற்றைச் சொல்லி முடித்தார். அரசனும் மகிழ்ந்தான். இவ்வுண்மை நாயன்மார்களதுபல திறப்பட்ட வரலாறுகளைக் கேட்டு மகிழ்ந்து "யான் பெற்ற இன்பம்

பெறுக இவ்வையகம்" என்ற பரந்தநோக்கத்துடன் சேக்கிழார் பெருமானைப் பார்த்து இவ்வரலாறுகளையெல்லாம் ஒழுங்காக ஒரு சிறந்த காவியமாக எளிய தமிழில் படிப்போர் மனத்தைக் கொள்ளைகொண்டு அரனடி சேர்ப்பிக்கும் தன்மையில் பாடித் தரவேண்டினன். வேண்டியபொருளைக் கொடுத்தான். பல சன்மானனங்களையும் கொடுத்தான். அவருக்கு வேண்டிய மற்ற எல்லா வசதிகளையும் தந்தான். போதுமான அவகாசமும் கொடுத்தான், சேக்கிழார்பெருமானும் அரசனிடம் விடை பெற்றுக்கொண்டு தில்லைக்குச் சென்றார். கூத்தப்பெருமானை வணங்கினார். அரசன் விருப்பத்தைச் சந்நிதியில் தெரிவித்தார். தனக்கு ஆற்றலின்மையையும் விண்ணப்பித்தார். பல தீக்ஷிதர்களும் அப்போது அங்குக் கூடியிருந்தனர். கருத்தறிந்து முடிப்பானாகிய கண்ணுதற்பரமனும் அனைவர் காதுகளிலும் கேட்கும்படி அசரீரிமூலம் "உலகெலாம்." என்ற சொற்றொடரை அருளிப் பாடச்சொன்னார். நடராஜப்பெருமானது பெருங்கருணைத் திறத்தை வியந்தார். ஆயிரக்கால் மண்டபத்திற்குச் சென்றார். பெருமானைத் தியானம் செய்துகொண்டு தன் பசுகரணங்கள் எல்லாம் பதிகரணங்களாக மாற அவன் அருளிய "உலகெலாம்" என்ற சொல் முதலைவைத்துக்கொண்டு பெரிய காவியமான திருத்தொண்டர் புராணத்தை அருளிச் செய்தார். சுந்தரர் கயிலையிலிருந்து நிலவுலகத்திற்கு வந்த வரலாற்றைத் "திருமலைச் சருக்கம்" என்ற தலைப்பில் முதலில் அமைத்துக்கொண்டு பிறகு சுந்தரர் அருளிய திருத்தொண்டத் தொகைப் பாடல்களின் முதலடிகளை ஒவ்வொரு சருக்கமாக அமைத்துக்கொண்டு பதினொரு சருக்கங்களைக்கூறிக் கடைசியில் சுந்தரர் சேரமான்பெருமானுடன் கைலைசேர்ந்த வரலாற்றைப் பதின்மூன்றாவது சருக்கமாகப் பாடி முடித்தார்.

ஆக பெரியபுராணம், 2 காண்டம், 13 சருக்கம், 4253 பாட்டுக்கள் கொண்டு விளங்குகிறது.

பிறகு இதன் பூர்த்தியை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அநபாய மன்னனும் சிதம்பரத்திற்கு வந்து சேர்ந்தான்.

(தொடரும்)

# வருங்காலம்

ஜோதிஷார்ணவம்

பிர்மஸ்ரீ முத்துசோதிடர் அவர்கள், திருவிடைமருதூர்.

(மன்மத-ஸூ சித்திரைமீ 1-உ முதல் 31-உ முடிய)

(14—4—55 முதல் 14—5—55 முடிய)

ஸ்ரீ சர்வேசுவரன் அருளால் மன்மத வருஷத்திய வருங்கால பலன் சகல பிரஜைகளும் பரம சந்தோஷத்துடனும் தனதான்ய விருத்தியோடும், நித்திய மங்களத்தோடும் வாழ்ந்து சுக சௌக்கியங்களை அடைந்துகொண்டு சர்வேசுவரனுடைய சரண பக்தி குன்றாமல் ஆஸ்தீகர்களாய்ப் பிரகாசிப்பார்களாக.

**1. மேஷம்:** அசுவதி, பரணி, கார்த்திகை ¼.

அசுவதி நான்கு பாதங்களும் சென்ற மாதம்போலவே இருப்பதோடு விசேஷமான தனதான்ய லாபத்தையும், சந்தோஷத்தையும் தரும். பரணி 1, 2 பாதங்கள் சுபகாரியங்களையும் கிருஹ சுகபோகங்களையும் உத்தியோக லாபத்தையும் தரும், பரணி 3, 4 பாதங்கள் ஆபத்தையும் அபவாதங்களையும் மிகுந்த நஷ்ட பலன்களையும் தரும். கார்த்திகை முதல்பாதம் வம்ச விருத்தியையும் புத்திர விருத்தியையும் சந்தோஷத்தையும் தரும். புதன் வியாழன் சுபமாகும்.

**2. விருஷபம்** கார்த்திகை ¾ ரோஹிணி, மிருகசீரிஷம். ½

கார்த்திகை 2, 3, 4 பாதங்களும் ஆரோக்கியத்தையும் வித்யாவிருத்தியையும், நஷ்ட தனத்தையும் தரும். மாதக் கடைசியில் பிதுர்வர்க்கக்குறைவையும், கஷ்டத்தையும் காட்டும், ரோஹிணி நான்கு பாதங்களும் நன்மைதரும். உத்தியோக லாபம், பெரியோர் அன்பு, தெய்வபலம் பிரகாசம். விவகார வெற்றி. ராஜசபா பிரவேசம் முதலிய சுபங்களை உண்டுபண்ணும். மிருகசீரிஷம் 1, 2 பாதங்கள் வியாதி பயத்தையும் தேவ கோபத்தையும் தரும். வீண் அலைச்சலையும் மனஸ்தாபங்களையும் உண்டுபண்ணும். சனி செவ்வாய் நலன்காட்டும்.

**3. மிதுனம்:** *மிருகசீரிஷம் ½ திருவாதிரை, புனர்பூசம் ¾.*

மிருகசீரிஷம் 3, 4 பாதங்களும் திருவாதிரை நான்கு பாதங்களும் மிசிர பலனைத்தரும். சுகபோஜனம் வஸ்திராபரணச்சேர்க்கை. சுபசோபனுதிகள் மூலம் அதிகச்செலவுகள், மேலோர் பெரியோர் அன்பு கிட்டுதல், ஆரோக்கியமடைதல், ஜயமுண்டாகுதல் முதலிய சுபங்களைத்தந்து மாதக்கடைசியில் சிற்சில இடைஞ்சல்களை உண்டுபண்ணி மனக்கிலேசத்தைத்தரும். புனர்பூசம் 1, 4 பாதங்கள் மத்தியமாயும், 2, 3 பாதங்கள் பெரிய ஆபத்துக்களையும், திராத வியாதி பயத்தையும், அதிக கஷ்டங்களையும் உண்டுபண்ணும். புதன் வியாழன் அசுபமாகும், சனி சுபமாகும்.

**4. கடகம்:** புனர்பூசம் ¼ பூசம், ஆயில்யம்,

புனர்பூசம் நாலாம்பாதம் அசௌகரியத்தைத் தரும் பூசம் நான்கு பாதங்களும் ரொம்ப சிரமத்தைப் பலவிதத்திலும் உண்டுபண்ணும். ஆயில்யம் நான்கு பாதங்களும் கஷ்டத்திலிருந்து விலக்களிக்கும், எதிர்பாராத சில சௌகரியங்களையும் தரும். புதன் சனி மங்களமாக இருக்கும்.

**5. சிம்மம்:** மகம், பூரம், உத்திரம் ¼.

மகம் நான்கு பாதங்களும் உத்தியோக லாபம் கீர்த்தி பத்திரம் மேலோர் அன்பு சந்தோஷம் இவைகளைத் தரும். பூரம் 4 பாதங்களும், நன்மை இல்லாமலும் கெடுதல் இல்லாமலும் ஓடும், உத்திரம் முதல்பாதம் விவாகாதி மங்கள காரியங்கள் மூலம் அதிக விரயத்தைத் தரும். சனி செவ்வாவ் வியாழன் சுபமாகும்.

**6. கன்னி:** உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½.

உத்திரம் 2, 3, 4 பாதங்கள் பிரயாசையின்பேரில் சுபம் தரும். மந்தமாய் ஓடும். ஹஸ்தம் நான்கு பாதங்களும் தெய்வ பலத்தைத்தந்து, சர்வாபீஷ்டங்களையும் பூர்த்திசெய்துவைக்கும். எதிர்பாராதது எல்லாம் சுலபமாய்சாதிக்கும். அதிக செலவினங்களும் தந்து, அதிக சிரமத்தையும் சரீர ஆயாசத்தையும் அலைச்

சலையும் தந்து சந்தோஷத்தையும் பெரியோர் அன்பையும் தரும். புதன் வியாழன் திங்கள் சுபதினமாகும். சித்திரை 1, 2 பாதங்கள் மந்தமாய் ஓடும்.

7. **துலாம்:** சித்திரை ½, சுவாதி, விசாகம் ¾.

சித்திரை 3, 4 பாதங்கள் கஷ்ட பலனைத்தரும். அலைச்சல் ஏற்படும். சுவாதி நான்கு பாதங்களும் பூரண வெற்றியையும், ஜயத்தையும் லாபத்தையும் காரிய சித்தியையும், தெய்வபலம் பூரணத்தையும் தந்து சுகம் உண்டுபண்ணும். விசாகம் 1, 2, 3 பாதங்கள் குடும்பத் தொல்லைகளை அதிகம் உண்டுபண்ணி கஷ்ட நஷ்டங்களை விசேஷமாய்க் கொடுக்கும், சனி செவ்வாய் சுபத்தையும் வியாழன் ஞாயிறு கவலையையும் தரும்.

8. **விருச்சிகம்:** விசாகம் ¼, அனுஷம், கேட்டை.

விசாகம் நாலாம்பாதம் அமங்களத்தைத் தரும். அனுஷம் நான்கு பாதங்களும் தூரயாத்திரை குடும்பத்தில் மங்கள காரியங்கள், ஸ்தாவர ஜங்கமங்கள் சேருதல், சுபசந்தோஷம் இவைகளைத் தரும், கேட்டை நான்கு பாதங்களும் தொழில் விருத்தி இல்லறசுகம், ஆரோக்கியம், தனவரத்து பெரியோர் தரிசனம் இவைகளைத்தந்து சந்தோஷத்தைத் தரும். வியாழன் வெள்ளி சுபவாரமாகும்.

9. **தனுசு:** மூலம், பூராடம், உத்திராடம் ¼.

மூலம் நான்கு பாதங்களும், பூராடம் நான்கு பாதங்களும் என்றும் அனுபவிக்காத பரம சந்தோஷத்தை அடையச் செய்யும், உத்திராடம் முதல்பாதம் இல்லறத் தொல்லைகளுடன் லாபத்தையும் உத்தியோக மேன்மையையும் தந்து சந்தோஷம் அடையச்செய்யும். திங்கள் புதன் சுபவாரமாகும்.

10. **மகரம்:** உத்திராடம்¾, திருவோணம், அவிட்டம் ½

மகரராசி ஒன்பது பாதங்களும் மங்களத்தைக் கொடுக்கும் விவாகாதி சுபங்கள் உத்தியோக லாபம், நஷ்டதன பிராப்தி, எங்கும் புகழ் விவகார வெற்றி, கீர்த்திப் பத்திரம் கிடைத்தல் முதலிய சந்தோஷங்களைத் தரும், வெள்ளியும், சனியும் சுபவார மாகும்,

386

**11. கும்பம்:** அவிட்டம் ½ சதயம், பூரட்டாதி ¾.

கும்பராசி ஒன்பது பாதங்களும், உழைப்பின்பேரில் மேலான பதவிகளைத்தரும், சுகபோகங்கள் கிட்டும், அடிக்கடி உல்லாசப் பிரயாணம் சித்திக்கும், சுபம்ஓங்கும், சனி செவ்வாய் நலன் தரும்.

**12. மீனம்:** பூரட்டாதி ¼, உத்திரட்டாதி, ரேவதி.

பூரட்டாதி நாலாம்பாதம் மாத்திரம் சுபமிராது. மற்ற இரு நக்ஷத்திர பாதங்கள் எல்லாம் என்றும் கண்டிராதபடி சந்தோஷத்தைப் பலவிதத்திலும்உண்டுபண்ணிப் பரமாநந்தத்தில் மூழ்கிச் சத் சந்தோஷங்களையே தரும், மங்களமுண்டாகும். வெள்ளியும் ஞாயிறும் சுபவாரமாகும்.

குறிப்பு;- உலகெலாம் செழித்து தனதான்யங்களுடனும், பிரஜைகள் சந்தோஷத்துடனும் வாழ்வார்கள். துவீபாந்தர வாசிகளும் வடதேசமும் கொஞ்சம் அமைதிக்குறைவால் சிரமத்தை அனுபவிக்கும், தெய்வபலமுள்ள தேசம் ரக்ஷிக்கப்படும்.

---

## மதவழிபாட்டுக்குத் தடையில்லை

டாக்டர். திரு. ஏ. லக்ஷ்மணசாமி முதலியார் அவர்கள்

இந்தியா மதச்சார்பற்ற நாடு. ஆனால், அதற்காகமதத்துக்கு இந்நாட்டில் இடமில்லை என்று கருதுவது தவறு. ஒரு குறிப்பிட்ட மதத்துக்குமட்டும் அரசாங்கம் அங்கீகாரமோ ஆதரவோ அளிப்பதற்கில்லை. மக்கள் தங்கள் தங்களுடைய மத வழிபாட்டில் ஈடுபடுவதை அரசாங்கம் தடுக்கவில்லை. மதத்துறையில் சகிப்புத்தன்மை என்பது நம்நாட்டில் இருப்பதுபோல் வேறு எங்கும் கிடையாது. மத உணர்ச்சியை இளைஞர்களிடம் பிரசங்கங்கள்மூலம் புகுத்தமுடியாது. ஞானிகளின் உபதேசங்கள், வாழ்க்கை முறை முதலியவற்றை எடுத்துக் காட்டுவதன் மூலம்தான் மத உணர்ச்சியை ஏற்படுத்த முடியும்.

—சுதேசமித்திரன், 8—3—55.

# ஆதீனத்திலும் ஆதீன தேவஸ்தானங்களிலும்

## குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ அடிகளார் எழுந்தருளல்

தமிழ்நாடெங்கும் சைவ உணர்ச்சியைத் தட்டி எழுப்பி வரும் குன்றக்குடி அடிகளார் அவர்கள் ஈழ நாடுகளில் சென்று சமய உணர்ச்சியைப் பரப்பி வருதற்குச் சென்ற திங்களில் பாராட்டு நிகழ்த்தி வழியனுப்பியது போலவே, அடிகளார் அவர்கள் ஈழ நாட்டுச் சுற்றுப்பயண மீட்சி விழாவையும் ஆதீனக் கீழைக்கலைக் கல்லூரி சிறப்பாகக் கொண்டாடியது.

29—3—55 செவ்வாய்க்கிழமையன்று ஸ்ரீலஸ்ரீ அடிகளார் அவர்கள் திருமடத்திற்கு எழுந்தருளி ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் பூசனைவேளையில் வந்து வழிபட்டார்கள். சுமார் நடுப்பகல் 11 மணிக்குக் கல்லூரிமன்றத்தில் விழா தொடங்கியது. அன்று இன்னும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது, திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களின் எதிர்பாராத வருகை.

முன்னே கல்லூரி முதல்வர் திரு. ய. மகாலிங்க சாஸ்திரி அவர்களும், மாற்றும் முதல்வர் திரு. கி இராமலிங்க முதலியார் அவர்களும் ஸ்ரீலஸ்ரீ அடிகளாரை வரவேற்றுப் பேசினார்கள். அடிகளார் அவர்கள் தம் பேச்சுக்கு முன்னே திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களைப் பேச அழைத்தார்கள். பின்பு வாரியார் அவர்கள் மாணாக்கர்களுக்கு அறிவுரை பகர்ந்தார்கள்.

அடுத்து ஸ்ரீலஸ்ரீ அடிகளார் அவர்கள் அருள் உரையில் ஈழநாட்டின் சமயநிலை மாண்பையும், தவ ஒழுக்க மேன்மையையும், தமிழ்நாட்டு மக்கள் கடமையையும் விளக்கியருளினார்கள்.

388.

நன்றி உரை தமிழ்ப்பேராசிரியர், புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் கூறினார்கள். அடிகளாரது மேலைநாட்டு யாத்திரையைப் பாராட்டி, வாழ்க, வெல்க என வாழ்த்தி முடித்தார்கள். இறைவாழ்த்துடன் கூட்டம் இனிது முடிந்தது. தருமபுர ஆதீனம் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களால் புகைப்படம் எடுக்கப்பெற்றது. மாலை 3-30 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ அடிகளார் அவர்கள் எழுந்தருளியானார்கள்.

## திரு. ஆ. கஜபதி நாயகர் வருகை
## 7—3—55

தமிழ் ஆட்சிமொழி ஆதற்குச் சட்டமன்றத்தில் அரும்பாடு பட்டுவரும் அறிஞர் திரு. ஆ. கஜபதி நாயகர் அவர்கள் தருமைக் கல்லூரிக்கு வந்தது குறிப்பிடத்தக்கது. திரு. ஆ. கஜபதி நாயகர் அவர்கள் தமிழின் நலத்தைப் பற்றியும், இனிமையைப் பற்றியும், அது ஆட்சி மொழி ஆவதன் இன்றியமையாமை பற்றியும் விரிவுரையாற்றினார்கள். அன்றியும், திருக்குறளின் பல குறட்பாக்களை விளக்கி நல்லுரையாற்றினார்கள். முதலில் கல்லூரி மாற்றும் முதல்வர் திரு. கி. இராமலிங்க முதலியார் அவர்கள் திரு. ஆ. கஜபதி நாயகர் அவர்களை வரவேற்றார்கள், பிறகு நன்றியுரையோடு கூட்டம் இனிது முடிந்தது.

## கலைமகள் கழக ஆண்டு விழா

தருமபுர ஆதீன வேத சிவாகம பாடசாலையின் கலைமகள் பேச்சுப் பயிற்சிக் கழக மூன்றாவது ஆண்டு விழா 14—3—55 திங்கட்கிழமை மாலை 4 மணிக்குத் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் துவங்கிற்று. மாணவர்கள் திரு. S. கணேசன், திரு. V. கணபதி, திரு. V. இராமநாதன் ஆகியோர் ஜடை கானம் செய்தார்கள். பின்னர் பல்கலைக்கல்லூரி முதல்வர் பிர்மஸ்ரீ. ய. மகாலிங்க சாஸ்திரி அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்கள்.

பிறகு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தொடக்கவுரையாகக் கூறுகையில், "மாணவர்களுக்கு உண்மையான தெய்வ வழிபாடு வேண்டும் என்றும்; அர்ச்சகர்கள் முக்கியமாக அன்பு, பக்தி, ஆகமநெறிஇவைகளுடன் உலகிற்குப்பணியாற்றவேண்டுமென்றும்; ஆகம நெறிப்படி நடக்கவேண்டுமென்றும்; மாணவர்

களுக்குப் பாஷாத் துவேஷம் இருக்கக் கூடாதென்றும்; இவ் ஆதீனத்தில் இரு மொழிகளும் இரு கண்களாக வளர்க்கப் பெறுகின்றன என்றும் கூறினார்கள்''. அடுத்து செயலாளர் திரு. V. சுந்தரேசன் ஆண்டறிக்கையை வாசித்தார். அவர் இக் கழகத்தில் வாரமொரு நாயன்மார்களைப்பற்றிப் பேசுவதாகவும் குறிப்பிட்டார்.

பின்னர் விழாத் தலைவராக அமைந்த மாயூரம் தேசிய உயர்நிலைப்பள்ளி உதவி ஆசிரியர் பிரம்மஸ்ரீ. S. K. நாராயண சாஸ்திரி B.A., B.T., அவர்கள் கழகங்களின் முக்கியத்தையும் இவ்வாதீனப் பணிகளையும் மக்கள் ஆஸ்திகர்களாக வேண்டிய தின் அவசியத்தையும் வலியுறுத்தினார்கள். அடுத்து பல்கலைக் கல்லூரி மாற்றும் முதல்வர் திரு. கீ. இராமலிங்க முதலியார் அவர்கள் "ஆலயங்கள்" என்பதுபற்றிப்பேசுகையில் பண்டைக் காலத்திற்கும் இக்காலத்திற்கும் உள்ள வேறுபாட்டை எடுத் துரைத்தார்கள். அடுத்து திரு. V. சம்பந்தம் "சமயச் சின்னங் கள்" என்பதுபற்றியும், திரு. S. கணேசன் "மகான்கள்" என்பதுபற்றியும் சம்ஸ்கிருதத்தில் அனைவர்க்கும் புரியுமாறு சிறப்பாகப்பேசினார்கள். பின்பு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் ஆண்டுவிழாவையொட்டி நடந்த ஆகமபரீக்ஷை, வேதப்பரீக்ஷை முதலியவைகளில் வெற்றிபெற்றோர்க்குப் பரிசுப் புத்தகங்களை வழங்கினார்கள்.

விழாவிற்கு ஸ்ரீகாசிவாசி ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள், அவர்கள் வித்துவான், சேனாதிபதி முதலியவர்கள் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியுள்ளார்கள். கடைசியாகக் கழகத் தலைவரும், தலைமையாசிரியருமான சிவஸ்ரீ S. சுவாமிநாத சிவாசாரியார் அனைவருக்கும் நன்றி கூறினார். பின்னர் இறை வாழ்த்துடன் விழா முடிவு பெற்றது.

## கல்லூரியில் சிறப்புக்கூட்டம்

ஆதீனக் கீழைக் கலைக்கல்லூரியில் 31—3—55 வியாழக் கிழமை அன்று சிறப்புக்கூட்டம் நடைபெற்றது. கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்களும் சென்னைப் பல் கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சியாளர் திரு. புருஷோத்தம நாயுடு அவர்களும் கோபுராஜபுரம் திரு. K. A. சுப்புராய பாரதி அவர்களும் கல்லூரி மாணாக்கர்க்கு அறிவுரை கூறினார்கள்.

## ஏகதின லக்ஷார்ச்சனை

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் ஸ்ரீ தர்மபுரீசுவரர் ஆலயத்தில் திருக்கோயில்கொண்டு எழுந்தருளி அருள் வழங்கும் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மீ துர்க்காதேவிக்கு, ஜயவுரு பங்குனிமீ 19உ (1—4—55) வெள்ளிக்கிழமை, காலை தொடங்கி ஏகதின லக்ஷார்ச்சனை நடைபெற்றது. விசேஷ அபிஷேக ஆராதனைகளும் நடைபெற்றன.

## ஜென்மநக்ஷத்திர அபிஷேக ஆராதனை

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்மநக்ஷத்திர நாட்களில் திருப்பதிகம்பெற்ற சிவத் தலங்களில் ஆதீனச் சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப்பதிகத்தையும் அச்சிட்டு வழங்கி வருதல்போல, இம் மாதத்திலும் 7—4—55 வியாழக்கிழமை திருவிளமர் பதஞ்சலி மனோகரப்பெருமான் சுவாமி ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் ஆதீனச்சார்பில் செய்விக்கப்பெற்று ஆதீன வெளியீடாக அச்சிட்ட திருவிளமர் திருப்பதிகம் என்ற ஆதீனவெளியீட்டை வழங்கி அன்பர்களைக்கொண்டு பண்முறைப்படி பதிகம் முழுவதும் பாராயணமாக ஓதச் செய்யப்பட்டது.

## தருமபுர ஆதீன சமயப் பிரசாரம்

கீழப் பெரும்பள்ளத்தையும் காவிரிப்பூம்பட்டணத்தையும் அடுத்துள்ள நாகநாதர் கோவிலுக்கு 19—3—55 அன்று ஆதீன சமயப் பிரசாரக் குழுவினர் சென்றனர். அங்கு அன்று நாகநாதர் விழாவின் இரண்டாம்நாள் தருமை கீழைக்கலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் திரு *K.* முருகையாப்பிள்ளை *B. A., L. T.* அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். கீழப் பெரும் பள்ளம், கழக உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்கள் திரு. ச. சண்முகம், வடிவு இருவரும் பேசினார்கள். தருமை ஆதீனக் கல்லூரி மாணவர்கள் இராமசாமி, பாண்டுரங்கன், தியாகராசன், நடராசன் ஆகிய நால்வரும், ஆதீன அடியார் குழாத்துள் ஒருவராகிய திருக்குறுக்கைக் கட்டளை விசாரணை, சிவத். திரு. முத்துக்குமரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் மெய்ப்பொருள் நாயனார் வரலாறு குழவியும், இழவியும் என்ற தலைப்புகளில் பேசி எல்லோரையும் மகிழ்வித்தனர்.

நகரங்களைவிட சிறுஊர்களில் சைவப் பெருமக்கள் சமயத்தில் எவ்வளவு பற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அந்த ஊரில் கூடிய திரளான கூட்டம் நமக்கு அறிவிக்கிறது. ஊர்ப் பிரமுகர்களும் கோவில் டிரஸ்டிகளும் நன்றி கூறினார்கள்.

## (வேளூர்) வைத்தீஸ்வரன்கோயில்
## பிரமோற்சவத் திருநாள்

ஆதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்தில் நடைபெற்ற பிரமோற்சவத்தை முன்னிட்டு திருமுறைவிழா நாடோறும் நடைபெற்றது. ஸ்ரீ வாலாம்பிகை அம்மையார் சமேத ஸ்ரீ வைத்தியநாதப்பெருமான் திருவிழா 27—3—55 தொடங்கி 5—4—55 வரை நடைபெற்றது.

திருமுறை விழாத் தொடக்கம்:- 27—3—55 ஞாயிற்றுக் கிழமை மாலை 4-30 மணிமுதல். தலைவர்; பல்கலைச்செல்வர், வித்துவான், திரு. T. P. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் M. A. B. L., (தமிழ்த்துறைத் தலைவர், அரசினர் கல்லூரி, சென்னை.) திருமுறை விழாத் திறப்புரை: சொல்லின் செல்வர், திரு. *R. P.* சேதுப்பிள்ளை அவர்கள் **B. A., B. L.,** (தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர், பல்கலைக்கழகம், சென்னை.)

சொற்பொழிவாளர்: திரு. *C* இராமலிங்கம்பிள்ளை **M. A.,** அவர்கள் (தத்துவப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர்.) 'பெம்மான் இவன்' சைவசித்தாந்த வித்தகி, ஸ்ரீமதி ஈசுரவடிவு அம்மையார் அவர்கள் 'மங்கை பங்கர்' வித்துவான், திரு. தி. பட்டுசாமி ஓதுவார் அவர்கள் (தலைமைத் தமிழாசிரியர், பொன்னையா உயர்நிலைப்பள்ளி, திருச்சி.) 'அந்தணர் பிரியாத சிற்றம்பலம்' வித்துவான், திரு. வெள்ளைவாரணனார் அவர்கள் (தமிழாராய்ச்சிப் புலவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்) 'நெஞ்சம் உமக்கே இடம்' முடிவுரை.- தலைவர் நன்றிகூறல். தருமையாதீனத் தேவாரப் பாடசாலை மாணவர்களால் இன்னிசைக் கருவிகளுடன் திருமுறைகள் ஓதப்பெற்றது.

இரவு 8 மணிக்கு இசை நிகழ்ச்சி:- திருவனந்தபுரம், திரு. *M. A.* கல்யாணகிருஷ்ண பாகவதர் அவர்கள்—பாட்டு.

(கர்நாடிக் மியூஸிக் காலேஜ் லெக்சரர்.) திரு. T. S. சம்பந்தம் பிள்ளை அவர்கள்—பிடில். (தலைமையாசிரியர், இசைக்கல்லூரி, தருமபுரம்.) திரு. R. விசுவநாத ஐயர் அவர்கள்—மிருதங்கம். (மிருதங்க ஆசிரியர், இசைக்கல்லூரி, தருமபுரம்.)

28—3—55 திங்கட்கிழமை மாலை 4 மணிமுதல் தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தப் பெரும்புலவர், வித்துவான், திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள் (தலைமைத் தமிழா சிரியர், நகராண்மை உயர்நிலைப்பள்ளி, நுங்கம்பாக்கம்.) 'அன்னம் பாலிக்கும் தில்லை' சைவசித்தாந்தவித்தகி ஸ்ரீமதி ஈசுவரவடிவம்மையார் அவர்கள் 'பேசாதநாள் பிறவாநாள்' குகஸ்ரீ திருமுருக கிருபாநந்த வாரியார் அவர்கள் 'மணிவாசகர்'

29—3—55 செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிமுதல் வித்துவான், திரு. ச. சேது சுப்பிரமணியப்பிள்ளை அவர்கள் (தமிழ்ப் பேராசிரியர், பல்கலைக்கல்லூரி, தருமபுரம் 'மறவாதே நினை' தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தப் பெரும் புலவர், வித்துவான், திரு. வை. குஞ்சிதபாதம்பிள்ளை அவர்கள் (தலைமைத்தமிழாசிரியர், நகராண்மை உயர்நிலைப்பள்ளி, நுங்கம் பாக்கம்) 'நமச்சிவாய வாழ்க' குகஸ்ரீ. திருமுருக, கிருபாநந்த வாரியார் அவர்கள் 'வந்தியும்—நந்தியும்'.

இரவு 8 மணிக்கு இசை நிகழ்ச்சி, இசைமன்னர் சங்கீத கலாநிதி, சித்தூர், திரு. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள்—பாட்டு. (இசைக்கல்லூரி தலைமையாசிரியர், அண்ணாமலைநகர்.) திரு. T. S. சம்பந்தம்பிள்ளை அவர்கள்—பிடில், (தலைமை ஆசிரியர், இசைக்கல்லூரி' தருமபுரம்.) சித்தூர், மாஸ்டர். திரு. சாமசுந்தர் அவர்கள்—மிருதங்கம் திரு. R. விசுவநாதஐயர் அவர்கள்—கெஞ்சுரா (மிருதங்க ஆசிரியர், இசைக்கல்லூரி, தருமபுரம்.)

30—3—55 புதன்கிழமை மாலை 4 மணிமுதல் பெருஞ்சொற் கொண்டல், முத்தமிழ் வள்ளல், புரிசை, திரு. சு. முருகேச முதலியார் அவர்கள் 'அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனி" வித்துவான், திரு. G. சுப்பிரமணியப்பிள்ளை M. A., B. L., அவர்கள் (தமிழாராய்ச்சித்துறைத் தலைவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.) 'பிறவியறுக்கும் நெறி,

திரு. க. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள் (சென்னை.) 'ஆலவாய்ச் சிவன்' திரு. கி. இராமலிங்கம் M. A. அவர்கள் (மாற்றும் முதல்வர், தருமையாதீனக் கல்லூரி,) 'திருஞான சம்பந்தர்'.

31—3—55 வியாழக்கிழமை மாலை 4 மணி முதல் பெருஞ் சொற்கொண்டல் முத்தமிழ்வள்ளல், புரிசை திரு. சு. முருகேச முதலியார் அவர்கள் 'குருவே சிவம்'. வித்துவான், திரு. பா. து. கண்ணப்பமுதலியார் அவர்கள் (தமிழ் விரிவுரையாளர், புதியகல்லூரி, சென்னை.) 'அன்பு அருது என்நெஞ்சு அவர்க்கு' வித்துவான், பண்டித, திரு P. R. புருஷோத்தம நாயுடு அவர்கள் (ஆராய்ச்சிப் புலவர், பல்கலைக்கழகம், சென்னை) 'நிறைகுணத்தவன்'.

இரவு 9 மணிமுதல் இசைநிகழ்ச்சி: திருக்கோயிலூர். ஸ்ரீமதி அலமேலு புஷ்பா அவர்கள்—பாட்டு. மாயூரம், திரு. பாலுபிள்ளை அவர்கள்—பிடில், குத்தாலம், திரு. R. விசுவநாத ஐயர் அவர்கள்—மிருதங்கம்.

1–4–55 வெள்ளிக்கிழமை மாலை 4 மணிமுதல் வித்துவான். பண்டித. திரு. P. R. புருஷோத்தமநாயுடு அவர்கள் (ஆராய்ச்சிப்புலவர், பல்கலைக்கழகம், சென்னை.) 'பூபாரம் தீர்த்தபுனிதன் தருமபுர ஆதீனப் புலவர், சித்தாந்தரத்நாகரம். வித்துவான், திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார் அவகள் (தமிழ்ப் பேராசிரியர், பல்கலைக்கல்லூரி, தருமபுரம், 'திருநாவுக்கரசர்' வித்துவான், திரு. பா. து. கண்ணப்ப முதலியார் அவர்கள் (தமிழ் விரிவுரையாளர், புதிய கல்லூரி, சென்னை.) 'என்றும் இன்பம் பெருகும்' திரு க. சோமசுந்தரஞ்செட்டியார் அவர்கள் (சென்னை) 'உலகெலாம் மலர் சிலம்படி'.

இரவு 8 மணிமுதல் இசை நிகழ்ச்சி:- ஸ்ரீமதி கௌரிகுமாரி அவர்கள்—வீணை (வீணை ஆசிரியர். இசைக்கல்லூரி, அண்ணுமலைப் பல்கலைக்கழகம் அண்ணுமலைநகர்.) மாஸ்டர். திரு. சாம சுந்தர் அவர்கள் – மிருதங்கம்.

2—4—55 சனிக்கிழமை ஆழியூர், ஸ்ரீமதிகள், குஞ்சுமணி & பேபி நீலா—புல்லாங்குழல், திரு. சசிதர்ராவ் அவர்கள்—பிடில், ஆழியூர், திரு. நடேச ஐயர் அவர்கள்—மிருதங்கம்.

 394

5—4—55 செவ்வாய்க்கிழமை தருமபுர ஆதீனப் புலவர், மகா வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் (ஆராய்ச்சிப்புலவர், அண்ணமலைப் பல்கலைக்கழகம், அண்ணமலைநகர் 'மங்கையர்க்கரசியம்மை' வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் அவர்கள் (தமிழாசிரியர், பல்கலைக்கல்லூரி, தருமபுரம்) 'காரைக்காலம்மை' வித்துவான், திரு. வி. சா. குருசாமி அவர்கள் (தமிழாசிரியர், பல்கலைக்கல்லூரி, தருமபுரம்) 'திலகவதியம்மை' திரு. வேலாயுத ஓதுவார் அவர்கள் (ஆசிரியர் தேவாரப் பாடசாலை, தருமபுரம்) 'சுந்தரர்'

இரவு 8 மணிமுதல் இசை நிகழ்ச்சி சென்னை திரு. V. V. சடகோபன் அவர்கள் & குழுவினர்.

## திருபுவனத்தில் உருத்திரபாதத் திருநாள்

தருமபுரம் ஆதீனத்துக்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் உருத்திரபாதத்திருநாள் மிகச்சிறப்பாக நடைபெற்றது. திருவிழா; 27-3-55முதல் 5—4—55 வரையில் பத்து நாட்கள். திருவிழா நாட்களில் திருமுறைவிழாச் சொற்பொழிவுகளும் திருமுறை மாநாடும் நடைபெற்றது.

திருமுறை விழாச் சொற்பொழிவுகள், 27—3—55 ஞாயிற்றுக்கிழமை வித்துவான், திரு. மு. நடராச தேசிகர் அவர்கள், (தமிழாசிரியர், திருவாவடுதுறை ஆதீனம் உயர்நிலைப்பள்ளி' திருவிடைமருதூர்-) 'திருமுறைப் பெருமை'

28–3–55 திங்கட்கிழமை மாலை 4 மணிமுதல், வித்துவான், திரு. பொன். சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் (தலைமைத் தமிழாசிரியர், திருவாவடுறை ஆதீனம் உயர்நிலைப்பள்ளி, திருவிடைமருதூர்.) 'கோயில் வழிபாடு'

29-3-55செவ்வாய்க்கிழமை மாலை 4மணிமுதல் வித்துவான், ஸ்ரீ கே. எம். வேங்கடராமையா M. A., B. O. L., அவர்கள், (கல்லூரி பிரின்ஸிபால், ஸ்ரீ காசிவாசி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்,) 'வாகீசர் வாய்மைநெறி'

30—3—55 புதன்கிழமை மாலை 4 மணிமுதல் வித்துவான், திரு. பா. மகாலிங்க தேசிகர் அவர்கள், (தமிழாசிரியர். திருவாவடுதுறை ஆதீனம் உயர்நிலைப்பள்ளி, திருவிடை மருதூர்.) 'அடியார் பெருமை'

31—3—55 வியாழக்கிழமை மாலை 4 மணிமுதல், திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள். (தமிழாராய்ச்சிப் புலவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.) 'சோழர் திருப்பணிகள்'

3–4–55 ஞாயிற்றுக்கிழமை காலை 9-மணி முதல் திருமுறை மாநாடு, தலைவர், வித்துவான். திரு. G. சுப்பிரமணியப் பிள்ளை M. A., B. L., அவர்கள்- (தமிழாராய்ச்சித் துறைத் தலைவர், அண்ணாமலைப்பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர்.) 'முதல் திருமுறை-திருப்பதிகங்கள் 1-30' பேசுவோர், வித்துவான், திரு. க. வெள்ளைவாரணனார் அவர்கள், தமிழாராய்ச்சிப்புலவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர். '31–60' வித்துவான், திரு, மு. அருணாசலம் பிள்ளை அவர்கள், (தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப்பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.) '61–90' மகாவித்துவான், திரு. ச, தண்டபாணி தேசிகர் அவர்கள் (தமிழாராய்ச்சிப்புலவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.) '121–136' திரு. சி. இராமலிங்கம் M. A. அவர்கள், (தத்துவப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.) 'இரண்டாவது திருமுறை–திருப்பதிகங்கள் 1–30' வித்துவான், திரு. ந. சிவப்பிரகாச தேசிகர் அவர்கள் (தலைமைத் தமிழாசிரியர், பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி, சிதம்பரம்.) '31–60' வித்துவான், திரு ஈ. எஸ், வரதராச அய்யர், B. A. அவர்கள் (தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர். '61–90' வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் அவர்கள், (தமிழ்ப்பேராசிரியர், ஆதீனக் கீழைக்கலைக் கல்லூரி, தருமபுரம்.) '91–122' வித்துவான், திரு. ச. சேது சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள். (தமிழ்ப்பேராசிரியர், ஆதீனக்கீழைக்கலைக்கல்லூரி தருமபுரம். 'மூன்றாவது திருமுறை திருப்பதிகங்கள் 1-30' திரு. கீ. இராமலிங்கம் M.A. அவர்கள் (மாற்றும்முதல்வர், ஆதீனக் கீழைக்கலைக் கல்லூரி, தருமபுரம்) '31-60' தருமபுர ஆதீனப் புலவர், சித்தாந்த ரத்நாகரம்

வித்துவான், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் (தமிழ்ப் பேராசிரியர், ஆதீனக் கீழைக்கலைக் கல்லூரி, தருமபுரம். ·91-125' வித்துவான், திரு. வி. சா. குருசாமி அவர்கள் (தமிழ்ப்பேராசிரியர், ஆதீனக் கீழைக்கலைக் கல்லூரி, தருமபுரம்) 'திருமுறைப் பெருமை' வித்துவான், ஸ்ரீ S. T. ஸ்ரீனிவாசாசாரியார் M. A. L. T., அவர்கள் (பிரின்ஸிபால், அரசர்கல்லூரி, திருவையாறு.) இரவு 8-மணிமுதல் 'சத்கதா காலக்ஷேபம்' இது எல்லோரையும் பரவசப்படுத்தியது.

இரவு 7 மணிக்கு வெள்ளிமஞ்சத்தில் அலங்காரங்களுடன் திருமுறை ஊர்வலம் நடைபெற்றது. ஆதீனத் தேவாரப்பாடசாலை ஆசிரியர் மாணவர்களால் இன்னிசைக் கருவிகளுடன் தேவார இன்னிசை நிகழ்ந்தது. ஆதீனத் தேவாரப் பாடசாலைத் தேவார ஆசிரியர் திரு. வேலாயுத ஓதுவாமூர்த்தி அவர்கள் இடை யிடையே திருமுறைப் பாடல்களுக்கு விளக்கங்கள் கூறினர்.

4—4—55 திங்கட்கிழமை வித்துவான், திரு. வை. மு. சண்முக தேசிகர் அவர்கள் (தலைமைத் தமிழாசிரியர், நேஷனல் ஹைஸ்கூல், நாகை) 'சைவ நெறி'

5—4—55 செவ்வாய்க்கிழமை திருக்கருகாவூர், திரு. வே. சிவஞானம் அவர்கள் (தருமையாதீன சமயப்பிரசாரத் தொண்டர்) 'சிவக்கோலம்' வித்துவான், திரு. சுந்தரேசம் பிள்ளை அவர்கள் (தமிழ்ப்பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்) 'உயிர்த் துணை' வித்துவான், திரு. பரசுராமன் அவர்கள் (தமிழாசிரியர், டவுன் ஹைஸ்கூல், குடந்தை).

## திருக்குவளையில்

ஆதீனத்துக்குச் சொந்தமான திருக்குவளை ஸ்ரீ தியாகராஜ சுவாமி தேவஸ்தானத்தில் நெல் மகோற்சவம் 6—3—55 ஞாயிறு முதல் 9—3—55 புதன்கிழமை முடிய நடைபெற்று நிறைவுற்றது' திருவிழா நாட்களில் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன,

6—3—55 ஞாயிறு அன்றுமாலை 6-மணிக்கு திருவாரூர் நாட்டாண்மைக் கழக உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான் திரு. மு. இரத்தின தேசிகர் அவர்கள் 'கொடுக்கிலா வரம் கொடுக்கும் கோளிலி' என்னும் தலைப்பில் சொற்பொழி வாற்றினுர்கள். 7—3—55 திங்கள் மாலை 6-மணிக்கு ஷை பள்ளி ஆசிரியர் திரு. சிவ. சிவராஜப்ப முதலியார் அவர்கள் கூத்தன் கோளிலி ஏத்த இடர்கெடும்' என்னும் தலைப்பில் பேசினுர்கள். 7-மணிக்கு திரு. T. N. சிவசுப்பிரமணிய பிள்ளை அவர்கள் குழு வினர் இசை விருந்தளித்தனர். 8—3—55 செவ்வாய் மாலை 6-மணிக்கு ஷை பள்ளித் தமிழாசிரியர் வித்துவான், திரு. M. இராசகோபாலப் பிள்ளை அவர்கள் 'நீள நினைந்து நித்தலும் கைதொழு' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றினுர்.

## மத உணர்ச்சியின் அவசியம்

ஸ்ரீ ராஜாஜி அவர்கள்

மதச்சார்பற்றநாட்டில் மதத்தை உதாசீனம்செய்யவேண்டு மென்றோ அல்லது மதத்தை எதிர்க்க வேண்டுமென்றோ எவ ரொருவரும் நினைக்கவேண்டாம். பாரபட்சமற்ற மனப்பான் மையை மத விஷயத்தில் அரசாங்கம் மேற்கொள்ளும் என்பது தான் மதச்சார்பற்ற நாட்டின் பொருள். அதனுல்தான் கல்வி ஸ்தாபனங்களில் மத போதனை அளிப்பதில் அரசாங்கத்துக்குக் கஷ்டம்ஏற்படுகிறது. சர்க்காரைக் குற்றங்கூறுவதில் பயனில்லை. மத குருக்கள், ஆஸ்திக மக்கள் ஆகியோர்தான் இவ்விஷயத்தில் அக்கரை எடுத்துக்கொள்ளவேண்டும்.

—சுதேசமித்திரன், 8—3—55.

# தருமைக் குருமகாசந்நிதானத்தின் தமிழ்க்கொடை

ஆண்டுதோறும் தருமபுர ஆதீனம் இருபத்தைந்தாவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள் அவர்கள் மாயூரம் நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் *S. S. L. C.* பொதுத்தேர்வில் தேர்ச்சிபெறும் மாணவர்களுக்குள் தமிழில் முதல் மதிப்பெண்பெறும் மாணவருக்குத் தங்கப் பதக்கம் ஒன்று வழங்கி வருகின்றார்கள். இவ்வருடம் (26-3-55) மாயூரம் நகராட்சி உயர்நிலைப்பள்ளி ஆண்டுவிழா தஞ்சை ஜில்லா கலெக்டர் ஸ்ரீ. *C. A.* ராமகிருஷ்ணன் *M.A., I.C.S.,* அவர்கள் தலைமையில் நடைபெற்றது.



அவ்வமயம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருவுள்ளத்தின் வண்ணம் குறுக்கை தேவஸ்தானம் கட்டளை விசாரணை ஸ்ரீமத் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் பதக்கத்தை அளித்தார்கள். அப்பொழுது எடுக்கப் பெற்ற இப்படத்தில் ஸ்ரீமத் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் பேசுவதையும், அருகில் தலைமை ஆசிரியர் தஞ்சை ஜில்லா கலெக்டர், முதலியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம். புகைப்படம் : ஸ்ரீ என். ராமகிருஷ்ண அவர்கள்.

# மதிப்புரை

Shakespeare on Sivananda by Swami Omkarananda.
Rs. 1—0—0

Swami Omkarananda in steeped in shakespeare and an ardent young disciple of Swami Sivananda. He finds by a stretch of the imajination that shakespear's moral ideals and philosophical dicta become exemplified in the life and conduct of his Guruji. He has made an elaborate analysis of the great and admirable trait of his Guruji and has tried to document them with quotations from Shakespeare. Quaint as the method is, it is admirably pursued and undoubtedly speaks volumes about the writers' mastery of the English dramatist entire works as well as of his penetrating study of the unplumbable spiritual profundities of his greate Master. The quotations are implemented in a dexterous way to describe the dazzling personality of Swamiji and the eloquence and imagination of Shakespeare seem to aid the language to soar high enough to fulfil the difficult task The reader will not fail to congratulate the writer on his ingenious device.

Swami Satyananda. His life and work. (Edited by swami) Sivananda--Krishnananda Rs. 1—8—0

This is the thirtyfirst birth day souvenir of Swami Satyananda. Many eminent men have in their appreciations tried to illuminate his spiritual personality Swami Satyananda s a young man moulding his life on the patern of an upanishadic Rishi, of him Swami Sivanandaji Says "few would have such Vairagya at such a young age Swami satyanandajs is full of the Nachiketas element.........He is a versatile geniui and a linguist too......... an ideal Sadhak and Nishkamya Sevak. He is a pillar of the Divine life mission" The collection of the felicitations contains both the English and the Hindi seetions

## இரண்டாந் திருமுறைபற்றிய மதிப்புரை

# திருஞானசம்பந்தர்

"திருஞானசம்பந்த மூர்த்தி நாயனர் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள் இரண்டாவது திருமுறை தருமபுர ஆதீனம் குருமகாசந்நிதானத்தின் திருவருள் ஆணையால் வெளியிடப்பட்டது. பதிப்பாசிரியர் வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், தலைவர், தருமபுரஆதீன சமயப் பிரசார நிலையம் சென்னை 17. குறிப்புரை ஆசிரியர் தருமபுர ஆதீனப் புலவர் வித்துவான், திரு. முத்து, சு. மாணிக்கவாசக முதலியார். முன்னுரை 40 பக்கங்கள் தலங்களின் அட்டவணையும் வரலாற்றுக் குறிப்பும் 185 பக்கங்கள், திருப்பதிகங்கள் 596 பக்கங்கள். விலை ரூ. 5. மானேஜர், தருமபுர ஆதீனம். தருமபுரம், மாயூரம் போஸ்ட்.

ஆண்டவனைக் கண்டு களித்த பெரியோர்கள் தம்மோடு உலகும் உய்யவேண்டுமென்னும் பெருநோக்குடன் அருளிய மொழிகளே திருமுறைகள். இத் திருமுறைகளைப்பாடி நாட்டையும் மக்களையும் மொழியாலும் இசையாலும் பிணித்து அதன் மூலம் சைவத்தை வளர்த்துப் பாதுகாத்தவர்களில் திருஞானசம்பந்தர் சிறந்து விளங்கும் ஒருவர். இவருடைய திருமுறைகளை மக்கள் பொருளுணர்ந்து ஓதவேண்டுமென்னும் அவாவினல் 1953-ம் ஆண்டு ஞானசம்பந்தர் திருப்பதிகங்களின் முதல் திருமுறை குறிப்புரைகளுடன் வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து இப்போது இரண்டாம் திருமுறை வெளியிடப்படுகின்றது இத் திருமுறைக்குக் குறிப்புரை எழுதியுள்ள மாணிக்கவாசக முதலியார் அவர்கள். பெரும்புலவர், ஆராய்ச்சியாளர், சைவசித்தாந்த சாஸ்திரப் பயிற்சி மிகுந்தவர். இலக்கண நூற்புலமையுடையவர். வடநூலறிவும் தருக்க நூற்புலமையும் பெரிதும் உடையவர். அவருடைய உரை நம் ஞானசம்பந்தரின் மொழிகளின் உட்பொருளைக் கிரகிக்கப் பெரிதும் உதவுகிறது. மிகக்கவனமாகச் செய்யப்பட்டுள்ள இவ் வேலைக்காக அவர்களைப் பாராட்டுகிறோம்."

—சுதேசமித்திரன், 3—4—55.

Regd. No. M. 4454. GNANASAMBANDAM


தருமபுர ஆதீன வெளியீடு: 317

# திருஞானசம்பந்தர் தேவாரம்

## இரண்டாவது திருமுறை

திருவாவடுதுறை ஆதீனம் இருபத்தொன்றாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளிய பாராட்டுரை கொண்டது.

ஆதீனப்புலவர், சித்தாந்த ரத்நாகரம், வித்துவான், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் எழுதிய ஆராய்ச்சிக் குறிப்புரையும். இத்திருமுறையில் வந்துள்ள தலங்களைப்பற்றிய புராணவரலாற்றோடு கூடிய கல்வெட்டு ஆராய்ச்சிக் குறிப்புக்களும் அமைந்துள்ளன. அற்புதச் செயல்களைக்காட்டும் படங்களும், கோயிற்படங்களும், பிறவும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

டிம்மி 1 x 8 சைஸ், பக்கங்கள் 834.

விலை விவரம் :-

முழு காலிகோ கட்டிடம்: ... ரூ. 5—0—0
ரிஜிஸ்டர் தபாற்செலவு ... 1—8—0

கிடைக்குமிடம் :-

1. மானேஜர்,
தருமபுர ஆதீனம், தருமபுரம், மாயூரம்.
பொருளாளர் :-
2. வேளூர், ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம், வைத்தீசுவரன்கோயில்.
3. ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், சீகாழி.
4. ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம், திருக்கடவூர்.
5. ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானம், திருபுவனம்.
6. ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானம், திருப்பனந்தாள்.
7. தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசாரநிலையம், 41, உஸ்மான்ரோடு, தியாகராயநகர், சென்னை—17.


Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram. (Mayuram). 10—4—1955.